www.padippakam.com


# தொழிலாளர் பாதை

DM 2,-

● மாதமிரு முறை இதழ் இதழ் 397 ● 1990 ஆகஸ்ட் 4 வெள்ளிக்கிழமை


**தொழிலாளர் பாதை**

**பின்வரும் தொழிலாளர் பாதை இதழ்களிலிருந்து தொகுக்கப்பட்ட கட்டுரைகள்,**

எண். 34 ஜூலை, 1990 – சோசலிசத் தொழிலாளர் கழகம் இந்தியா –
எண். 396 ஜூலை 22, 1990, எண். 397 ஆகஸ்ட் 4, 1990. – புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் இலங்கை –

# இனவாத யுத்தத்துக்கு எதிராக யூ. என். பி. அரசாங்கத்தினை வெளியேற்ற பொது வேலைநிறுத்தத்துக்கு தயார் செய்!

ஊர்காவற்றுறை பகுதியில் சுமார் 2000 படையாட்களை குவித்து 'மாபெரும்' போராட்டத்துக்கு தயாராகி வருவதாக யூ. என். பி. அரசாங்கம் கூறிவரும் இன்றைய நிலையில் அதன் நெருக்கடி என்றும் இல்லாத விதத்தில் உக்கிரம் கண்டுள்ளது. இதனாலேயே இன, மத மோதுதல்களை கிளறிவிட்டு இரத்தக் களரியை உண்டுபண்ணும் பிரச்சாரங்களில் அரசாங்க வெகுஜன தொடர்பு சாதனங்களும் முதலாளித்துவ பத்திரிகைகளும் ஈடுபட்டுள்ளன.

கடந்த சில தினங்களில் முஸ்லிம், சிங்கள மக்கள் நூற்றுக் கணக்கில் கொலை செய்யப்பட்டது பற்றி அரசாங்கமும், மற்றும் முதலாளித்துவ கட்சிகளும், முதலாளித்துவ பத்திரிகைகளும் முதலைக் கண்ணீர் வடிக்கின்றன. ஆகஸ்ட் 11ல் ஏறாவூரில் முஸ்லீம், இந்து மதத்தினர் நூற்றுக் கணக்கில் மேலும் கொலை செய்யப்பட்டனர் இவை யூ. என் பி அரசாங்கம் புதிய மட்டத்தில் ஆரம்பித்துள்ள இனவாத யுத்தத்தின் பலி எடுப்புக்கள். ஜூன் 11ல் ஆரம்பமான யுத்தத்தில் ஆயுதப் படையினராலும், குண்டர்களாலும் வட—கிழ் மாகாணங்களில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் மக்களின் எண்ணிக்கை 2000ஐ தாண்டியுள்ளது.

திருமலையில் கைது செய்யப்பட்ட டசின் கணக்கான தமிழர்கள் — பெண்கள் குழந்தைகள் உட்பட பகிரங்கமாக நிறுத்தி வைத்து சுட்டுக் கொல்லப்பட்டதாகவும், ஒலுவில் கிராமத்தினைச் சுற்றி வளைத்த சமயத்தில் மட்டும் 47 தமிழர்கள் கொலை செய்யப்பட்டதாயும் யுத்தத்தின் எடுபிடிகளான தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தினர்கள் பாராளுமன்றத்தில் குற்றம் சாட்டினர். முழு கிழக்கு மாகாணமும் இன்று யூ என் பி அரசாங்கத்தினால் இரத்தக் களரியாக்கப்பட்டுள்ளது.

ஆகஸ்ட் முதல் வாரத்தில் இருந்து இலங்கை இராணுவத்தினரின் குண்டு வீச்சுக்கள் பரந்த அளவில் இடம்பெறுவதால் அப்பாவி மக்கள் யாழ் நகரில் இருந்தும் சுற்றுப்புறங்களில் இருந்தும் தொடர்ந்து வெளியேறி வருகின்றனர். சுன்னாகம், மானிப்பாய் போன்ற உள்ளார்ந்த பகுதிகளும் இக்குண்டு வீச்சுக்களில் இருந்து தப்பாததோடு மானிப்பாய் ஆஸ்பத்திரியும் இக்குண்டு வீச்சுக்குள்ளாகியது என்பதை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன ஒப்புக்கொள்ள நேரிட்டுள்ளது.

## பாசிச தொனி

யுத்தங்களில் மக்கள் கொல்லப்படுவது இயற்கை அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. ஹிட்லரின் யுத்தத்தில் கோடிக் கணக்கானோர் கொல்லப்படவில்லையா என்ற பாசிச தொனியில் அமைச்சர் விஜேரத்ன பத்திரிகையாளருடன் பேசியுள்ளார்

இந்தப் பேரழிவினை ஒரு முடிவுக்குக் கொணர சிங்களம் — தமிழ் பேசும் தொழிலாள வர்க்கம் ஒன்றிணைந்து யூ. என் பி. அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கும் போர்த் தயாரிப்புக்களுக்கும் எதிராகக் கிளர்ந்து எழுந்தாக வேண்டும். அந்த எழுச்சி மூலம் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டி, முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசி. இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை நிறுவவேண்டும் வேறு வார்த்தையில் சொன்னால் தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக் காட்டுகின்றது.

(7-ம் பக்கம் பார்க்க)

# அமெரிக்கா மத்திய கிழக்கு ஆக்கிரமிப்புக்கு தயாராகின்றது!

அமெரிக்க ஏகாதிபத்திய ஆளும் வர்க்கம் பிரித்தானிய, பிரான்ஸ் ஏகாதிபத்தியவாதிகள் மட்டுமன்றி கோர்பச்சேவ் அதிகாரத்துவத்தினதும் உதவியோடு ஈராக்குக்கு எதிராகவும் வளைகுடா பிராந்தியத்தினை தமதுபிடிக்குள் வைத்திருக்கும் முகமாகவும் உக்கிரமாக்கியுள்ள இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராகக் கிளர்ந்து எழுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கத்தினை வேண்டுகின்றது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளது ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈராக்கும் உட்பட அரபு நாடுகளது தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களைக் காக்கும் பொருட்டு உலகத் தொழிலாள வர்க்கம் கிளர்ந்து எழுகையில் ஈராக்கின் பிற்போக்கு சதாம் குசேன் ஆட்சியாளர்களுக்கும் அது குவைட்டை கைப்பற்றிய தன் மூலம் உண்டுபண்ணிய ஆத்திரமூட்டல்களுக்கும் அணுவளவும் ஆதரவு அளிக்கக் கூடாது. குசேன் ஆட்சி குவைட்டில் மேற்கொண்ட ஆத்திரமூட்டும் தலையீடானது ஈராக்கிலும் அப்பிராந்தியத்திலும் வளர்ச்சி கண்டுவரும் தொழிலாளர் ஏழைகளின் பிரமாண்டமான எதிர்ப்பினை தடம்புரளச் செய்யவும் தமது வர்க்க ஆட்சியைக் கொண்டு நடாத்தவும் செய்யும் கையாலாகாததனமான பிற்போக்கு வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாகும்

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் மத்திய கிழக்கு யுத்த தயாரிப்புக்கள், ஈராக்கின் இராணுவ ஆட்சியாளரான சதாம் குசேன், குவைட்டை கைப்பற்றியதன் மூலம் இழைத்த ஆத்திரமூட்டல் நடவடிக்கைக்கு எதிராக குவைட் ஆட்சியாளர்களை பாதுகாக்கும் நோக்கில் செய்த பழிவாங்கும் நடவடிக்கை அன்று. அது உலகப் பொருளாதாரத்தினை பங்கீடு செய்யும் மூன்றும் உலக யுத்தத்தினை நோக்கி ஏகாதிபத்தியவாதிகள் புறநிலை ரீதியில் பயணம் செய்து கொண்டுள்ள நிலைமையினுள் மத்திய கிழக்கு எண்ணெய் வளங்களை தம்பிடிக்குள் கொண்டிருப்பதன் மூலம் அந்த மூன்றும் உலக யுத்தத்துக்கு அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் செய்யும் தயாரிப்பில் ஒரு பாகமாகும்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் வளைகுடாப் பிராந்தியத்தில் செய்யும் யுத்தத் தயாரிப்புக்களும் தலையீடும் இரண்டாம் உலக யுத்தக் காலப்பகுதியின் பின்னர் ஒரு போதும் இடம்பெறாததாகும். அமெரிக்காவின் 82ம் விமானத் தாக்குதல் படையும் விமானப் படைப் பிரிவுகளும் ஆகஸ்ட் 7ம் திகதி சவூதி அரேபியாவில் முகாம்கள் அமைத்துக் கொண்டுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் தெரிவித்துள்ளார். இதன்படி 50,000 அமெரிக்கப்படையினர் வரை சவூதி அரேபியாவில் முகாம்களை அமைத்துக் கொள்ளவுள்ளனர் அமெரிக்காவின் ''ஐசனோவர்'' ''இன்டிபெண்டட்'' உட்பட்ட அநேக யுத்தக் கப்பல்கள் அணு ஏவுகணைகளுடன் பாரசீக வளைகுடாவில் காவலுக்கு நிறுத்தப்பட்டுள்ளன. இராணுவ சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பிரித்தானிய, பிரான்ஸ், சோவியத் யுத்தக் கப்பல்களின் எண்ணிக்கை சுமார் 50 ஆகும்.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் ஜனாதிபதி ரூஸ்வெல்ட் தொடக்கம் உலக ஆதிக்கத்தினை வைத்துக்கொள்ளும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் 'திடசங்கற்பத்தினை' வெளிப்படுத்திய ஜோர்ஜ் புஷ் மேலும் தெரிவித்ததாவது,

(2-ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை அகற்று!**

படிப்பகம்

# பொகவந்தலாவை 32 ஆயிரம் தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

ஜூலை மாத இறுதியில் பொகவந்தலாவை பகுதியில்வளர்ச்சி கண்ட தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் பெரும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது.

தோட்டத் தொழிலாளர்களின்மிகவும் அடிப்படையான கோரிக்கைகளின் பேரில் ஜூலை 27ம் திகதி பொகவந்தலாவை குறூப் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இந்நாளில் முழு மாவட்டத்தினையும் சேர்ந்த 32,000 தொழிலாளர்கள் இதில்கலந்து கொண்டனர்.

அவர்கள் முன்வைத்தகோரிக்கைகளாவன:

1. லைன் அறைகள், தண்ணீர் பைப்புக்கள், பிள்ளை மடுவம் உடனடியாகத் திருத்தப்பட வேண்டும்.

2. 18 வயதுக்கு மேற்பட்ட சகல தோட்டத் தொழிலாளர் இளைஞர்களும் தொழில் எதிர்பார்த்திருப்பவர்களாகப் பதிவு செய்யப்படவேண்டும்.

3. பெண் தொழிலாளர்களுக்கு மகப்பேற்று விடுமுறையும், முறையான சிகிச்சை வசதிகளும் வழங்கப்பட வேண்டும்.

4 திருமணமாகி தோட்டத்தினை விட்டு செல்லும் பெண் தொழிலாளிகளுக்கு சட்டப்படி சம்பளத்துடன் கூடிய 14 நாள் விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்பனவாகும்.

இக்கோரிக்கைகளில் 2ம்,3ம், 4ம் கோரிக்கைகளை உண்மையில் தொழிலாளர்கள் ஏற்கனவே வெற்றி கொண்டுள்ள போதிலும் தோட்ட நிர்வாகிகள் அவற்றினை சட்ட விரோதமான முறையில் வழங்காது இருந்து வருகின்றனர்.

ஒரு குடும்பத்துக்கு ஒரு அறையினைக் கொண்ட லயின் வீடுகள். இன்று மாட்டுத் தொழுவத்தின் நிலைக்கு சீர் கெட்டுப்போயுள்ளன. ஆதலால் இவற்றை திருத்தி அமைப்பது பற்றி பிரச்சினையை தொழிலாளர்கள் எந்த விதத்திலும் ஒத்திப்போட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. கறள் பிடித்துப் போயுள்ள தண்ணீர் பைப்புக்களின் பிரச்சினையும் இதுவே

வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஜூலை 3.ம் திகதி தோட்ட நிர்வாகிகளுடனும் ஜனவசத்துடனும் பேச்சுவார்த்தைகள் நடாத்தினர். கடந்த 10 ஆண்டுகளாக இப்பிரச்சினைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளைக் கூட தட்டிக் கழித்து வந்த நிர்வாகிகள், தொழிலாளர்களின் போராட்ட பலத்தினால் பேச்சுவார்த்தைக்கு தள்ளப்பட்டனர். எனினும் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்ட தலைவர்கள், கோரிக்கைகளில் அரைவாசியை வழங்குவதாக நிர்வாகம் அளித்த வாக்குறுதிக்கு அடிபணிந்து, வேலை நிறுத்தத்தினை நிறுத்த உடன்பட்டனர்.

### சமிக்கை

பொகவந்தலாவ தொழிலாளர்கள், இக்கோரிக்கைகளின் அடிப்படையில் போராட்டத்தில் குதித்தமை, வடகிழ் மாகாணங்களில் தமிழ் விடுதலைப் போராட்டத்தினை தோற்கடிக்கும் இனவாத ஒடுக்குமுறை யுத்தத்தில் முதலாளித்துவ ஆளும் வர்க்கம் ஈடுபட்டுள்ள தருணத்திலேயேயாகும் இதன் மூலம் அவர்கள் யுத்த நெருக்கடி எவ்வளவு தான் உக்கிரமடைந்தாலும் அதன் சுமையை நாம் சுமந்து கொள்ளத் தயாரில்லை என்பதை வெளிக்காட்டியுள்ளார்கள் இது தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் மட்டுமன்றி இந்நாட்டின் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி காணும் எதிர்ப்பின் நல்லதோர் சமிக்கையாகும்.

இ. தொ. கா, ஜ. தொ.கா, தேசிய தொழிலாளர் சங்கம் முதலான அமைப்புக்களின் தலைவர்கள் இனவாத யுத்தம் சம்பந்தமாக கடைப்பிடிக்கும் வெளிப்படையானதும், மறைமுகமானதுமான ஆதரவுகள் மூலம், கோடானு கோடி ரூபாய்களை தமிழ் இனச் சங்காரத்துக்கு செலவிடுவதையும் இலட்சோப லட்சம் தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் அடிப்படை வாழ்க்கை வசதிகளு இன்றி நசுக்கப்படுவதையும் ஆதரித்துக் கொண்டுள்ளனர் தொழிலாளர்களின் சம்பளத்தில் இருந்து பாதுகாப்பு நிதிக்காக காசு கழிக்கும் அளவுக்கு நிர்வாகங்கள் முன் வந்ததற்கு துரோகத்தலைவர்களின் இந்த ஆதரவே காரணம் இ. தொ கா தலைவர்களில் ஒருவரான சென்னன் பாதுகாப்பு நிதிக்கு காசு கறப்பதை எதிர்க்கவில்லை ஆனால் மற்றைய எல்லாவற்றிலும் பின்னடிக்கத் தள்ளப்படும் தோட்டத் தொழிலாளர்களிடம் இதற்கு மட்டும் ஏன் முதல்? என்ற கதாவில் சிணுங்கியுள்ளார் சமசமாஜ கம்யூனிச, நவசமசமாஜ, சந்திரசேகரன் தொழிற்சங்கத் தலைவர்களின் நிலைப்பாட்டில் இருந்து எந்த விதத்திலும் வேறுபட்டதில்லை

இந்தப் பிற்போக்கு நிலைப்பாட்டின் காரணமாக இத் தலைவர்கள் அனைவரும் பொகவந்தலாவ போராட்டத்தினை தனிமைப்படுத்தியதன் மூலம் முதலாளித்துவ ஆட்சியைக் கட்டிக் காக்க மீண்டும் ஒரு தடவை உதவியுள்ளனர்.

தொழிலாளர்கள் வெறும் பேச்சுவார்த்தைகளை நிராகரிக்க வேண்டும். முழுத் தொழிலாள வர்க்கத்தினையும் ஒரு பொது வேலைநிறுத்தத்துக்கு அணிதிரட்டுவதன் மூலம் முதலாளித்துவ ஆட்சியை தூக்கி வீசப் போராடு! முதலாளித்துவ இனவாத யுத்தத்துக்கு ஒரு ஆளோ, ஒரு சதமோ, ஒரு துளி இரத்தமோ வழங்காதே! தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் தமிழ் விடுதலைப் போராட்டத்தினையும் காப்பாற்று! இலங்கை தமிழ் ஈழம் ஐக்கிய சோசலிச ஒன்றியத்துக்காக முழுத் தொழிலாள வர்க்கத்தினதும் ஐக்கியத்தினைக் கட்டி எழுப்பு!

இந்தப் போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்காக நாம் சகல வர்க்க நனவு படைத்த தொழிலாளர்களையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் சேர்ந்து, சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியை இலங்கையில் கட்டி எழுப்ப முன்வருமாறு வேண்டுகின்றோம்.

# அமெரிக்கமத்தியகிழக்கு ஆக்கிரமிப்பு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

''ஈராக் உலகின் இரண்டாவது பெரிய எண்ணெய் வளத்தினையும் பத்து இலட்சத்துக்கு அதிகமான ஆயுதப்படைகளையும் கொண்டுள்ள வசதி படைத்த ஒரு சக்தி வாய்ந்த நாடாகும். உலகின் நான்காவது பெரிய இராணுவம் அது எமது நாடு அது பாவிக்கும் எண்ணெயில் அரைப் பங்கினை இறக்குமதி செய்வதோடு நாட்டின் பொருளாதார சுயாதீனம் பெரும் மிரட்டலுக்கு முகம் கொடுத்துள்ளது ...''

1930பதுகளில் இரண்டாம் உலக யுத்தத்திக்கு எட்டிய காலத்தினை ஜோர்ஜ் புஷ் நினைவூட்டியது சும்மா அன்று. அமெரிக்கா யுத்தத்தினை பலப்படுத்துவதும், மத்திய கிழக்கினை அடிமைப்படுத்துவதும், முக்கிய போட்டியாளர்களான ஜேர்மன், யப்பான் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிரான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளது யுத்த தயாரிப்பில் ஒரு பாகம். யுத்த தயாரிப்புக்களில் அமெரிக்க ஆட்சியாளர்களுடன் ஜேர்மன் யப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் கருத்து வேறுபடுவது செர்ன்வது தற்செயலானதல்ல.

தமது பொருளாதார பலத்தினையும், சூழ்ச்சிகளையும் பாவித்து ஜேர்மன், யப்பானிய ஏகாதிபத்தியவாதிகள் அராபிய முதலாளித்துவ ஆட்சியாளர்களிடையே ஆதிக்கத்தினை நிலைநாட்டுவதை அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளால் சகித்துக் கொள்ள முடியாது. ஜப்பானையும் ஜேர்மனியையும் நசுக்கும் ஆட்சியினை மத்திய கிழக்கில் உறுதி செய்வது அமெரிக்க உபாயத்தின் ஒரு பாகமாக உள்ளது. அது அமெரிக்க ஏகாதிபத்தியம், நாட்டினுள்ளும் உலகளாவிய ரீதியிலும் சரிந்து கொட்டுவதால் ஏற்பட்டுள்ள இக்கட்டான நிலையின் ஒரு வெளிப்பாடாகும்.

ஈராக்குக்கு எதிராக தடைவிதிப்பது சம்பந்தமாக யப்பான், ஜேர்மன், அமெரிக்க ஏகாதிபத்தியங்களுக்கு இடையே முரண்பாடுகள் வெளிப்பட்டன. யப்பான் ஏகாதிபத்தியம், பொருளாதாரத் 'தடை' விதிப்பதற்கு 'இணங்கிய போதிலும்' சுயாதீனமாகத் தொழிற்படும் அவசியத்தினைச் சுட்டிக்காட்டியுள்ளது. ஈராக்கின் பிரமாண்டமான கடன் தொகையில் பெரும் பகுதி யப்பான் ஏகாதிபத்தியவாதிகளுடையது. ஈராக்குக்கு 7000 கோடி டாலர்களை யப்பான் கடனாக வழங்கியுள்ளது. அமெரிக்காவுக்கு அடுத்ததாக ஈராக்கின் இரண்டாவது பெரும் எண்ணெய் இறக்குமதியாளன் யப்பான்: யப்பானின் எண்ணெய்த்தேவைகளில் நூற்றுக்கு 70 விதம்வளைகுடாவில் இருந்தே கிடைக்கிறது. ஈராக்குடனான ஏற்றுமதி—இறக்குமதி உடன்படிக்கையின் கீழ் யப்பானியக் கம்பனிகள் 400 கோடி டாலரை, இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. 1989ல் யப்பான் ஈராக்குக்கு 4900 கோடி டாலர்கள் பெறுமதியானவற்றை ஏற்றுமதி செய்து 1200 கோடி டாலர்கள் பெறுமதியானவற்றை இறக்குமதி செய்துள்ளது ஈராக்கிலும், வளைகுடாப் பிரதேசத்திலும் யப்பான் ஏகாதிபத்தியவாதிகள் எங்ஙனம் தங்கியுள்ளனர் என்பதற்கு இப்புள்ளி விபரம் நல்ல எடுத்துக்காட்டு

இத்தோடு ஈராக்கின் இரசாயன ஆயுத தொழிற்சாலைகளை நிறுவுவதில் மேற்கு ஜேர்மன் ஏகாதிபத்திய கம்பனிகள் தொடர்புபட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

### கூச்சல்

ஈராக்குக்கு எதிராக நியூகினியர் அயுதங்களைப் பயன்படுத்துவது பற்றிய ஊகங்கள் முதலாளித்துவ பத்திரிகைகளில் வளர்சி கண்டுள்ளன. ஈராக் இரசாயன ஆயுதங்களை கொண்டுள்ளது என்ற கூச்சலின் இலக்கு ஒன்றே ஒன்றுதான். ஒரு ஒடுக்கப்படும் அரைக்காலனித்துவ நாட்டின் மக்களின் மீது நியூகினியர் ஆயுதங்களைப் பரீட்சிப்பதற்குச் சாதகமான ஒரு பொதுஜன அபிப்பிராயத்தினைச முன்கூட்டியே சிருஷ்டிப்பதே நோக்கம்.

1920பதுகளில் மசகு எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டதில் இருந்து இப்பிராந்தியத்தில் மிகவும் கேவலமான அரசியல், இராணுவ சலையீடுகள் மூலம் ஏகாதிபத்தியவாதிகள் ஆதிக்கத்தைப் பேணிக்கொண்டனர். இதன் முதல் நடவடிக்கையாக 1940பதுகளில் பலஸ்தீன மக்கள் பாலஸ்தீனத்தில் இருந்து கலைக்கப்பட்டு சியோனிச இஸ்ரேல் அரசு அமைக்கப்பட்டது ஏகாதிபத்தியத்தவைகளுக்கு ஏற்ப பிராந்தியத்தினை கூறுபோடுவதும் இடைவிடாது மோதுதல்களை சிருஷ்டிப்பதும் இடம் பெற்றன

ஏகாதிபத்திய கொலைகார ஒடுக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ச்சி வெடித்ததும் ஏகாதிபத்தியவாதிகளது அங்கீகாரத்துடனும் சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் முண்டு கோலின் உதவியுடனும் எகிப்து, ஈராக், லிபியா முதலான நாடுகளில் 'தேசிய முதலாளித்துவ' ஆட்சியாளர்கள் ஆட்சியில் அமர்த்தப்பட்டனர். எனினும் ஏகாதிபத்திய நெருக்கடியின் அபிவிருத்தியில் மத்தியில் இந்த தேசிய முதலாளிகள் ஏகாதிபத்தியவாதிகளின ஏஜன்டுகளாகப் வெளிப்பட்டனர் ஈராக்கின் சதாம் ஹுசைன் இதில் ஒரு ஆட்சியாளர்.

ஈராக்கில் மட்டுமன்றி பிராந்தியத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் கிளர்ச்சிகளுக்கு எதிராக ஹுசேன் கட்சியாளர்கள் செயற்பட்டனர் என்பது 1980ல் ஈரானுடன் யுத்தத்தில் குதித்ததன் மூலம் வெளிப்பட்டது. 8வருடகால ஈரான் —ஈராக் யுத்தமும் உலக நெருக்கடியும் ஈராக். ஆட்சியாளர்களை பெரும் நெருக்கடி சுழியில் தள்ளியுள்ளது. இலட்சோப இலட்சம் இராணுவம், ஈராக் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் மேல் பெரும் சுமையை திணித்துள்ளது. ஹுசேன் ஆட்சி கம்யூனிச விரோத ஆட்சியாகும். முதலாளித்துவச் சார்பு வேலைத்திட்டத்தினை கொண்டிருந்த தடை செய்யப்பட்ட ஈராக் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்களும், அங்கத்தினர்களும் ஹுசேன் ஆட்சியில் படுகொலை செய்யப்பட்டனர் இதன் மூலம் தொழிலாள வர்க்கத்தின் சிறிய எதிர்ப்பினையிட்டும் அது கொண்டிருந்த அச்சத்தினை வெளிக்காட்டிற்று.

குவைட் ஆக்கிரமிப்பு, உக்கிரம் கண்டு வரும் நெருக்கடி
(7-ம் பக்கம் பார்க்க)

www.padippakam.com



# பு.க.க.வின் இனவாத யுத்த எதிர்ப்புக் கூட்டம்:

யூ. என். பி. அரசாங்கத்தின் இனப்படுகொலை யுத்தத்தினைக் கண்டித்தும் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவளித்தும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஜூன் 11ம் திகதி கொழும்பு புதிய நகர் மண்டபத்தில் பொதுக் கூட்டம் ஒன்றை நடாத்தியது: இந்தப் பிற்போக்கு யுத்தத்துக்கு எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் இலக்கில் நடை பெற்ற அக்கூட்ட பேச்சுக்கள் வருமாறு:

## "நாம் சிங்கள முதலாளித்துவ இராணுவத்தினை தோல்வியடையச் செய்யும் நிலைப்பாட்டினை எடுக்க வேண்டும்."

— தோழர். சுனில்

"நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்; யூ. என்: பி. அரசாங்கம் ஒடுக்கப்படும் தமிழ் மக்களுக்கு எதிராகப் புதுப்பித்துள்ள இந்த யுத்தத்துக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் கூட்டத் தொடரில் முதல் கூட்டம் இது.

"ஜூன் 11ல் யுத்தம் ஆரம்பமாகி சரியாக இன்றுடன் ஒரு மாதம் முடிந்துவிட்டது. இதே சமயத்தில் ஆயிரக் கணக்கான அப்பாவிகளும் அத்துடன் தமிழ் விடுதலைப் போராளிகளும் சிங்கள பேரின முதலாளி வர்க்க இராணுவத்தினால் கொல்லப்பட்டுள்ளனர். இலட்சக்கணக்கான தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் வீடுவாசல்களையும் காணிநிலங்களையும் கைவிட்டு அகதிகள் முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர்.

"கொழும்புக்கும் வடக்கு கிழக்குக்கும் இடையேயான சகல போக்குவரத்துக்களும், தொடர்புகளும் துண்டிக்கப்பட்டுள்ளன. உணவு, மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம் எல்லாம் துண்டிக்கப்பட்டுள்ளன.

"இந்த இரத்தம் தோய்ந்த மோதலை தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் மீது திணிப்பதற்கான முதல் பொறுப்பு விடுதலை புலிகளைச் சார்ந்தது. இந்தியப் படைகள் வாபஸானதன் பின்னர் யூ. என். பி, அரசாங்கம் நூற்றுக்கணக்கான பொலிஸ் நிலையங்களை மீண்டும் ஸ்தாபித்ததோடு, இராணுவ முகாம்களையும் நிறுவியது; இதன் மூலம் சிங்கள பேரின முதலாளி வர்க்கத்தின் ஆளுமையைஓரளவுக்கு நிறுவிக் கொண்டது; விடுதலைப் புலிகள் யூ. என். பி. அரசாங்கத்துடன் நடாத்திய பேச்சுவார்த்தையே முதலாளித்துவ அரசு அதனது ஆளுமையை வடக்கிலும் கிழக்கிலும் மீண்டும் நிலைநாட்டுவதற்கான நிலைமைகளைச் சிருஷ்டித்தது.

"அத்தோடு சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. தலைவர்கள் தொழிற்சங்க அதிகாரத்துவங்களுடன் சேர்ந்து முழுமைய அரசியல் ஆதரவு மூலம் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை நசுக்கவும், அத்தோடு வடக்கில் மார்க்ஸிச ஒடுக்கப்படும் [illegible] போராட்டத்தினை நசுக்கவும் யூ. என். பி. அரசாங்கத்தின் கைகளைப் பலப்படுத்தியது.

"இந்திய இலங்கை உடன்படிக்கையின் பிற்போக்கு இலக்குகள் முற்றிலும் தோல்வி கண்ட நிலையிலேயே யூ. என். பி. அரசாங்கம் யுத்தத்தினைப் புதுப்பித்தது. தமிழீழ விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து தமிழ் குட்டி முதலாளித்துவ அமைப்புக்களும் அத்தோடு சமசமாஜ, கம்யூனிச, நவசம சமாஜ, இ. தொ. கா. கட்சிகளும் பிற்போக்கு இந்திய — இலங்கை உடன்படிக்கைக்கு ஆதரவளித்தன;

யூ. என்.பி, அரசாங்கத்தினை யுத்தத்துக்கு தள்ளிய முக்கிய காரணிகள், சிங்கள பேரின முதலாளி வர்க்கத்தின் ஒடுக்குமுறைக்கு எதிரான எதிர்ப்பின் வளர்ச்சியும், தென் பகுதியில் உலகவங்கி திட்டங்களுக்கு எதிரான தொழிலாளர்—விவசாயிகளின் போராட்டங்களின் அபிவிருத்தியுமே.

### உடனடி இலக்கு

"இலங்கை முதலாளித்துவ ஒற்றையாட்சி இனவாத அரசினைக் காப்பதை இந்த யுத்தம் பிரதான உள்ளடக்கமாகக் கொண்டுள்ளது: இரண்டாம் உலக யுத்தத்தினை தொடர்ந்து 1947-48 ஏகாதிபத்தியத்தினால் திணிக்கப்பட்ட சட்ட விரோத அரச அமைப்பினை பேணுவது இதன் ஓர் அங்கமாகும். இதன் உடனடி இலக்கு முதலாளித்துவ அரசினைக் காப்பதும், தெற்கில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களை இரத்த வெள்ளத்தில் நசுக்குவதுமே.

"தெற்கில் பிரேமதாச அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு ஒடுக்கப்படும் மக்களதும், தொழிலாள வர்க்கத்தினதும் எதிர்த்தாக்குதல் வளர்ச்சி கண்டு வருகின்றது. இலங்கைப் போக்குவரத்துச் சபையை ஜூன் 1ம் திகதியுடன் தனியார் மயமாக்கும் திட்டம் தொழிலாளர்களது பொதுவில் மக்களதும் எதிர்ப்பினைச் சம்பாதித்துள்ளது. தொழிலாள வர்க்கத்தினையும் தமிழ் விடுதலைப் போராட்டத்தினையும் தாக்கும் அதே வேளையில் அரசாங்கம் குட்டி முதலாளித்துவத்தின் ஒரு தட்டினரை இந்த தமிழர் விரோத சோவினிசத்தின் மூலம் தன்பக்கம் சார்த்துக் கொள்ள முயல்கிறது."

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளின் துரோகிகள் யூ.என்.பி அரசாங்கத்தின் தமிழர் விரோத யுத்தத்தினை, சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான ஒரு யுத்தம் என் பூசி மெழுகும் வேலையில் ஈடுபட்டுள்ளதைக் கண்டனம் செய்கையில் தோழர். சுனில் கூறியதாவது: யூ. என். பி. அரசாங்கத்தின் 'ஜனநாயகம்' பற்றி தொழிலாளர்களும், ஒடுக்கப்படும் மக்களும் நன்கு அறிவர். 1980ல் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்ததையும், ஆயிரக் கணக்கான தமிழர்களை படுகொலை செய்ததையும், ஜே வீ. பி.யை நசுக்குவதாகக் கூறி கிராமிய மக்களை ஆயிரக்கணக்கில் கொன்றதையும் அவர்கள் அறிவர். மாத்தறை, கொறலவெல, கண்டி. குளியாபிட்டிய முதலிய இடங்களில் முழு கிராமிய ஆண்களும் துடைத்துக்கட்டப்பட்டனர். இவை யூ. என் பி. அரசாங்கத்தின் 'ஜனநாயக' நடவடிக்கைகளில் ஒரு சில மட்டுமே.

"தோழர்களே, நாம் இந்தக் கூட்டத்தினை வெறும் பார்வையாளர்கள் என்ற கோதாவில் நடாத்தவில்லை; மார்க்சிசத்தினையும் ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டினையும் அடிப்படையாகக்கொண்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் முன்நோக்கு முழுமனே ருசுப்படுத்தப்பட்டுள்ளது.

"தொழிலாள வர்க்கத்தின் முன்னேற்றமான பகுதியினர் முழுத் தொழிலாள வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டுவதற்கான நிலைமைகள் இன்று உருவாகியுள்ளன" என்றார்.

— 5ம் கலம் தொடர்ச்சி

வர்க்கத்துக்கும் இலங்கை முதலாளி வர்க்கத்துக்கும் இடையேயான ஓர் உடன்பாடாகும்

"இந்த ஏகாதிபத்திய திணிப்பு தீர்வுக்கும் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்கும்—தமிழ் தேசியஇனத்துக்கும் அத்தோடு சிங்கள தேசிய இனத்துக்கும்—எதுவித தொடர்பும் இருக்கவில்லை; மேலும் சிறுபான்மை தமிழ் தேசிய இனம் பெரும்பான்மை சிங்களவர்களுடன் பலாத்காரமாக இணையும்படி நெருக்கப்பட்டது. ஏகாதிபத்திய ஆளுமையின் கருவியோ சிங்கள முதலாளித்துவ ஒற்றையாட்சி அரசுக்கு எதிராக வளர்ந்து எழுந்துள்ள தமிழ் தேசிய இனக் யுத்தத்தின் பின்னைய ஏகாதிபத்திய தீர்வுகளுக்கு

(6-ம் பக்கம் பார்க்க)

## 'தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டு'

— தோழர். விக்கிரமசிங்க

பு.க.க. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக மத்திய குழு உறுப்பினர் தோழர் — நந்த விக்கிரமசிங்க கூறியதாவது: "இன்றைய நிலையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான முதலாளி வர்க்கத்தின் இந்த யுத்தத்துச்குஒரு சதமோ, ஒரு ஆளோ அல்லது ஒரு துளி இரத்தமோ கொடுக்க வேண்டாம் என தொழிலாள வர்க்கத்தினையும்,ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றது. தொழிலாள வர்க்கம் அதனது முழு கைத்தொழில், அரசியல் சக்தியை அணிதிரட்டுவதன் மூலம் யுத்தத்தின் சுமை தம் மீது திணிக்கப்படுவதை எதிர்க்க வேண்டும். இந்த யுத்தத்தில் தொழிலாள வர்க்கத்தின் எதிரிகள் முதலாளிவர்க்கமும், அதன் அரசாங்கமும் அதன் அனைத்துலக ஏகாதிபத்திய ஆதரவாளர்களுமே. தொழிலாள வர்க்கம் இந்த யுத்தத்தினை முதலாளி வர்க்கத்தினை புரட்சிகரமான முறையில் தூக்கிவீசவும் தொழிலாள வர்க்கத்தின் சர்வாதிகாரத்தினை நிலைநாட்டவும் பயன்படுத்த வேண்டும். முதலாளி வர்க்கத்தினை எதிர்த்துப் போரிடும் தமிழ் தேசிய இனம் தொழிலாளி வர்க்கத்தின் சகாவாகும்.

யுத்தம், க்ளாஸ்விட்ஸ் குறிப்பிட்டது போல் அரசியலை இராணுவ வழியில் தொடர்வதாகும். தமிழ் தேசிய இனத்துக்கு எதிரான கொழும்பு ஆட்சியாளர்களின் யுத்தம். 1947ல் இலங்கை முதலாளி வர்க்கத்தின் கரங்களுள் ஆட்சி கையளிக்கப்பட்ட நாளில் இருந்து தமிழ் தேசிய இனத்துக்கு எதிராகக் கடைப்பிடிக்கும் ஒடுக்குமுறைக் கொள்கையின் தொடர்ச்சியாகும். இந்த ஆட்சி கைமாற்றம் — அந்தக் காலத்தில் இடம்பெற்ற பிரமாண்டமான புரட்சிகர எழுச்சியின் எதிரில் இடம் பெற்ற ஓர் தீர்வாகும்.

"பலவீனமான சிங்கள முதலாளி வர்க்கம் போர்குணம் மிக்க இலங்கைத் தொழிலாள வர்க்கத்தினை அடக்கிவைக்கும் அவசியத்திற்கு முகம் கொடுத்தது. இதனால் பெரும்பான்மை சிங்கள குட்டி முதலாளி வர்க்கத்திடையே தமிழ் சிறுபான்மையினருக்கு எதிராக இனவாதத்தினை தூண்டிவிடும் ஒரு கொள்கையை கடைப்பிடித்தது. இக்கொள்கை: 1948ன் கோட்டத் தொழிலாளர்களின் வாக்குரிமை பறிப்பு 1956ன் சிங்களம் மட்டும் சட்டம், 1965ன் சிறிமா — சாஸ்திரி உடன்படிக்கையை உள்ளடக்கியது. இதனால் இலட்சக்கணக்கான தோட்டத் தொழிலாளர் இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டதோடு 1972ல் ஒரு ஒடுக்குமுறை அரசியல் சட்டமும் திணிக்கப்பட்டது.தமிழ்தேசிய இனத்தினருக்கு எதிராக தொடர்ச்சியான இனக்கலவரங்களும் படுகொலை யுத்தங்களும் இடம்பெற்றன. எனவே தான் தமிழ் தேசிய இனத்தினைப் பொறுத்தமட்டில் இது வோர் முற்போக்கான, ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தம்.

### போல்ஷிவிக் கட்சி

"1915ல் போல்ஷிவிக் கட்சியின் பேர்னர் மகாநாட்டில் யுத்தம் சம்பந்தமாக —நியாயமான பாதுகாப்பு யுத்தம் சம்பந்தமாக ஒரு விசேட பந்தியைக் கொண்ட ஒரு பிரேரணை நிறைவேற்றப்பட்டது.அதுஒரு யுத்தம் "முடியாட்சிக்கும் நிலமானித்துவத்துக்கும் எதிரான ஒரு நீண்ட தொடர்ச்சியாக தேசிய இயக்கத்தினைக் கொண்ட தேசிய ஒடுக்குமுறையை தூக்கி வீசும்" யுத்தமாக இருந்தால் அது நியாயமானது எனக் சுட்டிக்காட்டியது. சோசலிசமும் யுத்தமும் என்ற பிரசுரத்தில் லெனின் சினோவியோவுடன் சேர்ந்து இதே கருத்தினையே வெளியிட்டார்.

"இந்த யுத்தத்தில் எமது கொள்கை, புரட்சிகர மார்க்சிசத்தின் கொள்கைகளை தொடர்ந்து கடைப்பிடிப்பதே தேசிய விடுதலைப் போராட்டங்கள் சம்பந்தமாக மட்டுமன்றி நான்காம் அகிலத்தினால் சுட்டிக் காட்டப்பட்டது போல் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய தீர்வுகள் சம்பந்தமாகவும் ஆகும்... நான்காம் அகிலத்தின் இந்தியப் பகுதியானபோல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி, இந்தியத் துணைக் கண்டத்தில் நிறுவப்பட்ட அரச அமைப்பானது முன்னேறிக் கொண்டுள்ள சோசலிசப் புரட்சிக்கு எதிரான எதிர்ப்புரட்சி தயாரிப்பு எனக் குறிப்பிட்டது.

"இன்றைய இந்திய அரசானது பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளதும், இந்திய முதலாளிகளினதும் கூட்டு நலன்களின் காப்பாளர் ஆக இருந்து வருகின்றது. இவற்றுக்கிடையே பிரித்தானிய ஏகாதிபத்தியமே ஆளுமை நிறைந்த பங்காளராக உள்ளது. இந்தியாவில் இடம் பெற்றது, பிரித்தானிய ஆட்சியில் இருந்து சுதந்திரத்துக்கான இடைமருவல் அன்றி, ஏகாதிபத்தியத்தின் நேரடி ஆட்சியில் இருந்து மறைமுகஆட்சிக்கான கைமாற்றமே;

"இந்திய போல்ஷிவிக் — லெனினிஸ்ட் கட்சி, 1948ம் ஆண்டு சுதந்திர சட்டத்துக்கு எதிராக வாக்களித்தது. அச் சட்டம் பிரித்தானிய முதலாளி

— 3ம் கலம் பார்க்க

www.padippakam.com



# லியோன் ட்ரொட்ஸ்கி படுகொ...

நான்காம் அகிலத்தின்
அனைத்துலகக் குழுவின்
தத்துவார்த்த 'போர்த்
)இன்டர்நஷனல்' 'சஞ்சிகையின்
990 ஜனவரி — ஜூன் இதழ்
வளியாகியுள்ளது. அதன்
ூசிரியத் தலையங்கம் இங்கு
பிரசுரமாகிறது.

இவ்வாண்டு ஆகஸ்ட் 20-ம்
கதி, வர்க்க நனவு படைத்த
அனைத்துலகப்பாட்டாளி வர்க்
ம், இருபதாம் நூற்றாண்டின்
கப் பயங்கரமான அரசியல்
ற்றங்களில் ஒன்றானலியொன்
.ரொட்ஸ்கி சோவியத் இரக
யப் பொலிசான ஜீ. பீ. யூ;
னால் படுகொலை செய்யப்பட்
.தை நினைவு கூரும்.

லியொன் ட்ரொட்ஸ்கி படு
காலை 1917 அக்டோபர் புரட்
க்கு தலைமைதாங்கிய போல்
விக் தலைவர்களை உடல் ரீதி
ல் ஒழித்துக்கட்டும் ஸ்டாலி
ச அதிகாரத்துவத்தின் இரத்
ம் தோய்ந்த இயக்கத்தின்
.ச்சக் கட்டமாக விளங்கிற்று;
ாஸ்கோவில் 1936 ஆகஸ்டில்
தாடங்கிய முதலாவது மனித
வட்டை பொய் வழக்குகளுக்
ம் ட்ரொட்ஸ்கியின் படு
காலைக்கும் இடையேயான
ான்கு வருடங்களின் பின்னர்
சாவியத் யூனியனில் மார்க்சி
த்தின் ஒவ்வொரு முக்கிய
ரதிநிதியும் கொலை செய்யப்
ட்டனர். தொலைவில் இருந்து
:டாலினின் வேலையை மெச்
ப பாசிச சர்வாதிகாரி மூசோ
னி, தானோ அல்லது ஹிட்ல
ரா அவ்வளவு தொகையான
ம்யூனிஸ்டுகளை கொலைசெய்ய
ில்லை எனக் கருத்து வெளி
ட்டான்.

இரண்டாம் உலக யுத்தத்
ின் முதல் வருட காலத்தில்
)டம்பெற்ற ட்ரொட்ஸ்கியின்
ரணம், தொழிலாள வர்க்கத்
ுக்கு ஒரு பேரழிவுமிக்க தாக்
தலை தொடுத்தது. இது
பால்ஷிவிக் கட்சி தோன்றிய,
ார்க்ஸ், எங்கேல்சின் நிச தத்
,வார்த்த மரபுரிமைகளில்
ூழமாக வேருன்றி நின்ற, ஒரு
ிரகாசம்மிக்க அரசியல் கலாச்
ாரமான 'பழம்' மார்க்சிசத்
ின் கடையியும், மிகப் புத்தி
ாதுரியமும்மிக்க பிரதிநிதியும்
ரட்சிகர அனைத்துலகவாதியு
ான ஒருவரை அரசியல் அரங்
ில் இருந்து அடித்துச் செ...
து.

படுகொலை இடம்பெற்ற
நரகாவமோ ஏகாதிபத்தியத்
ுக்கும் அதன் ஸ்டாலினிச
டிவருடிகள் இரண்டிற்கும்
.ரொட்ஸ்கி ஏற்படுத்திய
ரண பீதியை எடுத்துக் காட்
.யது. ஹிட்லர், ஸ்டாலின்
தாடக்கம் ரூஸ்வெல்ட் வரை
லான அனைத்துலகப் பிற்
பாக்கின் சகல பிரதிநிதிகளும்
த்தத்தினால் உருவாக்கப்
ட்ட துவரங்கள், 1917ல்
பான்று ட்ரொட்ஸ்கியை ஒரு
ரசியல் நாடு கடந்து வாழ்
வர் என்பதிலிருந்து உலக
சாசலிசப் புரட்சியின் மக்கள்
லைவராக... பரிணமம் அடை
ச் செய்யலாம் என அஞ்சினார்
ூ.

இரண்டாம் உலக யுத்தம் வெடிப்பதற்கு ஒரு சில நாட்களுக்கு முன்னர் அனைத்துலகப் பத்திரிகைகள் ஹிட்லருக்கும் ஜேர்மனிக்கான பிரான்சிய தூதுவர் கெனலோன்ரேக்கும் இடையே இடம்பெற்ற ஒரு சம்பாசணையின் சுருக்கத்தை வெளியிட்டன. ஹிட்லரின் கோபம் நிறைந்த மிரட்டல்களுக்கு கெனலோன்ரே பதிலளிக்கையில் யுத்தம் ஏற்படுமானால் நிச வெற்றியாளன் ட்ரொட்ஸ்கி என்பதை திருபிக்கும் என்பதை உணரவில்லையா எனக் கேட்டார். இந்த வார்த்தைகளைக் கேட்டு வலிபிடித்த ஹிட்லர் "எனக்குத் தெரியும். ஆனால் பிரான்சும், பிரிட்டனும் போலந்துக்கு செயற்படும் பூரண சுதந்திரம் கொடுத்தது ஏன்?" எனக் கத்தினான்.

இந்தச்சம்பாசணையைஆய்வு செய்கையில் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டதாவது: "அவர்கள் இருவரும் — கொலோந்தரேயும் ஹிட்லரும்—ஐரோப்பா



லியொன் ட்ரொட்ஸ்கி

வின் மேல் முன்னேறிக் கொண்டுள்ள காட்டுமிராண்டித்தனத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றனர். அதே சமயம் அவர்களில் எவரும் தங்கள் காட்டுமிராண்டித்தனம் சோசலிசப் புரட்சியினால் தோற்கடிக்கப்படும்என்பதைசந்தேகிக்கவில்லை. உலக மூதலாளித்துவ நாடுகள் அனைத்தினதும் ஆளும் வர்க்கங்களது இன்றைய விழிப்பு நிலை அத்தகையதாக உள்ளது.''

ஹிட்லரையும், 'ஜனநாயக' ஏகாதிபத்தியவாதிகளைக் காட்டிலும் ட்ரொட்ஸ்கியை பற்றி பெரிதும் அஞ்சியோர் ஸ்டாலினும் அவனது கிரேம்ளின் கொள்ளையர் கும்பலுமே; ட்ரொட்ஸ்கி உயிருடன் இருக்கும் வரை அவர் அக்டோபர் புரட்சியின் வேலைத்திட்டத்தினையும், இலட்சியங்களையும் தொடர்ந்தும் கடைப்பிடிப்பதோடு மட்டுமன்றி, சோவியத் மக்கள் ருஷ்யப் புரட்சியின் சவக்குழி தோண்டியான ஸ்டாலினின் அதிகாரத்துவ கொடுங்கோன்மையை வெறுத்துக் கொதித்து எழுவர். ஸ்டாலின் முன்னைய 17 வருடங்களாக ட்ரொட்ஸ்கியை வாய்மூட வைக்க அவரது சகாக்களை படுகொலை செய்தும், கட்சியில் இருந்து நீக்கியும், நாடுகடத்தியும், அவரது சோவியத் குடியுரிமையை தடைசெய்தும், அவரது சக சிந்தனையாளர்களையும் பிள்ளைகளையும் படுகொலை செய்தும் எடுத்த முயற்சிகள் அனைத்தும் பிழைத்துப் போயின. ஸ்டாலினின் ஆயுதக் குகத்தில் ஒரு கொலைஞனைக் கொண்டு தாக்குவதே எஞ்சிக் கிடந்தது. அந்தக் குற்றத்தினை ஒழுங்கு செய்யும் பொறுப்பு ஜீ. பீ. யூ.வின் ஒரு விசேட பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டது. அது தனது தொழிற்பாட்டுக்கு முழு சோவியத் அரசினதும் வளங்களைக் கொண்டிருந்தது. ட்ரொட்ஸ்கியை படுகொலை செய்யும் சதியில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஈடுபட்ட ஒரு தொகுதி ஏஜன்டுகளில் கொலைகுள் றேமன் மக்காடர் டெல் றியோவும் ஒருவன். இறுதித் தாக்குதல் தொடுக்க கொலைக் கும்பல் தயாராகி வந்த அதே வேளையில் உலகம் பூராவும் உள்ள ஸ்டாலினிசக் கட்சிகள் இந்தப் படுகொலைக்கு அவசியமான அரசியல் சூழ்நிலையை உருவாக்க தீவிரமாக உழைத்தன. ஒவ்வொரு ஸ்டாலினிசக் கட்சியினதும் பத்திரிகைகள் ட்ரொட்ஸ்கிக்கு எதிரான சேறடிப்புக்களாலும் கண்டனங்களாலும் நிரம்பி வழிந்தது. படுகொலைக்கு முன்னான இறுதி வாரங்களில் இது வெறிபிடித்து அதிகரித்தது.

கொலை அமுல் செய்யப்பட்டதன் பின்னர் ஸ்டாலினிசப் பத்திரிகைகள் அவரின் பணிகளை பாராட்டிய அதே வேளையில் மக்காடரை ஒரு 'மனமுடைந்த ட்ரொட்ஸ்கிவாதி'யாக காட்டின. பிரித்தானிய கம்யூனிஸ்ட் கட்சியின் வெளியீடான 'டெயிலி வேர்க்கரின்' பிரதிபலிப்பு விசித்திரமானது. 1940 ஆகஸ்ட் 23ல் அது 'லியொன் ட்ரொட்ஸ்கியின் மரணத்துடன் எதிர்ப்புரட்சி அதன் தலைசிறந்த ஒரு அமைப்பாளரையும் பேச்சாளரையும் இழந்துவிட்டது. அவரின் ஸ்டாலின் வெறுப்பு அணைகடந்து, அவர் நாற்றமெடுத்தார். மாஸ்கோ வழக்குகளில் அவர் ஒருதேசத்துரோகியாகநிருபிக்கப்பட்டார். சோசலிச தாய் நாட்டினை கூறுபோடப்பட்ட சோவியத் யூனியனின் மிச்ச சொச்சங்களில் ஒரு பாசிசக் குடியானவன் அதிகார குத்தகைக்காக காட்டிக் கொடுக்க தயாரானார்.'' என்றது.

ட்ரொட்ஸ்கி கொலை செய்யப்பட்ட போதிலும் அவரின் அரசியல் பரம்பரைச் சொத்தினை ஸ்டாலினிச அதிகாரத்துவத்தினால் அழித்துவிடமுடியவில்லை. நம்பமுடியாத தடைகளின் முன்னிலையில் ட்ரொட்ஸ்கி நான்காம் அகிலத்துக்கான கோட்பாட்டு, அரசியல், அமைப்பு அத்திவாரத்தினை இடுவதில் வெற்றி கண்டார். தனது சொந்த வாழ்க்கையினை பிரதிபலிக்கும் முறையில் அவர் நான்காம் அகிலத்தினை அமைக்கப்போராடுவதே புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்திற்கு தனது மிகவும் முக்கியமான பங்களிப்பாகும் என ட்ரொட்ஸ்கி கருதினார். இந்த தீர்ப்பு, சந்தேகத்துக்கிடமற்ற முறையில் சரியாக விளங்கிற்று. அக்டோபர் புரட்சியின் தயாரிப்பு, அமைப்புக்களில் ட்ரொட்ஸ்கியின் பாத்திரமும்பின்னர் செஞ்சேனையை அமைப்பதிலும், தலைமை தாங்குவதிலும் ஆற்றிய பாத்திரமும் வரலாற்று அளவு கடந்தவை என்பது நியாயமான சர்ச்சைக்கு அப்பாற்பட்டவை உண்மையில் முதலாவது தொழிலாளர் அரசினை நிறுவுவதிலும் பாதுகாப்பதிலும் லெனினைத்தவிர ட்ரொட்ஸ்கியின் எட்டத்திலும் நிற்கக் கூடிய பாத்திரம் ஆற்றியவேறு புள்ளி கிடையாது.

மேலும் 1917ல் லெனின் இருந்ததால் 1917ல் அக்டோபர் புரட்சியின் வெற்றி ட்ரொட்ஸ்கியில் தங்கியிருந்ததா இல்லையா என்பது விவாதிக்கத்தக்கது. அக்டோபர் 24—25, 1917ல் போல்ஷிவிக்குகளின் துரிதமான வெற்றி — ஸ்டாலினுடைய பிரகடனம் செய்துவிட்டு பின்னர் 1924ன் தொடக்கத்தில் அதற்காக வருந்திய — ட்ரொட்ஸ்கியின் திபுணத்துவம் வாய்ந்த உபாயத்தினைய சார்ந்தது. தற்காலிக அரசாங்கத்தினைத் தூக்கி வீசுவதன் அமைப்பு வேலைகள் கெட்டித்தனம் குறைந்த ஒரு தலைவரினால் வழிநடாத்தப்பட்டிருப்பிலும் கூடச் சாத்தியமாகி இருக்கும். சலசமயம் கணிசமான அளவு நிச்சயம் இன்றியே அதையே செஞ்சேனையின் ஸ்தாபிதம், ஏகாதிபத்தியஆதரவுபடைத்த எதிர்ப்புரட்சி மீதான அதன் வெற்றிக்கும் கூறமுடியும்.

ஆனால் நான்காம் அகிலத்தின் சிருஷ்டி ஒரு முற்றிலும் வேறான வரலாற்று முக்கியதுவம் வாய்ந்தது. அதனை லெனின் போல்ஷிவிக்கட்சியை சிருஷ்டித்தமைக்கு மட்டுமே ஒப்பிடமுடியும். ட்ரொட்ஸ்கி, வரலாற்றுத் தொடர்ச்சிமார்க்சிசச் சங்கிலியில் ஏக, பதிலீடு செய்ய முடியாத மனித தொடுவையை பிரதிநிதித்துவம் செய்தார். அனைத்துலகத் தொழிலாள வர்க்கத்தின் பேரழிவு மிக்க தோல்விகளின் சமயத்திலும் ஒரு சக்திவாய்ந்த அரசின் வளங்களை மட்டுமன்றி அக்டோபர் புரட்சியின் பெருமைகளையும் ஆயுதமாக கொண்ட ஒரு அதிகாரத்துவத்தின் கரங்களில் மார்க்சிசம் பயங்கரமான முறையில் இழிவுபடுத்தப்பட்ட வேளையிலும் ட்ரொட்ஸ்கி பயங்கரமாக தனிமைப் படுத்தப்பட்ட நிலைமைகளின் கீழும் மார்க்சிசத்தின் கோட்பாட்டு அரசியல் மரபுரிமைகளைப் பேண வேண்டியிருந்தது. உறுதிமிக்க விஞ்ஞான பூர்வமான புறநிலையுடன் ட்ரொட்ஸ்கி அக்டோபர் புரட்சியின் சீரழிவுக்கான காரணிகளை விளக்கினார், வரலாற்றின் மாபெரும் புதிரான சோவியத் யூனியனின்முரண்பாட்டுத் தன்மையை ஆய்வு செய்தார்.

ட்ரொட்ஸ்கியின் எழுத்துக்களதும் வேலைத்திட்டத்தினதும் அதிசயிக்கத்தக்க விளைவினை ஒருவர் கணக்கிலெடுக்கும் இடத்தே ட்ரொட்ஸ்கியின் கோட்பாட்டு வேலைகளின் உயர் மதிப்பினைச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும். அவர்களின் வேலைகளின் ஞாபகார்த்த, நீடித்து நிலைத்திருக்கும் பண்புகளில் குறைகாணுமலே மார்க்ஸ், எங்கேல்ஸ், லெனினின் அரசியல் ஆக்கங்கள் எல்லாம் அவர்களது காலம், திட்டவட்டமான வரலாற்று அமைப்பு, அவர்களின் ஆக்கங்கள் மலர்ந்த வர்க்கப் போராட்டத்தின் கட்டத்தின் முத்திரையைக் கொண்டுள்ளன எனச் சொல்ல முடியும். ஒரு பொது அர்த்தத்தில்அவை உண்மையில்ட்ரொட்ஸ்கிக்கும் — கூடச் சரியானதே. இன்னும் ட்ரொட்ஸ்கியின், ஆக்கங்களைப் பொறுத்தமட்டில் 'காலங் குறிக்கப்பட்ட' ஒன்றுமில்லை. அவரது 'காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி' 54 ஆண்டுகளுக்கு முன்னர் அல்லது இடைமருவு வேலைத்திட்டம் (நான்காம் அகிலத்தின் ஸ்தாபக ஆவணம்) 52 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்டது என நம்புவது கடினம். இவை சமகால அரசியல் ஆவணங்களாக அந்த வார்த்தையின் மிகவும் ஸ்தூலமான அர்த்தத்தில் இருந்து வருகின்றன. இன்றும் கூட ட்ரொட்ஸ்கியின் 'காட்டிக்கொடுக்கப்பட்ட புரட்சி'யை மட்டும் வாசித்த ஒரு சிந்தனைதிறன்மிக்க வாசகன், கொர்பச்சேவ் ஆட்சியின் தன்மையையிட்டும் அதன் 'பிரேஸ் ரொயிகாவின்' தாக்கங்களையிட்டும் கடந்த 5 ஆண்டுகளில் இந்த விடயத்தைப் பற்றி சோவியத் வியலாளர்களால் உருவாக்கப்பட்ட நூற்றுக்கணக்கான நூற்தொகுதிகளை முறையாக ஆய்வுசெய்வதைக் காட்டிலும் ஆழமானதும் 'புதிய'துமான விளக்கங்களைப் பெற்றுக் கொள்வான்.

ட்ரொட்ஸ்கியிடம் இருந்து ஒரு சிலையைகடனாக வாங்குவதற்கு மாபெரும் உயரத்தில் நிற்பவர்கள் மட்டுமே அந்தப் பெரும் தொலைவுக்கு அலகிட முடியும், அதே சமயம் குட்டி முதலாளித்துவ கல்வியாளர்கள், பண்டிதர்கள், இன்றைய தொழிலாளர இயக்கத்தில் மொய்க்கும் சந்தர்ப்பவாதத்தின் நானாவிதமான சாயல்கள் கொண்ட சில்லறைப் பிரதிநிதிகளைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை. இவர்கள் தமது சொந்த மூக்குக்கு அப்பால் பார்க்கவே சிரமப்படுகின்றார்கள். ட்ரொட்ஸ்கியின் சிந்தனை தசாப்தங்கள் ஊடாக் கம்பீரமாக அடித்துச் செல்கின்றது. ஆனால் ட்ரொட்ஸ்கியின் ஆக்ககைளதும், சாதனைகளதும அசாதாரணமான விரைவினை அவரது மேதாவித்தனத்துடன் மட்டும் தொடர்பு படுத்தி விளக்கிவிட முடியாது. ட்ரொட்ஸ்கி போரிட்ட திட்டவட்டமான அரசியல் தோற்றப்பாடும், பிரச்சினையும் இன்னமும் அனைத்துலக தொழிலாள வர்க்கத்தினை எதிர்கொண்டுள்ளன என்பது ல்யலாவம்வக்கும் மேல் ...

www.padippakam.com



# லயின் 50 ஆண்டுகளின் பின்



போல்ஷிவிக் கட்சியின் மத்திய குழு கூட்டத் தொடர் – இதில் பெரும்பான்மையினர் ஸ்டாலினல் படுகொலை செய்யப்பட்டனர்.

உண்மையின் வெளிப்பாடாகும். அவர் எமது காலத்தின் ஒரு மனிதன்: கடந்த அரை நூற்றுண்டில் இடம் பெற்றுள்ள சகல பரந்த மாற்றங்களுக்கு இடையேயும் முக்கிய அம்சங்களும் விவகாரங்களும் அரசியல் வாழ்க்கையின் அடிப்படை அரிச்சுவடியும் அடிப்படையில் மாற்றப்பட்டு விடவில்லை. 50 ஆண்டுகால பயணத்தின் இடையேயும் 1940ம் 1990ம் அதே அரசியல் சகாப்தத்தின் பாகமாகும்.

மார்க்ஸ், எங்கேல்சின் மரணத்தின் 50 ஆண்டுகளின் பின்னர், அனைத்துலகத்தினதும், தொழிலாள வர்க்க அரசியலினதும் பண்பு, ஏகாதிபத்திய சகாப்தத்தின் வருகையால் ஆழமாக மாற்றப்பட்டுள்ளது. 1883ல் மார்க்ஸ் காலமான போது அனைத்துலக தொழிலாளர் இயக்கம் அதன் வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களில் இருந்ததோடு இரண்டாம் அகிலம் அமைக்கப்பட்டும் கூட இருக்கவில்லை. ஒரு அரை நூற்றுண்டின் பின்னர் 1933ல் இரண்டாம் அகிலம் மட்டுமன்றி மூன்றும் அகிலமும் கூட அழிந்து கொண்டிருந்தது. 1895ல் எங்கேல்ஸ் காலமான போது புதிதாக அமைக்கப்பட்ட இரண்டாம் அகிலம், முதலாளித்துவ இராணுவ வாதத்தினை நோக்கிய ஆரம்ப போக்குக்கு எதிராக அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தினை இன்னமும் அழைத்துக் கொண்டிருந்தது, தொழிலாள வர்க்கத்தின் புதியதும் பலம் வாய்ந்ததுமான கட்சிகள் மார்க்சிசத்தின் பதாகையின் கீழ் பெருமிதத்துடன் அணி நடை போட்டன. அவை இன்னமும் சந்தர்ப்பவாதத்தினல் உள்ளார்ந்த ரீதியில் அரிக்கப்பட்டு விடவில்லை. 1945 அளவில் முதலாளித்துவம் நீண்ட காலத்துக்கு முன்பே அதன் ஏகாதிபத்திய கட்டத்தினை எட்டியதோடு, மனித இனத்தினை முன்னெருபோதும் இல்லாத அளவில் உலகளாவிய பேரழிவுமிக்க இரண்டு யுத்தங்களினுள்ளும் மூழ்கடித்துவிட்டது. பரந்த தொழிலாள வர்க்கக் கட்சிகளைப் போன்றே சமூக ஜனநாயக, ஸ்டாலினிச கட்சிகளும் கோட்பாட்டு திரிப்புகளுக்கு அப்பால் பல தசாப்தங்களுக்கு சந்தர்ப்பவாத அபிவிருத்தியில் முன்னேறின. மேலும் இவை பரந்த அளவில் மார்க்சும் எங்கேல்சும் முற்றிலும் அறிமுகமற்ற ஒரு அரசியல் தோற்றப்பாட்டினை உருவாக்கின. வேடதாரி தொழிலாள வர்க்க கட்சிகள் முதலாளித்துவ எதிர்ப் புரட்சியிலும் பாட்டாளி வர்க்கத்தினை இரத்தம்தோய ஒடுக்குவதிலும் நேரடியாக ஒத்துழைத்தன.

இந்த இறுதித் தோற்றப்பாடு உண்மையில் லெனினல் தரிசிக்கப்பட்டது 1914ஆகஸ்ட் 4ன் வரலாற்று முக்கியத்துவத்தினை முதலில் விளக்கியவர் அவரே. இது ஏகாதிபத்தியத்துக்கும் தொழிலாளர் இயக்கத்தினுள் சந்தர்ப்பவாதத்தின் உயிராபத்தான வளர்ச்சிக்கும் உயிர்த்தொடுவையை ஏற்படுத்துகின்றது. ஆனல் 1924 ஜனவரியில் அவரது மரணத்தின் போது, சோவியத் ஆட்சியினதும் மூன்றும் அகிலத்தினதும் சீரழிவு அதன் ஆரம்பக் கட்டத்திலேயே இருந்து வந்தது. உலக கம்யூனிச இயக்கத்தினதும் அனைத்துலக வர்க்கப் போராட்டத்தினதும் தலைவிதி மீதான அதன் பிரமாண்டமான தாக்கம் இன்னமும் எதிர்பார்க்கப்படவில்லை. ''ஸ்டாலினிசம்'' 'சீரழிந்த தொழிலாளர் அரசு' என்ற பதங்கள் இன்னமும் அரசியல் கருத்துப்பாடுகளாக இருந்து வரவில்லை.

லெனினின் மரணத்துக்கும் 1938ல் நான்காம் அகிலம் நிறுவப்பட்டதற்கும் இடைப்பட்ட வருடங்களின் துன்பகரமான அனுபவங்கள் — சோவியத் அதிகாரத்துவத்தின் வளர்ச்சியும் அரசியல் அதிகாரம் பறிக்கப்பட்டமையும், போல்ஷிவிக் கட்சி அழிக்கப்பட்டமை, 'தனி நாட்டில் சோசலிசக்' கோட்பாட்டின் பிரகடனம் அதைத் தொடர்ந்து ஆசியாவிலும் ஐரோப்பாவிலும் தொழிலாள வர்க்கம் அடைந்த தோல்விகள், ஹிட்லரின் வெற்றியும் கம்யூனிஸ்ட் அகிலத்தின் சரிவும், ஸ்டாலினிச அதிகாரத்துவம் ஏகாதிபத்தியத்தின் ஒரு அரசியல் ஏஜன்சியாக மாற்றப்பட்டமை, அனைத்துலக முதலாளித்துவ அந்தஸ்தினை பராமரிக்க நனவாகத் தொழிற்பட்டமை, 'மக்கள் முன்னணி'யின் எதிர்ப்புரட்சி அரசியல், ஸ்பானியப் புரட்சி காட்டிக் கொடுக்கப்பட்டதால் உண்டான விளைவுகள் — எதிர்வரும் தசாப்தங்களின் அரசியல் வாழ்வின் அமைப்பினையும் உள்ளடக்கத்தினையும் நிர்ணயம் செய்தன.

ட்ரொட்ஸ்கி 1938ல் எழுதியதுபோல் ''உலக அரசியல் நிலைமை முழுமையாக பாட்டாளி வர்க்க வரலாற்று தலைமை நெருக்கடியால் முக்கியமாக குணம்சப்படுத்தப்படுகின்றது.'' ட்ரொட்ஸ்கியின் மரணத்தின் 50 ஆண்டுகளின் பின்னர், அந்த நெருக்கடியைத் தீர்ப்பது தொழிலாள வர்க்கத்தினை எதிர்கொள்ளும் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையேயான பணியாக இருந்து வருகின்றது. முதலாளித்துவ அமைப்பு, 1930பதுகளின் உலகளாவிய பொருளாதார மந்தத்திற்கு மட்டுமன்றி, அதைத் தொடர்ந்து வந்த உலக யுத்தத்தினையும், அத்தோடு 1960பதுகளதும் 1970பதுகளதும் புரட்சிகர எழுச்சிகளுக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் நின்று பிடித்ததற்கு எல்லாவற்றுக்கும் மேலாக தொழிலாள வர்க்க உத்தியோகபூர்வமான தலைமையின் துரோகமே காரணம், முதலாளித்துவம் உயிர்பிழைத்தமை மார்க்சிசத்தில் வரலாற்றுத் தீர்க்கதரிசனத்தினை தவறாக்கி விட்டதாக வாதிடுவோர், பொதுவில்அதன் உயிர்பிழைப்பினைச் சாத்தியமாக்கிய அரசியல் சூழ்நிலைமைகளை ஆய்வு செய்ய அக்கறைப்படுவதாய் இல்லை. இரண்டாம் உலக யுத்த முடிவில் மேற்கு ஐரோப்பாவில் அல்லது 1965ல் இந்தோனேஷியாவிலும்1968ல் பிரான்சில் 1970பதுகளில் சில்லி, போர்த்துக்கல், பிரிட்டனில் முதலாளித்துவம் உயிர் பிழைத்தமையை பரந்த ஸ்டாலினிச, சமூக ஜனநாயகக் கட்சிகளின் தலைமைகள் கடைப்பிடித்த கொள்கைகளுடன் தொடர்பு படுத்தாமல் விளக்கி விடலாம் என்பது போல் இது இருக்கிறது. முதலாளித்துவத்தின் இந்தப் பரிந்துரையாளர்களுக்கும் தொழிலாளர் இயக்கத்தின் உள்ளேயுள்ள அதன் ஏஜன்டுகளுக்கும் ட்ரொட்ஸ்கி அளித்த பதில் 1938ஐபோலவே இன்றும் உண்மையானது:

''சோசலிசத்துக்கான வரலாற்று நிலைமைகள் இன்னமும் 'பக்குவம்' அடைந்துவிடவில்லை என்ற சகல பேச்சுக்களும் அறியாமையின் விளைவு அல்லது நனவான மோசடியாகும். பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கான புறநிலை முன்தேவைகள் 'பக்குவம்' கண்டு விட்டது மட்டுமன்றி ஓரளவுக்கு அழுகிப்போகவும் தொடங்கிவிட்டது. அடுத்துவரும் வரலாற்றுக் காலப் பகுதியல் ஒரு சோசலிசப் புரட்சி இல்லாது போனல் மனித இனத்தின் முழுக் கலாச்சாரத்தினையும் ஒரு பேரழிவு அச்சுறுத்திக் கொண்டுள்ளது.'' (இடைமருவு வேலைத்திட்டம், லேபர் பப்ளிகேசன்ஸ் பக்கம் 1—2)

ஒரு கம்பீரமானதும் ஆனல் பிரித்தானிய முதலாளி வர்க்கத்தின் பெரிதும் வர்க்க நனவு கொண்ட சஞ்சிகையுமான 'த இக்கோனேமிஸ்ட்' சமீபத்தில் ட்ரொட்ஸ்கியின் 'பொருத்தமின்மை' பற்றிக் குறிப்பிட்டிருந்தது. அத்தகைய கருத்துத் திணிப்புக்கான நம்பிக்கைப் பாத்திரம், முதலாளித்துவ பத்திரிகைகளில் எவ்வளவு ஒழுங்காக அவை தோன்றுகின்றன என்பதைப் பொறுத்தே நாசமாக்கப்படுகின்றது. அவற்றின் நரம்புத்தளர்ச்சி கொண்ட அவமதிப்புத்தொனி அவர்கள் குறைந்தது முதலாளித்துவத்தினை மீள உறுதி செய்ய விரும்புகின்றனர் என்பதைக்காட்டுகின்றது.விடயம் என்னவாக இருந்த போதிலும் இந்தத் தகட்டு அச்சின் ட்ரொட்ஸ்கி தள்ளுபடியானது மார்க்சிசத்துக்கு எதிரான இன்றைய பிரச்சாரத்தில் ஒரு முக்கிய பாத்திரம் வகிக்கின்றது. சோவியத் ஆட்சியின் நெருக்கடி, சோசலிசத்தின் தோல்வியை 'நிரூபிக்கின்றது' என்ற வாதம் முற்றிலும் தவறான முறையில் மார்க்சிசத்தினை ஸ்டாலினிசத்துடன் இனங்காணுவதை அடிப்படையாகக் கொண்டது. ஆனல் இந்த இனங்காணல், சோவியத் யூனியனின் உள்ளே ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் கொள்கைகளுக்கு ஒரு மார்க்சிச எதிர்ப்பு இருந்தது என்பதை சிடுமூஞ்சித்தனமாக மறுப்பதை வேண்டிநிற்கிறது.

சோவியத் யூனியனின் உள்ளே ஸ்டாலினுக்கு ஒரு எதிர்ப்பு இருந்து வந்தது என்பதை சும்மா மறுப்பது சாத்தியம் அல்ல. ஒருவர் தனித்து (ட்ரொட்ஸ்கி ஒரு பாசிஸ்ட், ஒரு நாசகாரன் முதலான) பாரம்பரிய பொய்களுடன் பதிலிறுத்தாலும் சோவியத் யூனியனின் வரலாற்றில் ட்ரொட்ஸ்கியின் பாத்திரம் பற்றிய பிரச்சினையை புறக்கணித்து விட முடியாது: ஆனல் கிளாஸ்நொஸ்ட், எந்த விதத்திலும் ட்ரொட்ஸ்கி சம்பந்தமான அதிகாரத்துவத்தின் வெறுப்பும் அச்சமும் குறைத்துவிட்டதைக் குறிக்கவில்லை. அவருக்கு எதிரான பிரச்சாரம் தொடர்கிறது. ஆனல் ஸ்டாலினிசத்தின் பூரண அவமதிப்பு அதிகாரத்துவத்தினை கடந்த காலத்தில் கடைப்பிடித்தவற்றில் இருந்து வேறுபட்ட முறையில் தாக்குதலை தொடுப்பதற்கான வழிகளை அபிவிருத்தி செய்யுமாறு நெருக்கியுள்ளது- நேற்று அதிகாரத்துவத்தின் தேவைகளுடன் மார்க்சிசத்தினை இணக்குவதை இலக்காகக் கொண்டு உயிரற்ற கோஷ்டிப் பாணியிலான கட்டுரைகளைத் கடைந்து எடுத்து வந்த கொர்பச்சேவின் புகழ்பாடும் கல்வியாளர்கள் இன்று சோவியத் ருஷ்யாவின் நெருக்கடிக்கு மார்க்சிசமே பொறுப்பு என பிரகடனம் செய்வதன் மூலம் அனைத்துலக முதலாளி வர்க்கத்தினை எதிரொலிக்கின்றனர் எனவே இந்த சிந்தனைபீடத்தின் படி ஸ்டாலினும் ட்ரொட்ஸ்கியும் மார்க்சிஸ்டுகள், இடதுசாரி எதிர்ப்பாளர்கள் ஸ்டாலினிசகன்னையைத்தோற்கடித்திருப்பின் சோவியத் சமூகத்தின் அபிவிருத்தி அடிப்படையில் வேறுபட்டதாக இருந்திருக்காது. இந்தவாதம், ஒரு சோவியத் 'மெய்பியலாளரான' அலக்சாண்டர் சிப்கோவின் எழுத்துக்களில் மிகக் கேவலமான வடிவத்தினைப் பெறுகின்றது. அவர் கூறியதாவது: ''ஸ்டாலினின் சிந்தனையும் அவரின் சோசலிச கருத்தும் அக்கால மார்க்சிஸ்டுகளுக்கு நல்ல எடுத்துக்காட்டு. சோசலிச பொருளாதார பரிணாமத்தின் இறுதி இலக்குகள் பற்றிய விளக்கத்தில் ஸ்டாலின் ... கட்சியின் எல். ட்ரொட்ஸ்கி போன்ற தலைவர்களில் இருந்து வேறுபடவில்லை.'' (கரன்ட் டைஜஸ்ட் ஒப் த சோவியத் பிரஸ்—ஏப்ரல் 5, 1989)

தனது ஸ்டாலினிச பயிற்சிக்கு விசுவாசமாக சிப்கோ பொய்மைப்படுத்துவதில்தனக்குள்ள சுவைக்கு இடம் கொடாமல் இருக்க முடியவில்லை. அவர் எழுதுவதாவது ''ஸ்டாலினுக்கு நீண்ட காலத்துக்கு முன்பே ட்ரொட்ஸ்கி சமநிலையினை ஒரு உதவாக்கரையான வாழ்க்கை வழி எனச் சபித்தார். ஒரு பரிணாமத்தின் பின் மற்றெருன்று இதுவே அவரது அக்கறைக்குரியதாகியது. ஒருவரின் ஊழியத்தில் இருந்து 'சடநன்மை'களை அடைவதைவிடப் பெரிய தீமை வேறு கிடையாது என்பதை ட்ரொட்ஸ் கூடவே விளங்கிக் கொண்டார். அவ்வாறே அவர் மக்கள் பட்டினியாய் இருப்

(6ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# லியோன் ட்ரொட்ஸ்கி படுகொலையின்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பதை நிறுத்தினுல் மக்களின் ஒழுக்கநெறி வீழ்ச்சியடையும் என எண்ணினுர். யுத்த கம்யூ னிசம்' காலப்பகுதியில் அவர் இலட்சக்கணக்கானேரை பட்டினி போட்டார். புதியபொருளாதாரக் கொள்கையின் போது (என். ஈ; பி) நன்கு உணவுண்ட தொழிலாளர், விவசாயிகள் தட்டினரைப் பட்டினி போட்டார்''. அதே நால் 1989 ஏப்ரல் 19-பக்கம்-21)

இந்தப் பொய்கள் வெறுப்பினை ஏற்படுத்துவதோடு அவற்றின் பரிதாபத்துக்குரிய ஒழுங்கீனம் அதன் ஆசான் மீது இரக்கத்தையும் உண்டுபண்ணுகின்றது. பழம் பழமொழி கூறுவதுபோல் சேறடிப்பும் கூட சில அர்த்தத்தினை ஏற்படுத்த வேண்டும். சிப்கோவினதுஎளிய அர்த்தம் அற்றவைப் சிப்கோ, ட்ரொட்ஸ்கி ஒரு மார்க்சிஸ்ட் என ஒப்புக் கொள்கிருர். அவரின் வாதத்திற்கு அது அவசியமாக உள்ளது. ஆனல் ட்ரொட்ஸ்கியைப் பற்றி அவர் தெரிவிக்கும் அபிப்பிராயங்கள் வரலாற்றின் சடவாத கருத்துப் பாட்டினைக் கொண்ட ஒருவர் கொண்டிருக்கத்தக்கன அல்ல. ''ஒருவரின் உழைப்பில் இருந்து அடைந்த சட தன்மைகளை'' மார்க்சிஸ்டுகள் காண்டிருத்தல் மாபெரும் தீங்காயின், அதன் உழைப்பினுல் உற்பத்தி செய்யப்பட்ட உபரிப் பெருமானத்தினை முழுமையாக பிடுங்கிக் கொள்ளும் தொழிலாள வர்க்கத்தின் போராட்டத்துடன் அவர்கள வரலாற்று ரீதியில் இனங்காட்டிக்கொண்டது முற்றிலும் புரிந்து கொள்ள முடியாததாகும். மேலும் மார்க்சிஸ்டுகள், பரந்தளவிலான பட்டினி நிலைமைகளின் கீழேயே ஒழுக்க நெறி விருத்தியடைகிறது என மார்க்சிஸ்டுகள் நம்பினுல் அவர்கள் ஆபிரிக்க, ஆசிய, லத்தீன் அமெரிக்க முதலாளித்துவ சமுதாயங்களை பூமியில் உள்ள சிறந்த ஒழுக்க நெறியடைத்தவையாக நோக்குகிருர்கள் எனக் கொள்ள வேண்டியிருக்கும்!

சிப்கோ போன்ற ஒரு புனரமைக்கப்பட்ட ஸ்டாலினிச வாடகைக் குதிரையின் கருத்துக்களைப் பற்றி விமர்சனம் செய்வதுபெரிதும் கிரமமானது அவர் சமீப வருடங்களாக சோவியத் ஸ்டாலினிசக் கட்சி மத்திய குழுவின் ஒரு உத்தியோகபூர்வமான ஆலோசகராக இருந்து வருகின்ருர் ஆனல் சோவியத் அரசின் அதிகாரத்துவ சீரழிவு அக்டோபர் புரட்சி, ஸாரிச கடந்த காலத்தில் இருந்து உரிமையாக்கிக் கொண்ட பொருளாதாரப் பின்னடைவில் இருந்து தோன்றியது என ட்ரொட்ஸ்கி வலியுறுத்தியதை சுட்டிக்காட்டுவது அவசியம். கம்யூனிஸ்ட் பார்வைக்கும் சோவியத் யதார்த்தத்துக்கும் இடையேயான தெளிவான இடைவெளியை விளக்குவதற்கு ட்ரொட்ஸ்கி, மார்க்சின் வார்த்தைகளை நினைவு கூர்ந்தார்: ''சட்டம் ஒருபோதுமே பொருளாதார அமைப்புக்கும் அந்த அமைப்பினுல் நிபந்தனைப் படுத்தப்படும் சமுதாயத்தின் கலாச்சார அபிவிருத்திக்கும் விளங்க முடியாது. வறுமையை உயர்ந்த ஒழுக்க நெறிக்கான ஒரு மூலமாக மகத்துவப்படுத்தாமல் — இத்தகைய ஒரு விசமத்தனமான பொய்யினை வாசிக்கும் ஒருவர் பயந்து நடுங்கச் செய்வர் — ட்ரொட்ஸ்கி 'பொதுவான பஞ்சத்துக்கும்' அதிகாரத்துவத்தின் எல்லையற்ற சர்வாதிகாரத்துக்கும் இடையேயான உள் உறவுகளை அம்பலப்படுத்தினுர்.

''நுகர்வுப் பொருட்களில் சமுதாயத்தின் வறுமையும், அதனுல் ஒவ்வொருவரும் அனைவருடனும் ஏற்பட்டுள்ள போராட்டமும் அதிகாரத்துவ ஆட்சிக்கான அடிப்படையாகும். கியூக்கள் மிகவும் நீண்டதும் ஒழுங்கை நிலைநாட்ட ஒரு பொலிஸ்காரனை நியமிப்பது அவசியம். சோவியத் அதிகாரத்துவத்தின் ஆட்சியின் ஆரம்பப் புள்ளி அத்தகையதே யாருக்குகொஞ்சம் கிடைக்கவேண்டும் யார் பொறுத்திருக்க வேண்டும் என்பதை அது 'அறியும்'.

''சோவியத் தேமிடோரின் சமூக அர்த்தம் இப்போது எம் முன்னுல் உருவம் பெற்று வருகின்றது. வெகுஜனங்களின் வறுமையும் கலாச்சாரப் பின்னடைவும் ஆட்சியாளரின் உயிராபத்தான உருவில் கையில் நீண்ட கோலுடன் மீண்டும் அவதாரம் எடுத்துள்ளது.''

(காட்டிக் கொடுக்கப்பட்ட புரட்சி—லேபர் பப்ளிகேசன்ஸ் — 96 — 97)

சிப்கோவும் அவரைப்போன்ற ஏனையவர்களும் ட்ரொட்ஸ்கியின் ஆக்கங்கள் சோவியத் யூனியனில் பிரசுரிக்கப்படாமலும், வர்க்க நாவுள்ள தொழிலாளர்களுக்கும்புத்திஜீவிகளுக்கும் அவை கிடைக்காது இருக்கும் வரையில் மட்டுமே அஞ்சாமல் பொய் சொல்ல முடியும் அங்கு ட்ரொட்ஸ்கியினதும், இடதுசாரி எதிர்க்கட்சியை சேர்ந்த அவரது தோழர்களதும் ஆக்கங்களை படிக்க சிறிதேனும் வாய்ப்புக் கிடைப்பின் பிரேஸ்ரோய்காவின் கோட்பாட்டாளர்களான றக்கோவ்ஸ்கி பிரெப்பிரசன்ஸ்கி போன்ருேர் ஸ்டாலினின் குற்றங்களுக்கு மார்க்சிசத்தைக் குறை சொல்லலாம் என எதிர்பார்க்கின்றனர். சிப்கோ, முதலாளித்துவம் புனருத்தாரணம் செய்யப்படுவதை ஆதரிக்கிருர் என்பது ஆச்சரியமாகி விடக் கூடாது.

ஸ்டாலினிஸ்டுகளின் (அல்லது பிரேஸ்ரொய்காவுக்கு திரும்பிய மாஜி ஸ்டாலினிஸ்டுகளின்) பொய்களுக்கு இடையேயும் முதலாளித்துவ வெகுஜன தொடர்புச் சாதனங்களின் அங்கீகாரம் இல்லாமலும் வரலாற்று நிகழ்வுகள் ட்ரொட்ஸ்கி ஸ்டாலினிசத்துக்கு எதிராக இடதுசாரி எதிர்க்கட்சிக்கும் பின்னர் நான்காம் அகிலத்துக்கும் நடாத்திய போராட்டத்துக்கு அடிப்படையாக வளங்கிய வேலைத்திட்டத்தினையும், முன்(ன்)னுக்கினையும் முழுமனே ருசுப்படுத்தி உள்ளது.

சோவியத் ருஷ்யாவில் நெருக்கடியினுல் தவறென நிராகரிக்கப்பட்டது மார்க்சிசம் அன்றி, 1924ல் ஸ்டாலினுலும் புகாரினுலும் பிரகடனம் செய்யப்பட்ட மார்க்சிச எதிர்ப்பு 'தனி நாட்டில் சோசலிசம்' வேலைத்திட்டமே. ட்ரொட்ஸ்கிசம் என அறியப்பட்டது இந்த மார்க்சிச அனைத்துலக வாதத்தின் அடிப்படையில் திரிபு செய்வதற்கு எதிரான போராட்டத்திலேயே உருப்பெற்றது. 1930ல் ட்ரொட்ஸ்கி குறிப்பிட்டது போல்:

''மார்க்சிசம், உலகப்பொருளாதாரத்தில்இருந்து–தேசியப் பகுதிகளின் ஒரு கூட்டுத் தொகையாக அன்றி ஒரு பலமும் சுயாதீனமும் கொண்ட யதார்த்தமாக — புறப்பாட்டு புள்ளியை எடுக்கின்றது. அது அனைத்துலக உழைப்புப் பகுப்பினுலும் உலகச் சந்தையினுலும் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. எமது சகாப்தத்தில் அதுதேசிய சந்தைகளை திமிருடன் ஆதிக்கம் செய்கின்றது. முதலாளித்துவ சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் நீண்ட காலத்துக்கு முன்பே தேசிய எல்லைகளைத் தாண்டி வளர்ச்சி கண்டுவிட்டன. ஏகாதிபத்திய யுத்தம் (1914—1918) இந்த உண்மையின் ஒரு வெளிப்பாடாகும். உற்பத்தி தொழில் நுட்பத்தினைப் பொறுத்தமட்டில் சோசலிச சமுதாயம், முதலாளித்துவத்தைக் காட்டிலும் ஒரு உயர்ந்த கட்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்யவேண்டும்; ஒரு தேசிய ரீதியில் தனிமைப்பட்ட சோசலிச சமுதாயத்தினை கட்டி எழுப்ப எண்ணுவதாவது தற்காலிக வெற்றிகளுக்கிடையேயும், முதலாளித்துவத்துடன் ஒப்பிடுமிடத்து உற்பத்திச் சக்திகளை பின்னேற்றமான நிலைக்குத் தள்ளுவதாகும்.

''ஒரு தனிமைப்படுத்தப்பட்ட தொழிலாளர் அரசுக்கான ஒரு யதார்த்தமான வேலைத்திட்டமானது, உலகப் பொருளாதாரத்தில் இருந்து 'சுயாதீனம்' அடையும் இலக்கினை வழங்கிவிடாது; 'குறுகிய காலத்தில்' ஒரு தேசிய சோசலிச சமுதாயத்தினை நிறுவுவது இன்னும் குறைவு. பணியினது பொதுவான அதிகபட்ச வேகத்தினை அடைவது அன்றி சாதகமான வேகத்தினை—அதாவது சிறந்ததை அடைவதே. அது உள்ளார்ந்த, உலக பொருளாதார நிலைமைகள் இரண்டில் இருந்தும் ஏற்படுகின்றது பாட்டாளி வர்க்கத்தின் நிலைப்பாட்டினைப் பலப்படுத்துகிறது எதிர்கால அனைத்துலக சோசலிச சமுதாயத்தின் தேசிய மூலகங்களை தயார் செய்கிறது. அதே சமயத்தில் எல்லாவற்றுக்கும் மேலாக பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கைத் தரத்தினை ஒழுங்கு முறையாக முன்னேற்றம் அடையச் செய்கின்றது. நாட்டுப்புற சுரண்டலற்ற வெகுஜனங்களுடனை அதன் கூட்டினைப் பலப்படுத்துகின்றது. இந்தச் சாத்தியம், தயாரிப்புக் காலப்பகுதி பூராவும் செயலில் இருந்து வர வேண்டும். அதாவது, முன்னேறிய நாடுகளில்வெற்றிகரமான புரட்சி சோவியத் யூனியனை அதன் இன்றைய தனிமைப்பட்ட நிலையில் இருந்து விடுதலை செய்யும் வரை இருந்து வர வேண்டும். (நிரந்தரப் புரட்சி — நியூபார்க் — பக்கம் 22 — 32)

மிகுதி அடுத்த இதழில்

## தொழிலாளர்களையும்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிராகவும் கிளர்ந்து எழுந்துள்ளது. இங்குதான் தமிழ் தேசியப் போராட்டத்தின் ஏகாதிபத்திய எதிர்ப்பு உள்ளடக்கம் உள்ளது.

### நிரந்தரப் புரட்சி

லியொன் ட்ரொட்ஸ்கிதமது நிரந்தரப் புரட்சிக்கோட்பாட்டில் பின்தங்கிய நாடுகளின் பாட்டாளி வர்க்கம் ஒடுக்கப்படும் விவசாயிகளதும், ஒடுக்கப்படும் தேசிய இனங்களதும் ஜனநாயக உரிமைக்கானத வழங்குவதன் மூலம் மட்டுமே ஆட்சியை கைப்பற்ற முடியும் எனச் சுட்டிக்காட்டினுர். ஒடுக்குமுறை யுத்தத்துக்கு ஆதரவளிப்பதன் மூலம் தொழிலாளர் இயக்கத்தின் சந்தர்ப்பவாதத் தலைவர்களான சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ. தொ. கா. தலைவர்கள் தொழிலாள வர்க்கத்தினை அதன் கூட்டுகளில் இருந்து தனிமைப்படுத்து கின்றனர்.

சமசமாஜக் கட்சி தனது ஜூலை 14ம் திகதி அறிக்கையில் ''பொலிஸ் நிலயங்களுக்கு இராணுவ முகாம்களுக்கும் எதிராக விடுதலைப் புலிகள் தொடுத்துள்ள அனுவசியமான, ஆத்திரமூட்டும் தாக்குதல்களை சமசமாஜக் கட்சி கண்டிக்கிறது ... நிலைமையை கட்டுப்படுத்துவதைத் தவிர அரசாங்கத்துக்கு வேறு வழியில்லை என்பதை சமசமாஜக் கட்சி ஏற்றுக்கொள்கின்றது ... அரசாங்கம் விடுதலைப் புலிகளை அரசியல் ரீதியில் முடியும் என சமசமாஜக் கட்சி தனிமைப்படுத்த சுட்டிக் காட்டுகின்றது.'' என்றது.

''கம்யூனிஸ்டு கட்சியின் ஸ்டாலினிஸ்டுகள் 'அத்த' பத்திரிகையில் கூறியதாவது: ''கடற்படை, தரைப்படை, விமானப்படை, பொலிஸின் வீரம்மிக்க இளைஞர்கள் நாட்டின் ஐக்கியத்தினைக் காக்க தமது உயிர்களை தியாகம் செய்யும் நிலையில் ... ஒழுங்கான உணவு, மருந்து, கூட இல்லாத நிலையில் அவர்கள் தைரியத்துடன் போராடுவதோடு தமது உயிர்களையும் தியாகம் செய்து கொண்டுள்ளார்கள்'' எனக் குறிப்பிட்டது.

'நவசமசமாஜக் கட்சியின் மத்தியவாதிகள் ஜூலை 6ல் வெளியிட்ட அறிக்கையில்: ''புலிகளிடம் இருந்து விடுதலை செய்த பிராந்தியங்களில் ஒழுங்கான கட்டுப்பாட்டினை ஏற்படுத்த இலங்கை தரைப்படை தவறியதால் மக்கள் தாழியில் இருந்து அடுப்பிற்குள் விழுந்துள்ளார்கள்'' என்றது. இந் நிலைமையில் இத்தலைவர்கள் மீண்டும் ஒரு தடவை முதலாளித்துவ அமைப்பினைக் தூக்கிப் பிடிக்க முன் வந்துள்ளார்கள்

''இத்துரோகிகளிற்கு எதிராக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே இந்த ஒடுக்குமுறை பிற்போக்கு யுத்தத்துக்கு எதிராக தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டவும் தமிழ் தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவளிக்கவும் போராடுகின்றது. புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தமிழர் தாயகமான வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து சிங்கள முதலாளித்துவ அரசாங்கத்தின் இராணுவம் வாபஸ் பெறப்படவேண்டும எனவும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை உத்தரவாதம் செய்யப்படவேண்டும் எனவும் கோருகின்றது. தொழிலாள வர்க்கத்தினையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டுவதன் மூலம் மட்டுமே இதைச் சாத்தியமாக்க முடியும்.

## The Heritage We Defend Published in Sri Lanka




The Bulletin is proud to announce the publication in Sinhalese of the first volume of *The Heritage We Defend* and of *Perestroika Versus Socialism: Stalinism and the Restoration of Capitalism in the USSR*.

These two books, written by Workers League National Secretary David North, have been published by the Revolutionary Communist League, the Sri Lankan section of the International Committee of the Fourth International.

*The Heritage We Defend* is a Marxist analysis of the history of the Fourth International since the assassination of Leon Trotsky 50 years ago. Its focus is the fundamental political and theoretical issues which have confronted the Fourth International since its founding and the struggle waged by the Trotskyist movement against Stalinism, bourgeois nationalism and various forms of petty-bourgeois radicalism. The book originated in the struggle waged by the International Committee of the Fourth International against the renunciation of Trotskyism by the British Workers Revolutionary Party.

The appearance of this book in Sri Lanka, where the history of the workers' movement is so intimately bound up with the struggles of the Trotskyist movement, is of particular importance. *The Heritage* reviews key episodes in the history of the Trotskyist movement in that country, including its heroic struggle against British imperialism during World War II and the subsequent betrayal of working class by the renegades of the Lanka Sama Samaja Party, which entered the bourgeois coalition government of Madame Bandaranaike in 1964.

The original English-language edition of the book was dedicated to Comrade Keerthi Balasuriya, a leader of the International Committee of the Fourth International and the general secretary of the Revolutionary Communist League until his sudden death on December 18, 1987. Comrade Balasuriya himself wrote an imperishable chapter in the struggle for Trotskyism, entering the Trotskyist movement at the age of 16 and fighting against the historic betrayal carried out by the leadership of the LSSP. It was this decadeslong struggle against opportunism which prepared the Revolutionary Communist League, which alone has provided revolutionary leadership to the working class under the conditions of civil war and revolutionary crisis

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கு எதிராக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊர்காவற்றுறை படை குவிப்பு, விமானத்தாக்குதல்கள் மூலம் யூ. என். பி அரசாங்கம் யாழ்ப்பாணத்தினை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளும் மிலேச்சத் திட்டத்தினை முன்வைத்துள்ளது. இந்தத் திட்டம் ஒரு மாவட்டத்தில் இருந்து மற்றொரு மாவட்டத்துக்கு மக்களை ஓட்டிக்கலைக்கும் திட்டத்தினை முன்வைக்கும் அளவுக்கு வளர்ச்சி கண்டுள்ளது. யாழ் மாவட்ட மக்களை வவுனியா 'முகாம்களுக்கு இடம் பெயர்க்கும்' திட்டம் இதன் ஓர் பாகமே.

ஓலை இந்திய — இலங்கை அரசாங்கங்கள் கூட்டாக முன்வைத்த மன்னார் அகதிகள் முகாம் திட்டத்துக்கு மேலதிகமாக முன்வைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள், தமிழ் — சிங்களம் பேசும் தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் பிரமாண்டமான அளவில் அகதிகள் முகாம்களில் தள்ளவும், சிறைக்கூடங்களை நிரப்பவும், இன்னும் பல இலட்சக்கணக்கானோரை படுகொலை செய்யவும் யூ. என். பி. அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் போட்டுள்ள திட்டங்களாகும். இதைவிட வேறு தீர்வுகள் இலங்கை இனவாத ஆளும் வர்க்கத்தின் கைகளில் இல்லை.

தமிழ் ஒடுக்கப்படும் மக்களை ஒழித்துக்கட்டும் இத்திட்டத்தினை தீட்டியுள்ள பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவே இலங்கையின் தென்பாகத்தில் இலட்சக்கணக்கான இளைஞர்களை படுகொலை செய்யவும் பல்லாயிரக்கணக்கானோரை சிறைகளில் தள்ளவும் திட்டம் தீட்டியவர். இன்று இவர் தமிழ் தீப்பிடித்தவர் போல் நாடு பூராவும் அலைந்து வட — கிழ் மாகாண யுத்தத்தினை நடாத்தி வருவதோடு தெற்கில் தொழிலாள வர்க்க எழுச்சியை ஒடுக்கித் தள்ள இராணுவத்தின் ஒரு பிரிவினரையும் பொலிசாரினையும் இறக்கியுள்ளார்.

இலங்கையில் உலகப் பொருளாதார நெருக்கடி திட்டவட்டமான வடிவம் எடுத்துள்ள ஒரு நிலையில் தமது வர்க்க ஆட்சியைக் காக்க இலங்கை முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் கையாலாகாத்தனமான நடவடிக்கைகளை இக்காட்டுமிராண்டித்தனங்கள் நன்கு படம்பிடித்துக் காட்டியுள்ளன. அரசாங்கம் இந்த யுத்தத்தின் பொருட்டு உலகம் பூராவும் நிதி திரட்டலில் ஈடுபட்டது. முஸ்லீம் மதத்தினர்கள் படுகொலை செய்யப்பட்ட சமயத்தில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன மத்திய கிழக்கில் அர்த்தமற்று விஜயத்தில் ஈடுபட்டிருந்தார். ரூபா நோட்டுக்களை மேலும் அச்சடித்துக் தள்ளும் இலக்கில் அரசாங்கம் யுத்த செலவினங்களுக்கான 1100 கோடி ரூபாக்களுக்கான உபமானிய பிரேரணையை பாராளுமன்றத்தில் நிறைவேற்றிக் கொண்டது.

ஆகஸ்ட் 5ல் கொழும்புச் சரித்த மண்டபத்தில் பேசிய ஜனாதிபதி பிரேமதாச: யுத்தத்தினை நடாத்த 18 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் ரூபா. 500 வழங்க வேண்டும். ஒரு வேளை உணவை தியாகம் செய்ய வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இனவாத விஷத்தினை பருக்குவதன் மூலம் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் சூறையாடச் செய்யப்படும் நிதியே இது. இன்று அரைகுறை நெருக்குவாரங்களின் மூலம் கறக்கப்படும் தேசிய பாதுகாப்பு நிதியை இன்னும் சில நாட்களில் துப்பாக்கி முனையில் சூறையாடச் செய்யும் தயாரிப்புக்களை இவை சமிக்கை செய்கின்றன.

யூ. என் பி. அரசாங்கம் இன்றைய யுத்தத்தினை நடாத்துவதற்கான கால அவகாசத்தினை வழங்கும் சமரசப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள், இலங்கை முதலாளிகளுடன் புதிய மட்டத்திலான பேச்சுவார்த்தைக்கு தமது தயார் நிலையை வெளிப்படுத்தி உள்ளனர். அரசாங்கத்தின் காட்டுமிராண்டித்தனம் மட்டுமன்றி மத்திய கிழக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் எண்ணெய் யுத்தத்துடன் அதன் நெருக்கடியு உக்கிரமடைந்துள்ள நிலையில் புதிய மட்டத்திலான தொடர்புகளுக்கு முயன்று வருகின்றனர். இதற்கு இந்திய முதலாளித்துவ அரசாங்கத்தின் ஆதரவினை நாடிய விடுதலைப் புலிகள் தலைமை 'உத்தியோகப்பற்றற்ற' பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாக கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். தமது சுரண்டலுக்கான முறைகளை கட்டி எழுப்ப முயன்று வரும் விடுதலைப் புலிகள் தலைமை தேசிய ஜனநாயக உரிமைகளுக்கான போராட்டத்தினை முழுமனே கைவிட்டுள்ளது. அத்தலைமைக்கு மக்களை அணிதிரட்ட வேலைத்திட்டம் இல்லாதது மட்டுமன்றி, மக்களை அணிதிரட்டுவதை தமது நலன்களுக்கு பெரும் ஆபத்தாகவும் காண்கிறார்கள். அவர்களின் இன்றைய இலக்கு ஒடுக்குவோனுடன் உயர்மட்டத்திலான கொடுக்கல் வாங்கல்களுக்கு வாய்ப்பான நிலைமையைச் சிருஷ்டிப்பதே.

சமசமாஜக் கட்சி விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்தும் திட்டத்தின் மூலம் யுத்தத்தினை நடாத்தவேண்டுமெனப் பின்வருமாறு குறிப்பிட்டது. ''எல். ரீ. ரீ. ஈ பயங்கரவாதிகளை பாதுமக்களில் இருந்து அரசியல் ரீதியில் வேறுபடுத்தும் பிரச்சினைக்கு அரசாங்கம் முகம் கொடுக்க வேண்டும்... அனைத்து கட்சிகளுக்காக இடம் பெறும் மகாநாடு, அரசியல் தீர்வினை உண்டுபண்ணும் அரசாங்கத்தின் பொறுப்பை கைவிடுவதாகும். அந்த விருப்பமின்மை அல்லது இயலாமை அழிவினை உண்டுபண்ணுவதாகும்'' (சமசமாஜக் கட்சி அறிக்கை — ஆகஸ்ட் 9)

தொழிலாள வர்க்கத்தின் கண்களில் மண் எறியும் பொருட்டு யுத்தத்தினை எதிர்ப்பதாகக் கூச்சலிட்டு, யுத்தச் செலவினங்களுக்கு வாக்களித்துள்ள நவசமசமாஜத் தலைவர்கள், யூ. என் பி அரசாங்கத்தினை வெளியேற்றும் பொது வேலைநிறுத்தத்தினை ஏற்பாடு செய்ய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் செய்துவரும் பிரச்சாரத்தினை தோற்கடிக்க தொழிற்சங்கங்களுள் வாக்களித்து வருகின்றனர்.

மத்திய வங்கி ஊழியர் சங்கத்தினுள் அத்தகைய பிரேரணையை தோற்கடிக்க வாக்களித்த நவசமசமாஜக் கட்சியினர், ஏனைய தொழிற்சங்கங்களுள்ளும் 'அரசியல் வேண்டாம்' பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் யூ. என் பி அரசாங்கத்துக்கு எதிராக தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டுவதை எதிர்க்கின்றனர்.

## தலைவர்கள் பீதி

யுத்தம் தொடர்ந்து நீடிப்பதால் மற்றும் மாகாணங்களில் தொழிலாளர்கள், ஏழைகளது போராட்டங்கள் வெடிக்கும் என சமசமாஜ - கம்யூனிச — நவசமசமாஜ தலைவர்கள் பீதி அடைந்துள்ளனர். இந்திய — இலங்கை முதலாளிகளின் கால்களை நக்கும் ஏனைய தமிழ் முதலாளித்துவ குழுக்களுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளை தோற்கடிக்கும் கூட்டினை அமைப்பதில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

யுத்தத்தினைத் தவிர வேறு தீர்வு இல்லை என யுத்தத்தின் ஆரம்பம் முதல் அரசாங்கத்துடன் அணிதிரண்டு வந்த சமசமாஜ, நவசமசமாஜ, ஸ்டாலினிச தலைவர்கள், அரசாங்கத்தின் நெருக்கடி கண்டதுதான் தாமதம் அரசியல் தீர்வு' பற்றிய மோசடி பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முதலாளித்துவ ஆளும் வர்க்கம் விடுதலைப் புலிகள் தலைவர்கள் எதிர்பார்க்கும் 'சமரசத்தீர்வையோ' அல்லது சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ தலைவர்கள் கேட்டு நிற்கும் 'அரசியல் தீர்வினையோ' ஏற்படுத்த முடியாது இந்தச் 'சமரசமும்' 'அரசியல் தீர்வும்' ஒடுக்கப்படும் தமிழ் மக்களை ஒடுக்கித் தள்ளவும் தொழிலாள வர்க்கத்தினை நசுக்கவும் சர்வாதிகாரத்தினை ஏற்படுத்துவதற்கான கால அவகாசத்தினைப் பெற்றுக் கொள்வதே.

முதலாளி வர்க்கத்தினை சமரசம் செய்யும்படியும், அரசியல் தீர்வு காணும்படியும் கேட்பதானது அவர்களால் சாதிக்க முடியாத ஜனநாயகப் பணிகளை இட்டுநிரப்புமாறு அவர்களை வேண்டுவதாகும் அத்தோடு அதற்காக தொழிலாளர்களையும், ஒடுக்கப்படும் மக்களையும் பொறுத்திருக்கும்படி கேட்பதன் மூலம் அவர்களை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்குவதுமாகும்.

தீர்வுக்கான ஒரே வழி, பாட்டாளி வர்க்கம், அதன் சுயாதீனமான வர்க்க வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரள்வதாகும். இத்துரோகத் தலைவர்களின் நெருக்கடி யூ. என். பி. அரசாங்கத்துக்கும் முதலாளித்துவத்துக்கும் எதிரான பாட்டாளி வர்க்கத் தலையீட்டுக்கு முழுமனே எதிர் என்பது நன்கு தெளிவாகி உள்ளது இத்துரோகத் தலைவர்களின் கடைகெட்ட காட்டிக்கொடுப்பின் அடிப்படையில் யுத்தத்தினை கட்டவிழ்த்துவிட்டு, சர்வாதிகாரத்துக்கு தயாராகுவதன் மூலம் தொழில், சம்பளம் வாழ்க்கை தரம், உதவிமானியங்களை நாசமாக்கும் யூ. என் பி அரசாங்கத்தினை துரத்தியடிக்கும் பொருட்டு தமது முழு, கைத்தொழில், அரசியல் பலத்தினை பயன்படுத்த தொழிலாள வர்க்கம் முன்வர வேண்டும் தொழிலாள வர்க்கம், இனவாத யுத்தத்துக்கு எதிராக வட — கிழ் மாகாணங்களில் இருந்து இராணுவத்தினை அப்புறப்படுத்தவும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஊர்ஜிதம் செய்யவும் கிராமப்புற ஏழைமக்களிற்கு எதிரான ஒடுக்குமுறைக்கு எதிராகவும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் உலக வங்கி — யூ. என். பி. தாக்குதல்களுக்கு எதிராக தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரத்தினை காக்கும் பொருட்டு பொது வேலைநிறுத்தத்துக்கு தயார் செய்யும் போராட்டத்தில் உடன் ஈடுபடவேண்டும்.

இலங்கைத் தொழிலாள வர்க்கம் ஆரம்பிக்கும் அத்தகைய ஒரு போராட்டம். வட — கிழ் மாகாணத் தொழிலாளர்களையும் ஏழைகளையும் ஒரேபடியாகப் போராட்டத்தின் முன்னணிக்குக் கொணரும். இந்தியத் துணைக் கண்டத்தில் தொழிலாள வர்க்கத்தின் ஒத்துழைப்பினை கோருவதும், உலகத் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியத்தினை உறுதிசெய்வதும் இப்போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்ல அவசியமான நிபந்தனைகளாகும்.

தொழிலாள வர்க்கத்தின் இத்தலையீட்டின் அவசியத்தினை யுத்தத்தில் கழிந்து செல்லும் ஒவ்வொரு நாளும் வலியுறுத்திக் கொண்டுள்ளது. தலைவர்களின் கடைகெட்ட காட்டிக்கொடுப்புக்களின் மத்தியில் யுத்தத்தின் நெருக்குவாரத்தினை. கணக்கில் எடுக்காமல் தொழிலாள வர்க்கம் பாராட்டத்தில் குதிக்க தனது தயார் நிலையை வெளிக்காட்டியுள்ளது பொகவந்தலாவையில் 32,000 தோட்டத் தொழிலாளர்களின் வேலைநிறுத்தம் இதற்குப் புதிய உதாரணமாகும். தலைவர்கள் போட்டுள்ள கால்கட்டுக்களுக்கும், நாசகார நடவடிக்கைகளுக்கும் எதிராக திடசங்கற்பத்துடன் தொழிலாள வர்க்கத்தினை போராட்டத்துக்கு அணிதிரட்ட வேண்டும்

சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, இ.தொ.கா அமைப்புக்களின் கேவலம் தலைவர்கள் யுத்தத்துக்கு வழங்கும் உதவியை உடன் நிறுத்தும்படியும் அரசாங்கத்துடனும் முதலாளித்துவ கட்சிகளுடனும் கொண்டுள்ள கூட்டுக்களை உடைக்கும்படியும் மேற் சொன்ன கோரிக்கைகளின் அடிப்படையில் பொது வேலை நிறுத்தத்துக்கு உடன் தயாராகும்படியும் இத்தலைமைகளை இவ்வமைப்புக்களின் அங்கத்தவர்கள் கோரவேண்டும் என பு. க. க. கேட்டுக்கொள்கிறது.

இத்தலைவர்களை நொருக்குவதுடன் தொழிலாள வர்க்கம் நின்றுவிட முடியாது. அவர்களின் பிடிகளை உடைத்து. போராட்டத்தினை ஒழுங்கு செய்ய வேண்டும் மேற் சொன்ன கோரிக்கைகளின் அடிப்படையில் பொது வேலை நிறுத்தத்தினை ஏற்பாடு செய்யுமாறு கோரும் பிரமாண்டமான பிரச்சாரத்தில் இணையுமாறும், இப்போராட்டத்துக்கு எதிரான தலைவர்களை தொழிலாளர் இயக்கத்தில் தோற்கடிக்கும்படியும், தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டும் புரட்சித் தலைமையை நிலைநாட்ட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தில் இணையுமாறும் வர்க்க நனவுள்ள சகல தொழிலாளர்களையும் வேண்டுகின்றோம்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

## அமெரிக்க மத்திய...

யில் இராந்து தனது பிற்போக்கு ஆட்சியைப் பாதுகாக்க மேற்கொண்ட நடவடிக்கையே அன்றி 'குவைட்டினை விடுதலை' செய்யும் ஒரு தலையீடு அன்று. அத்தகைய ஒரு தலையீட்டுக்கு இந்த ஆட்சிக்கு அருகதையும் இல்லை ஹுசேன் ஆட்சி. ஏகாதிபத்தியத்தின் ஒரு கைப் பொம்மை. ஹுசேன் ஆட்சியின் தலையீடு அந்நாட்டு தொழிலாளர்களுக்கும் ஏழைகளுக்கும் எதிரான தலையீடாகும்.

மத்திய கிழக்கில் ஏகாதிபத்தியபிடியையும் அதன் நிர்வாகத்தினையும் பராமரிக்கும் பொருட்டு திணிக்கப்பட்ட சியோனிச இஸ்ரேல் அரசினை தூக்கி வீசுவதும் நிலமானித்துவ ஆட்சிகளை தூக்கி வீசுவதும் அரபு நாடுகளை ஐக்கியப்படுத்துவதும், ஜனநாயகப் பணிகளை இட்டு நிரப்புவதும் தேசிய முதலாளி வர்க்கத் தலைவர்கள் சாதிக்க முடியாது. இது இப்பிராந்திய தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் இரத்தத்தினால் எழுதப்பட்டுள்ளது சோவியத் ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் இப்பிராந்திய மக்கள் கிளர்ச்சிகளுக்கு எதிராக இந்த முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு முண்டு கொடுத்து வந்தனர். ஈராக் முதலாளித்துவ ஆட்சியாளர்களின் பிரதான முண்டுகால் சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவமே.

இன்று சோவியத், சீன அதிகாரத்துவம் குவைட் ஆக்கிரமிப்பினை எதிர்க்கும் தோரணையில் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் பின்னால் அணிதிரண்டுள்ளன அராபிய முதலாளி வர்க்கம் பாலஸ்தீன விடுதலைப் போராட்டத்தினை காட்டிக் கொடுத்தமையும்,

(8-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



## பொகவந்தலாவை

# போராட்டம் காட்டிக் கொடுக்கப்பட்டதற்கு தொழிலாளர் எதிர்ப்பு வலுக்கிறது

ஜூலை 30—ஆகஸ்ட் 3 வரை பொகவந்தலாவையில் இடம் பெற்ற 32,000 தொழிலாளர்கள் பங்கு கொண்ட வேலை நிறுத்தப் போராட்டம் நிர்வாகம் வழங்கிய மோசமான வாக்குறுதிகளை தொடர்ந்து தொழிற் சங்கத்தலைவர்களால் கைவிடப்பட்ட போதிலும் எந்தவொரு கோரிக்கையும் (விபரத்தினை இப்பத்திரிகையின் 2ம் பக்கத்தில் பார்க்க) நிறைவேற்றப்படவில்லை. இதனால் கொதிப்படைந்த தொழிலாளர்களுக்கு மெதுவாகவேலை செய்யும் வேலைத்திட்டத்தினை வழங்கிய தலைமைகள் அதனையும்—4 நாட்களின் பின்னர் — ஆகஸ்ட் 25ல் கைவிட்டனர்.

சகல தொழிற்சங்கத்தலைவர்களும் பங்கு கொண்ட இக் காட்டிக் கொடுப்புக்கு எதிராக தொழிலாளர்களிடையே பெரும் எதிர்ப்பு வளர்ச்சி கண்டுள்ளது. அரசினதும், தோட்ட நிர்வாகிகளதும் ஒடுக்குமுறைகளுக்கு மத்தியிலும்தொழிலாளர்களுக்குஎந்தவொருவேலை திட்டமும்வழங்காத அவர்களின் செயல் தொழிற்சங்க உறுப்பினர்களை கொதிப்படையச் செய்துள்ளது.

எமது நிருபருடன் பேசிய பிரிட்வேல் குறுப், செல்வகந்த தொழிலாளர்கள் பின்வருமாறுகுறிப்பிட்டனர்: ''தோட்டத் தொழிலாளர்கள் குடும்ப ஜீவியத்தினை 100அடி சுற்றளவு கொண்ட அறைகளுள் கழிக்க வேண்டி உள்ளது இத்தகைய ஒரு அறையுள் மட்டும் 5, 10 குடும்பங்கள் ஜீவிக்கின்றன. பிள்ளைகள் கல்யாணமான பின்பும் இருப்பதும் இந்த அறைகளுக்குள்ளேதான் இங்குதண்ணீர் வினியோகமோ அல்லது மலசலகூட வசதிகளோ இல்லை உழுத்துப்போன முகட்டினைத் கொண்ட அறையினுள் வடிந்தோடும் மழை ஈரத்தினுள் நாம் முழு இரவினையும் போக்க வேண்டியுள்ளது.'' என்றனர்.

தமது லயன்களில் இடமில்லாததால் அருகிலுள்ள மாட்டு மடுவங்களில் 10 மாதங்களுக்கு மேலாகச் ஜீவியத்தினை ஓட்டும் தொழிலாளர்களும் கூட இங்கு உள்ளனர். ரவி எனப்படும் இத் தொழிலாளியை இந்த மாட்டு மடுவத்தில் இருந்தும் வெளியேறும்படி உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிகிறது.

''மனேஜர் ஒரு தனியார் அவரின் வேலைக்கு 15 தொழிலாளர்கள் இருக்கிறார்கள். 15–20 அறைகள் கொண்ட வீடு உண்டு. ஆனால் நாங்களோ — 6—7 குடும்பத்தினர் 100 சதுர அடி கொண்ட அறையுள் ஜீவிக்க வேண்டியுள்ளது'' என அவர்கள் முறைப்பட்டனர்.

குழந்தைகளுக்கான உதவிப் பணமும் பிரசவ உதவியும் நிறுத்தப்பட்டுள்ளன. பிரசவ விடுமுறை 14 நாட்கள் நிறுத்தப்பட்டுள்ளது கட்டப்பட்ட வீடுகள் உயர்தர ஊழியர்களுக்கே வழங்கப்பட்டு வருகின்றன. நாங்களோ இந்த 'மாட்டு மடுவங்களிலேயே, ஜீவியத்தினை கழிக்க வேண்டியுள்ளது என அவர்கள் எமது நிருபர்களிடம் காட்டினர்.

### பாதுகாப்பு நிதி

பாதுகாப்பு நிதிக்கு பலாத்காரமாக நிதி கழிக்கப்படுகிறது. கோவிலுக்சென்று ஒரு தொழிலாளியிடம் ரூபா 40/– வெட்டப்படுகிறது. இங்ஙனம் இலட்சத்துக்கும் அதிகமான பணம் வெட்டப்படுவதற்கும் தொழிலாளர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இ. தொ. கா, ஜ. தொ. கா, சி. பி. டபிள்யூ. என். சி டபிள்யூ' முதலான அமைப்புக்களின் தலைவர்கள் 10 ஆண்டுகளுக்கு மேலாக இந்தப் பிரச்சினைகளை தீர்ப்பதாக வழங்கிய வாக்குறுதிகள் தொழிலாளர்களை தவறான வழியில் திசை திருப்பவே உதவியுள்ளன என்பதை அவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். சொண்டமானில் இருந்து பிரிந்து சமீபத்தில் மலையக மக்கள் முன்னணியை அமைத்த சந்திரசேகரனின் நிலைப்பாடு இதில் இருந்து வேறுபட்டதில்லை. என்பது அம்பலமாகி உள்ளது.

கடந்த மே மாதத்தில் பொலிசாரால் கைது செய்யப்பட்ட வேளையில் சந்திரசேகரன், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும், பெருந்தோட்டத் கைத்தொழில் அமைச்சருமான ரஞ்சன விஜேரத்னவுடன் சந்திரசேகரன் பேச்சுவார்த்தைக்கு ஓட்டியதை தொழிலாளர்கள் மறந்துவிடவில்லை.

''இவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக பேச்சுவார்த்தைகள் மூலம் கோரிக்கைகளைபெற்றுத் தருவோம் என கூறி வந்தார்கள். இன்றும் அதைத்தான் கூறுகிறார்கள். ஆனால் தோட்ட நிர்வாகியோ காசு இல்லை என்கிறார். இந்நிலையிலேயே 32000 தொழிலாளர் ஒன்றிணைந்து வேலைநிறுத்தம் செய்தோம். ரஞ்சன் விஜேரத்தினவை சந்தித்த இச்சகல தொழிற் சங்கத் தலைவர்களும் எங்களை வேலைக்குத் திரும்பச் சொன்னார்கள். ஆனால் எங்கள் பிரச்சினை வரவர உக்கிர மடைகிறது.''

தோட்டப்பகுதியில் சகல பொருட்களதும் விலைகள் பெரும் அளவில் அதிகரித்துள்ளன. ஒரு கிலோ அரிசி 15 ரூபாவையும் தாண்டி விட்டது ஒரு வேளை சாப்பாடு ரூபா 18—20 ஆகிவிட்டது. ஆனால் தோட்டத் தொழிலாளியின் ஒரு வேளை சம்பளம் ரூபா 40/– மாதத்துக்கு வேலை நாள் 20 மட்டுமே. இன்று குடும்பத்தில் இருவருக்கு மேல் வேலை கிடைப்பதில்லை

நாட்டின் முழுத் தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் முதலாளித்துவ வர்க்க ஆட்சிக்கும் அவர்களின் இனவாத யுத்தத்துக்கும் எதிராகப் பயணம் செய்யத் தொடங்கி உள்ளதை பொகவந்தலாவை தோட்டத்தொழிலாளர்களின் இந்தப் போராட்ட இயக்கம் காட்டியுள்ளது முதலாளித்துவநெருக்கடியை தீர்க்கவோ அல்லது அவர்கள் யுத்தத்தினை வெல்றெடுக்க வா ஒரு சதமோ அல்லது ஒரு ஆளோ கொடுக்க தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள் தயார் இல்லை.

இந்நிலைமைக்கு எதிராக இ. தொ. கா. தலைவர் எஸ். தொண்டமான நேரடியாக யூ. என். பி. அரசாங்கத்தினுள் முழு மூச்சுடன் சதி செய்வதோடு, தொண்டமனுக்கு எதிர் எனக் கூறி தீவிரவாத வசனங்களை உச்சாடனம் செய்யும மலைய மக்கள் முன்னணியின் சந்தி சேகரனும், சம சமாஜ—ஸ்டாலினிட், நவசம சமாஜ தலைவர்களும் இனவாத யுத்தத்துக்கு எதிராக பொதுவேலைநிறுத்தம்வளர்ச்சி அடையும் என கிலியடைந்து போயுள்ளனர். பொகவந்தலாவை தொழிலாளர் போராட்டத்தை குழப்பியடித்து கைவிட்டதன் காரணம் அதுவே.

● அரசாங்கத்தின் தமிழர் விரோத யுத்தத்துக்கு ஒரு சதமும் உதவி வழங்காதே!

● முதலாளித்துவ அரசின் தாக்குதலுக்கு எதிராக பொது வேலை நிறுத்தத்துக்கு ஏற்பாடு செய்!

தொழிலாள வர்க்க ஆட்சி அதிகாரத்துக்கான போராட்டத்தினை நோக்கி நடைபோட அத்தகைய சுயாதீனமான வர்க்க நடவடிக்கை அவசிய

## அமெரிக் . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இறுதியில் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவர் யசீர் அரபாத் சியோனிச இஸ்ரேல் அரசினையும் அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்களையும் அரவணைத்துக் கொண்டாடியும் 'தேசிய முதலாளி வர்க்கத்தின்' எதிர்ப்புரட்சி தன்மையை நன்கு அம்பலப்படுத்தியுள்ளது.

தொழிலாள வர்க்கத் தலைமையின் கீழ் இப்பிராந்திய ஏழைகளை அணிதிரட்டி உலகத் தொழிலாள வர்க்கத்துடன ஐக்கியத்தினை உறுதி செய்வதன் மூலம் தொழிலாள வர்க்க சர்வாதிகாரத்தினை அமைப்பதன் மூலம் மட்டுமே ஜனநாயகப் புரட்சியின் பணிகளை பூர்த்தி செய்ய முடியும். இதன் அர்த்தம், உலகச் சோசலிசப் புரட்சியின் ஒரு பாகமாக அகில அரபு சோசலிச குடியரசுகளின் ஒன்றியத்தினை நிறுவும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடுவத.

இன்று மூன்றும் உலக யுத்தத்தின் ஒரு பாகமாக அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் நடாத்திவரும் யுத்ததயாரிப்புக்கள் அரபிய ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியததின் பின்னால் அணிதிரண்டு வரும் நிலையிலேயே நடைபெறுகின்றது. இந்நிலையில் சோசலிச ஒன்றியத்தினை நிறுவும் வேலைத்திட்டத்துக்கான போராட்டத்தின் பெரும் அவசியம் ஏற்பட்டுள்ளது

மத்திய கிழக்கில் இந்தயுத்த தயாரிப்புக்களின் மத்தியில் அனைத்துலகத குழுவின் கிளைகளை இந்நாடுகளில் கட்டி எழுப்ப தொழிலாளர் ஏழைகளை அணிதிரட்டுவது அரதியாவசியம். மத்திய கிழக்கு யுத்த நெருக்கடியைத் தொடர்ந்து அமெரிக்க காலனித்துவ நாடுகளின் முதலாளி வர்க்கம சட்டியில் இருந்து அடுப்பினுள் விழுந்துளளது. இலங்கை முதலாளித்துவ வர்க்கம், யுத்த ஆக்கிரமிப்பின் உக்கிரமிப்பை தொடர்ந்து அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் கைக்கூலிகளாக தோன்றியுள்ளனர். இலங்கையில் இந்தப் பிற்போக்கு ஆட்சியை தூக்கி வீச தொழிலாள வர்க்கத்தினையும். ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையின் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்துடன் இணையுமாறு வேண்டுகின்றோம்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் எதிர்ப்புரட்சி யுத்த தயாரிப்புக்களுக்கும், சிவில் யுத்த தயாரிப்புக்களுக்கும் எதிராக அமெரிக்க தொழிலாள வர்க்கத்தினை அணிதிரட்டும் போராட்டத்தில் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கு ஆதரவான வேர்க்கஸ் லீக் ஈடுபட்டுள்ளது.

● மத்திய கிழக்கில் இருந்து அமெரிக்கப் படைகளை வெளியேற்று!

● ஐக்கிய சோசலிச அரபு குடியரசு ஒன்றியத்துக்காகப் போராடு!

## சம்பியன் தோட்ட இளைஞன் பொலிசாரால் சுட்டுக்கொலை

பொகவந்தலாவை கலபட பிரதேசத்தினைச் சேர்ந்த சம்பியன் தோட்ட இளைஞர் சந்திரசேகரன் 16 வயதான இந்த இளைஞன் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டு 8 மாதங்கள் கழிந்துவிட்டன. வீதியில் நடந்து கொண்டிருந்த வேளை இடம்பெற்ற இக்கொலை பற்றிய உண்மை நிலையை வெளிக் கொணரும் எந்தவொரு பிரச்சாரத்தினையும் நடாத்த இ. தொ. கா. தொண்டமான் தலைமையும் மற்றும் தலைவர்களும் பறுத்து வருகின்றன இதனால் தோட்டத்துறையில் இடம்பெற்றுவரும் அரசபடைகளதும் குண்டர்களதும்தாக்குதல்களுக்கு தொழிலாளர்கள் நாளாந்தம் பலியாகி வருகின்றனர் இந்நிலையில் தொண்ட



மான—மசலைச்ச மி தலைமை மலையகத்தை வட-கிழ் மாகாணத்தின் யுத்த நிலையுடன் ஒப்பிட்டு. 'பாதுகாப்பு அமைதிப் பிராந்தியம்' என உண்மைக்கு புறம்பான பொய்ப்பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளது. தோட்டங்களில தொழிலாளர் பாதுகாப்பை உறுதி செய்யும் தொழிலாளர்பாதுகாப்பு அணிகளின் அவசியம் தினமும் வலுத்து வருகின்றது


**Neue Arbeiterpresse-Treff**

**Frankfurt/Main**
Jeden zweiten
Mittwoch, 19 Uhr,
Bürgertreff Bornheim,
Raum 6
Saalburgstr. 17
(U4 bis Bornheim Mitte)
Nächster Termin: 24.10.

**Chemnitz**
Jeden Mittwoch
18 Uhr
Haus der
Jugendverbände
(3. Etage)
Bahnhofstr. 2

**Berlin-Prenzlauer Berg**
Jeden Freitag, 18 Uhr
Klub der
Volkssolidarität
Eberswalderstr. 1

**Bochum**
Freitag, 19.10. und
2.11. um 19 Uhr 15
Gaststätte Ahorneck,
Rottstr.

**Stuttgart**
Donnerstag, 18.10.
und 15.11. um 19 Uhr
Jugendhaus Mitte
Raum"Schiller"
Hohe Straße

**BSA-Büro Berlin**

Unser Ostberliner Büro ist telefonisch jeden Donnerstag zwischen 19 Uhr und 21 Uhr unter folgender Nummer zu erreichen: 2813069


படிப்பகம்

# தொழிலாளர் பாதை

விலை 1-50

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தின் மாத வெளியீடு

இதழ் எண் 34 ★ ஜூலை, 1990 ★


**சோசலிச தொழிலாளர் கழகம்**

**பொதுக்கூட்டம்**

தமிழீழ மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இனவாத யுத்தமும், இந்திய தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர கடமையும்!

தண்டையார்பேட்டை மணிக்கூண்டு அருகில்

ஆகஸ்ட் 18 சனி மாலை 6-30 மணி

## மத்திய கிழக்கு நாடுகளில் கை வைக்காதே!

# அமெரிக்க, உலக ஏகாதிபத்தியங்களை தோற்கடி!

# அமெரிக்க, அரபு மற்றும் உலகத் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்து!

மத்திய கிழக்கில் அமெரிக்க மற்றும் உலக ஏகாதிபத்தியத்தின் இராணுவத் தலையீட்டை நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகம் கண்டனம் செய்கிறது. பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஜப்பானின் ஆதரவுடன் புஷ் நிர்வாகம் ஒரு காட்டுமிராண்டித் தனமான ஏகாதிபத்திய யுத்தத்தை தொடங்குகிறது. அதனுடைய நோக்கம் மத்திய கிழக்கு எண்ணெய் வளங்களின் மீது ஏகாதிபத்திய சக்திகளின் வரம்பில்லா ஆதிக்கத்தை மீண்டும் திணிப்பதே. விமானம் தாங்கி கப்பல்களையும், ரகசியகுண்டு வீசிகளையும், ஏவுகணைகளைக் கொண்ட போர்க் கப்பல்களையும் லட்சக்கணக்கான துருப்புகளையும் அமெரிக்கா குவிப்பது பாரசீக வளைகுடாவில் வாழும் அராபிய மக்களை ஒழித்துக்கட்டவும் எக்ஸன், மோபில், டெக்சாகோ, ஷெல், மற்றும் பிரிட்டிஷ் பெற்றோலியம் போன்றநிறுவனங்களின் லாபங்களை பாதுகாப்பதற்குமாகும். வெள்ளிக்கிழமை (ஆகஸ்ட் 3) தொடக்கம் வெள்ளைமாளிகையில் இருந்து வரும்சில தொலைபேசி அழைப்புகளினால் தான் மத்திய கிழக்கில் பிரமாண்டமான ஏகாதிபத்திய கப்பற்படைகொண்டு வரப்பட்டிருக்கிறது என்று யாரும் நம்பக்கூடாது. அவ்வாறுநம்புபவர் சாதுர்யமில்லா தவராகவே இருக்க முடியும். 1973-74ல் ஏற்பட்ட முதலாவது எண்ணெய் விலை "அதிர்ச்சி"யிலிருந்துபாரசீக வளைகுடாவில் இராணுவத் தலையீட்டுக்காக அமெரிக்க ஏகாதிபத்தியம் வரிசைக்கிரமமாக தயார் செய்துவருகிறது அடுத்தடுத்து வந்தநிர்வாகங்கள் துரித நடவடிக்கை படைகள் மற்றும் "சீக்கிரநடவடிக்கை" படைகள் ஆகியவற்றை உருவாக்கின. கடந்த பத்தாண்டுகளாகஎகிப்தில் பாலைவன, போர்க்கலையில் அமெரிக்கப்படைகள் பயிற்சி பெற்று வருகின்றன தற்போதைய நெருக்கடியானது அமெரிக்காவினால், எண்ணெய் ஏற்றுமதி நாடுகளில் உள்ள (opec) அதன் பொம்மைகளினால்-குவெய்த், சௌதி அரேபியா, ஐக்கிய அரபு ராஜ்யங்கள்-ஆகியவற்றினால் வேண்டுமென்றே தூண்டிவிடப்பட்டதாகும். அவர்கள் எண்ணெய் விலைகளின் உயர்வுக்கான அனைத்து முயற்சிகளையும் தடை செய்தனர். இதனால் ஈராக், ஈரான் போன்ற நாடுகளை திவால் நிலைமைக்கு தள்ளும் அச்சுறுத்தலை உண்டு பண்ணின. குவெய்த்மீதான ஆக்கிரமிப்பு பற்றி புஷ் நிர்வாகம் "அதிர்ச்சி" அடைந்ததாக தெரிவித்தது. ஆனால் இதுபற்றி சி.ஐ.ஏ. கொடுத்த அறிக்கையின்மூலமாக அது ஏற்கனவே நன்கு அறிந்திருந்தது சதாம் குசெயினின் இராணுவ நடவடிக்கையை வரவேற்றது. காரணம் அதை ஒரு சாக்காக பயன்படுத்தி அந்தப்பிராந்தியத்தில் உள்ள அனைத்து முதலாளித்துவ தேசியவாத ஆட்சிகளுடனும் கணக்கு தீர்த்துக்கொள்வதற்காகவாகும்.

மத்திய கிழக்கு நெருக்கடியில் உள்ளடங்கி இருப்பது மேலும் விரிவான இராணுவமோதல்களுக்கான வித்துகளாகும். இருபதாம் நூற்றாண்டின் முதல் பாதியில் மனித இனத்தை இரு உலக யுத்தத்திற்குள் இழுத்து சென்ற முதலாளித்துவ அமைப்பானது, ஒரு புதிய ஏகாதிபத்திய இரத்த வெள்ளத்தை தோற்றுவிக்க தயாராகிறது. ஏகாதிபத்தியம் சம்பந்தமாக ஸ்டாலினிச அதிகாரத்துவம் எந்த ஒரு எதிர்ப்பையும் கைவிட்டதானது "உலகசமாதானத்தின்" ஒரு புதிய சகாப்தத்தை அர்த்தப்படுத்துகிறது என்ற கருத்தை கடந்த ஆறு மாதங்களாக முதலாளித்துவ செய்தி சாதனங்கள் பரப்பி வந்தன. ஸ்டாலினிசம் உடைந்து சிதறியதானது இரண்டாம உலக யுத்தத்தின் பிற்கால அனைத்து ஏற்பாடுகளின் வீழ்ச்சியையும் அரசியல், ராணுவ மோதல்களின் ஒரு புதிய காலத்தையும் குறிக்கிறது என்று நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழு தொடர்ந்து எச்சரிக்கை செய்து வந்துள்ளது.

மத்திய கிழக்கில் அமெரிக்க தலையீடு ஒரு வரலாற்று 'நதியுற்பத்தி ஸ்தானப்பிரதேசமாகும்' வியட்நாமுக்கு பின்னர் மிகப்பெருமளவில் இராணுவ நடவடிக்கையில் ஈடுபடுத்த ஏற்கனவே 50,000 க்கும் மேற்பட்ட அமெரிக்கத் துருப்புக்கள் சவூதி அரேபியாவில் நிறுத்தப்பட்டுள்ளன. இந்த ஆக்கிரமிப்பானது அப்பிராந்தியத்தை ஒரு "நீடித்த கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதற்கான தொடக்கமே என்பதை புஷ் நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளது. அதேசமயம் லிபேரியாவில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தில் தலையிடுவதற்காக அமெரிக்க துருப்புகள் அங்கே வந்து இறங்கியுள்ளன. கடந்த டிசம்பரில் பனாமாவை அமெரிக்க ராணுவத் துருப்புகள் ஆக்கிரமித்தன. அவை அங்கே தொடர்ந்து இருக்கின்றன. இதர அமெரிக்க படைப்பகுதிகள் "போதை வஸ்துகளுக்கு எதிரான யுத்தம்" என்ற போர்வையில் பொலிவியா, பேரு மற்றும் கொலம்பியாவில் தலையிட்டு உள்ளன, ஒவ்வொரு கண்டத்திலும், அமெரிக்க ஆளும் வர்க்கமானது அதன் பூகோள நலன்களை காப்பாற்றுவதற்காக பெருமளவில்பலாத்கார நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ளது. முன்னெருபோதும் கண்டிராத வகையில் உலகமானது அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு எழுச்சியை நேருக்குநேர் பார்க்கும் நிலைமைக்கு வந்துள்ளது.

ஈராக்கிற்கு எதிராக நியுகிளியர் ஆயுதங்களைபயன்படுத்துவது சம்பந்தமாக முதலாளித்துவ பத்திரிகைகளில்வளர்க்கப்படும் ஊகங்கள் பற்றி ஒரு சிறப்பு எச்சரிக்கை செய்யப்படவேண்டும். அமெரிக்காவிடம் இருப்பதைவிட மிகக் குறைந்தளவு எண்ணிக்கையில் இரசாயன ஆயுதங்களை கொண்டுள்ள ஈராக் சம்பந்தமாக செய்யப்படும் வெறித்தனமான பிரச்சாரம் ஒரு நோக்கத்தை கொண்டதாகும். அது ஒடுக்கப்படும் அரைக்காலனித்துவ நாட்டு மக்களுக்கு எதிராக நிர்வாகம் தனது நியுகிளியர் வெடி ஆயுதங்களை பரீட்சிப்பதற்கு முன்னதாகவே அதற்கு ஆதரவாக ஒரு பொதுஜன அபிப்பிராயத்தை தோற்றுவிப்பதற்காகும். ஹிரோசிமா, நாகசாகி சம்பவங்களின் 45 வருடங்களின் பின்னர் மீண்டும் ஒரு முறை அமெரிக்க ஏகாதிபத்தியமானது கோடிக்கணக்காக இல்லாவிடினும் லட்சக்கணக்கான பாதுகாப்பற்ற அப்பாவி மக்களுக்கு எதிராக நியுகிளியர் தீயை தயார் செய்கிறது

காலனி ஆதிக்கம் சம்பந்தமாக தமது உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதற்கான சந்தர்ப்பமாக அனைத்து பெரிய ஏகாதிபத்திய சக்திகளும் மத்திய கிழக்கு நெருக்கடியை பார்க்கின்றன. அமெரிக்கா தலைமையிலான கப்பல் படையில் பிரிட்டனும் சேர்ந்துள்ளது. 1956க்கு பின்னர் முதல் தடவையாக சுயஸ் கால்வாய்க்கு கிழக்கே பிரிட்டிஷ் ராணுவ படைகள் சென்றுள்ளன. ஏற்கனவே பாரசீகவளைகுடாவில்பிரான்சின் யுத்தக்கப்பல்கள் நிற்கின்றன. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னர் முதல் தடவையாக ஐக்கிய நாடுகள் சபையின் போர்வையின் கீழ் ஜெர்மனி, ஜப்பான் இரண்டு நாடுகளுமே கடல் கடந்து ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடுவது பற்றி விவாதிக்கின்றன. ஏகாதிபத்திய "திருடர்களின் சமையலறை" என்ற உண்மையான அதன் பாத்திரத்தை ஐக்கிய நாடுகள் சபை வகிக்கிறது. இஸ்ரேல் தலையிடுவதன் சாத்தியம் சிறப்பாக அபாயகரமான ஒன்றாகும். அது ஏற்கனவே ஈராக்கிற்கு எதிராக நியுகிளியர் ஆயுதங்களை பயன்படுத்தப்போவதாக அச்சுறுத்தியுள்ளது. இஸ்ரேல் தனது விஸ்தரிப்பு திட்டங்களுக்கான ஒருபொன்னான சந்தர்ப்பமாக அமெரிக்க ராணுவப் படைகளின் வருகையை பார்க்கின்றது.

மத்திய கிழக்கில் தமது தலையீட்டை நியாயப்படுத்துவதற்காக புஷ் நிர்வாகம் பயன்படுத்தும் குளறுபடியான பொய்களை தொழிலாளர்கள் நிராகரிக்கவேண்டும். குவெயித்தில் "பொம்மை ஆட்சியை" ஈராக் ஏற்படுத்துவது ஏற்றுக்கொள்ள முடியாது என்று கொக்கரிக்கும் ஜனாதிபதி புஷ் கடந்த டிசம்பரில் பனாமா மீது 25,000 அமெரிக்க துருப்புகள் ஆக்கிரமிப்பு நடத்த உத்தரவிட்டு அந்த நாட்டில் அமெரிக்க சார்பு பொம்மை ஆட்சியை ஏற்படுத்தி உள்ளார். அமெரிக்க குண்டு வீச்சினால் ஆயிரக்கணக்கான பனாமியர்கள் கொல்லப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கானோர் இதுவரை

10 ம் பக்கம் பார்க்க

**காஷ்மீரிலிருந்து இந்திய ராணுவத்தை வாபஸ் வாங்கப் போராடு!**

**காஷ்மீரி தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை பேணு!**

www.padippakam.com



# மத்திய கிழக்கு நாடுகளில்.....

வில் வீடின் இருக்கின்ற "நெறிப் குண்டு" சம்பந்தமாக முதலைக்கண்ணீர் வடிக்கும் அமெரிக்க அரசாங்கம் கடந்த பத்தாண்டில் ஒன்றன் பின் ஒன்றாக சிறிய நாடுகள் மீது தாக்குதலை நடத்தியுள்ளது. 1989இலிருந்து நிகரகுவாமீது, 1983ல் கிரெனடா லெபனான்மீது 1985ல் லிபியா மீது 1989ல் பனாமா மீது.

யுத்தத்தை நாடும் அதன் வெறித்தனமான போக்கில் அமெரிக்க ஏகாதிபத்தியம் தான் உயர்த்திப் பிடிப்பதாக கூறும் ஜனநாயக கோட்பாட்டை ஏளனம் செய்கிறது மிக மோசமான பிற்போக்கு அரபு மன்னராட்சிகள்தமக்கு எதிரான அரசியல் இயக்கத்திற்கு மரண தண்டனை வழங்குபவர்கள் இவர்களுக்கு புஷ் நிர்வாகம் ஆதரவு அளிக்கிறது.

## ஸ்டாலினிசத்தின் பங்கு

அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்பை சாத்தியமாக்கும் முக்கியமான 'காரணி அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் சோவியத் அதிகாரத்துவம் ஒத்துழைப்பதாகும். யுத்தப் பிற்கால வரலாற்றில் நடக்காதது எதுவென்றால் மாஸ்கோவில் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் பேக்கரும், சோவியத் வெளிநாட்டமைச்சர் செவர்நாட்சேயும் கூட்டாக குவைத் மீதான ஆக்கிரமிப்பை கண்டித்து அறிக்கை வெளியிட்டதாகும். இது எடுத்துக் காட்டுவதாவது கோர்பச்சேவின் தலைமையின் கீழ் ஸ்டாலினிச அதிகாரத்துவ சோவியத்யூனியனுள் முதலாளித்துவத்தை மீட்டு அமைக்கும் அதன் திட்டத்தின் பகுதியாக அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கால் வருடியாக வெளிப்படையாகவே செயல்படும் அளவுக்கு சென்றுள்ளது என்பதையே. வளைகுடா நெருக்கடியில் வெளி இராணுவத் தலையீட்டை எதிர்க்கும் அறிக்கையை விட குறிப்பாகசெவர்நாட்சே மறுத்து விட்டார். ஈராக் மீது தடையைபோடும்ஏகாதிபத்தியபடைக்கு உதவியாக வரும்படி அமெரிக்கா சோவியத்யூனியனுக்கு அழைப்பு விடடுள்ளது. ஈராக்கிற்கு ஆயுத விற்பனைகளை நிறுத்த சீன ஸ்டாலினிஸ்டுகளும் உடன்பட்டுள்ளனர். ஈராக் மீது. ஒரு பொருளாதாரத் தடையை விதிக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின்தீர்மானத்திற்குவீட்டோ அதிகாரங்களை கொண்ட சோவியத்யூனியனும்,சீனவும் ஆதரவளித்தன. தொடக்கத்தில்ஆகஸ்ட் 3ல் ஈராக்கை கண்டனம் செய்யும் பாதுகாப்பு சபையின் வாக்கெடுப்பில் கியூபாவும் சேர்ந்து கொண்டது.

கடந்த 40 வருடங்களில் மத்திய கிழக்கில் இராணுவ தலையீடு செய்வது பற்றிய அமெரிக்கத்திட்டங்கள் அரபு முதலாளித்துவ ஆட்சிகளுக்கு சார்பான சோவியயூனியனின் தலையீட்டை கணக்கெடுக்க வேண்டி இருந்தது. இஸ்ரேலுக்கும், வளைகுடாவில் மன்னர் குடும்ப ஆட்சிகளுக்கும் எதிராக அரபுமுதலாளித்துவ ஆட்சிகளுக்கு சோவியத் யூனியன் இராணுவ உதவி அளித்து வந்தது. ஸ்டாலினிச வெளிநாட்டுக்கொள்கையின் அடிப்படையான அக்கறை மத்திய கிழக்கு உள்ளடங்கலாக முதலாளித்துவத்திற்கு எதிரான தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகரமான போராட்டங்களை தடுப்பதற்காகவே இருந்து வருகின்றது நாசாரிலிருந்து சதாம் குசெயின் வரையில் வரிசையாக பல முதலாளித்துவ தேசிய வாதிகளை சோவியத்அதிகாரதுவம் புகழ்ந்தது. அதே வேளை இந்தப் பிராந்தியத்தில்சோவியத்அதிகாரத்துவம் அதன் செல்வாக்கை அமெரிக்காவுடன் பேரம் பேசுவதற்கு பயன்படுத்திவந்தது எவ்வாறாயினும் ஏகாதிபத்தியத்திற்கும் ஸ்டாலினிசத்திற்கும் கெடுபிடி யுத்தநிலைமை நிலவும்போதுமுதலாளித்துவ அரசாங்கங்களும், தேசிய இயக்கங்களும் வளைந்து நெளிந்து செல்வதற்கு இடமிருந்தது. அது இப்போது போய்விட்டது. சோவியத் அதிகாரத்துவம் ஏகாதிபத்தியத்திற்கெதிரானபகட்டான எதிர்ப்பைக்கூட இப்போது கைவிட்டு ஒரு பிற்போக்கு வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அதனுடன் கூட்டுச் சேர்ந்துள்ளது வளைகுடா மன்னராட்சிகளின் பிரதேசங்கள் உள்பட அனைத்து தேசிய எல்லைகளையும் பாதுகாக்கிறது.

குவைத் மீதான ஆக்கிரமிப்பின் போது ஈராக் கவிழ்த்த தேசிய எல்லைகள் முதலாவது உலகப்போருக்குப் பின்னர் மத்திய கிழக்கை பிரிட்டிஷ பிரான்சு ஏகாதிபத்தியங்களுக்கு இடையில் பிரிப்பதன் மூலம் ஏகாதிபத்திய சக்திகளினால் ஏற்படுத்தப்பட்டவையாகும். குவைத் ஒரு தேசியஅரசுஅல்ல. அதுஅரபு மக்களுக்கு எதிரானநடவடிக்கைகளுக்கானதளமாகசேவை செய்வதற்காக பிரிட்டிஷ ஏகாதிபத்தியத்தினால் அகழ்ந்தெடுக்கப்பட்ட பகுதியாகும். யுத்த பிற்கால உடன்படிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த எல்லைகள் பேணப்பட்டு வருகின்றன, அரபு உலகத்தில் இருக்கும் மிக மோசமான பிற்போக்கு சமூக சக்திகளை கட்டிக்காப்பதற்காக அரை நிலப்பிரபுத்துவ மன்னராட்சிகள் பேணப்பட்டு வந்தன. அவை எண்ணெய் வளங்களை ஏகாதிபத்தியம் பயன்படுத்த அனுமதித்தன. 1961ல் முன்னைய ஈராக்அரசாங்கம் குவைத்தை இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கபோதுஎண்ணெய் வளம் நிறைந்த அந்த ராஜ்யத்தை காப்பாற்ற பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது துருப்புகளை அனுப்பியது. இப்போ அந்தப்பாத்திரத்தை அமெரிக்கா வகிக்கிறது

மத்தியகிழக்கு மோதலில் முக்கியமான 'பிரச்சினையுத்தப் பிற்கால தேசிய எல்லைக் கோடுகளை பாதுகாப்பதே என்று ஏகாதிபத்திய பேச்சாளர்கள் தெளிவபடுத்தியுள்ளனர். தற்போதைய நெருக்கடி இருபதாம் நூற்றாண்டு முழுவதும் மத்தியகிழக்கு நாடுகளை ஏகாதிபத்தியம் ஆதிக்கம் செய்து வருவதில் வேரூன்றி இருக்கிறது. அமெரிக்காவின் தலைமையில் ஏகாதிபத்தியசக்திகள் ஈராக்கிற்கு எதிராக அணிதிரள்வதை உலகம் முழுவதும் உள்ள வர்க்க நனவுள்ள தொழிலாளர்கள் எதிர்க்க வேண்டும். ஒரு ஒடுக்கப்படும் அரைக் காலனித்துவ நாடான ஈராக்கை பாதுகாக்க வேண்டும்.

ஈராக்கையும், மத்தியகிழக்கில் அரபு மக்களையும் பாதுகாப்பது என்பது சதாம் குசெயினின் முதலாளித்துவ தேசிய அரசாங்கத்திற்கு அரசியல் ஆதரவு வழங்குவது என்று அர்த்தப்படுத்தாது. வெறிக்கூச்சல்கள் என்னதான் இருப்பினும், ஏகாதிபத்தியத்திற்கு ... ஆட்சியாளர் உண்மையான அச்சுறுத்தலாக இல்லை. இந்தோனேசியாவின் சுகார்ட்டோவிற்கும் சிலியின் பினோசேயிற்கும் குறைவில்லாத எண்ணற்ற சர்வாதிகார ஆட்சிகளுடன் அமெரிக்காநட்புறவைபேணி வந்துள்ளது. உலக முதலாளிதகுவத்தின் உண்மையான கவலை என்னவென்றால் அரபு மக்களால் மிக வெறுக்கப்படும் குவைத் மன்னராட்சியை குசெயின் தூக்கி வீசிய சமயத்தில் அரபு நாடுகளில் சமூக நெருக்கடிகள் வளர்ச்சி அடைந்து வருகின்றன, இஸ்ரேலினுள் பாலஸ்தீனியர்களின் இன்ரிபாடா (எழுச்சி) அதிகரிக்கிறது. இவை அரபு ஆட்சியாளர்களின், அவர்களின் ஏகாதிபத்திய எஜமானர்களின் நலன்களை ஆபத்துக்கு உள்ளாக்கும் ஒரு புரட்சிகரமான வெடிப்பை உண்டு பண்ணலாம்'

கடநத 40 வருடங்களில் அரபுமுதலாளித்துவம தனது சொந்த தொழிலாளவர்க்கத்திற்கும் ஒடுக்கப்படும் விவசாயிகளுக்கும் தேசிய சிறுபான்மையினருக்கும எதிராக பெருமளவில் குரூரத்தை கட்டவிழ்த்துவிடும் திறனுடையது என்பதை நிரூபித்துள்ளது. தற்போதைய நெருக்கடியில் பெரும்பான்மையான அரபு அரசாங்கங்கள் அமெரிக்காவுடன் ஓரணியில் சேர்ந்துள்ளன. இதன் மூலம் ஏகாதிபத்தியததில் இருந்து சுதந்திரத்தைபெறப் போராடும அரபு மக்களின் வரலாற்றுப்போராட்டத்தை காட்டிக் கொடுத்துள்ளன.

## நிரந்தரப் புரட்சி

இப்படியான வரலாற்று அனுபவங்களின் படிப்பினைகளைஅரபுத் தொழிலாளர்கள் எடுத்துக்கொள்ள வேண்டும். ஏகாதிபத்திய ஆதிக்கத்தில் இருந்து தேசிய விடுதலை, முடியாட்சிகளையும் மன்னர் குடும்ப ஆட்சிகளையும்ஒழித்து அரபு தேசியத்தை ஐக்கியப் படுத்துவது அரபு பாட்டாளி வர்க்கத்தின் தலைமையின் கீழ் ஒடுக்கப்படும் விவசாயிகளையும் அணிதிரட்டி அரப, யூதத் தொழிலாளர்களுக்கு சம உரிமைகளை வழங்கும் மத்திய கிழக்கின் ஐக்கிய சோசலிச குடியரசுகளுக்காக போராடுவதன்மூலம்இதுசாத்தியமாகும். ஏகாதிபத்தியத்துடன் வெளிப்படையாகவே மாஸ்கோவும். பெய்ஜிங்கும் கூட்டு சேர்ந்திருப்பது அப்பிராந்தியம் முழுவதுவே ஸ்டாலினிசத்திற்கு அரசியல் ரீதியில் சாவுமணி அடிப்பதாக உள்ளது. அதே நிலைமையே சோவியத் அதிகாரத்துவத்தின் கூட்டை அடிப்படையாகக் கொண்டு தமது கொள்கையை வகுத்துக் கொண்ட முதலாளித்துவ தேசிய இயக்கங்களுக்கும் ஆகும். அரபு மக்களின் நம்பகமான கூட்டாளி சர்வதேச தொழிலாள வர்க்கம் மட்டும் தான் என்ற முடிவை வர்க்க நனவுள்ள அரபு தொழிலாளர்களும் அறிவு ஜீவிகளும் கிரகித்துக் கொள்ள வேண்டும். உலகப் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுநலன்களை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரே இயக்கமான அனைத்துலக குழுவின் தலைமையில் இயங்கும் நான்காம் அகிலத்தின் பக்கம் அவர்கள் திரும்ப வேண்டும்.

தற்போதைய மோதலின் உடனடி விளைவு எதுவாக இருப்பினும் அல்லதுதொடக்கப் போராட்டங்களின் விளைவாக வெளிப்படையான யுத்தம் வெடிப்பினும் மத்திய கிழக்கு நெருக்கடியானது புரட்சிகர பின்விளைவுகளைக் கொண்டுள்ளது. அது உலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடியை மேலும் ஆழப்படுத்தும். அமெரிக்காவுடன் இதர ஏகாதி பத்தியங்கள் ஐக்கியப்பட்டுள்ளதாக தோன்றுவது நீடிக்காது. அமெரிக்க இராணுவத் தலையீட்டுக்கு தோல்வியோ அல்லது ஸ்தம்பித்தநிலையோ ஏற்படுமாயின் அது ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையில் கசப்பான பகைமைகளை ஏற்படுத்தும். அமெரிக்காவிற்கு வெற்றி ஏற்படுமாயின் அது மத்திய கிழக்கு எண்ணெய்வளங்களை அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் அந்த அதிகாரத்தை வாஷிங்டன் பயன்படுத்தி அதன் பெரும் முதலாளித்துவ எதிராளிகளை சிறப்பாக ஜெர்மனியையும், ஜப்பானையும் பலவீனப்படுத்தும். அமெரிக்க கப்பற்படைகளினால் அவற்றின் எண்ணெய் விநியோகம் பாதுகாக்கப்படும் சலுகைக்காக ஒரு கனமான "வரி" அவர்கள் வழங்க வேண்டியிருக்கும் என்றுஎதிர்பார்க்கலாம். அமெரிக்க ஏகாதிபத்தியம் அதன் எதிராளிசளுடன் பொருளாதார போட்டியில் தோல்வியை தழுவிக் கொண்டிருக்கையில் அதன் இன்னும் மிதந்திருக்கின்ற இராணுவ பலத்தை மிக குரூரமாக பயனபடுத்தி உலக அளவில் சந்தைகளுக்காகவும லாபங்களுக்காகவும் நடைபெறும் போட்டியில் ஈடுபடும்.

மத்திய கிழக்கில் வெடித்துள்ள அரசியல், இராணுவ நெருக்கடியானது உலக டிராட்ஸ்கிச இயக்கமான நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் முன்நோக்குகளை ஊர்ஜிதப்படுத்தி உள்ளது. கிழக்கு ஐரோப்பிய ஆட்சிகளை பலவீனப்படுத்திய அந்த பொருளாதாரசக்திகள் யுத்தப்பிற்கால அனைத்து உடன்படிக்கைகளையும் தகர்த்து பெருமளவில் சமூக, அரசியல் மோதல்களை உண்டு பண்ணும் ஒரு புதிய கால கட்டத்தை ஏற்படுத்தும் என்பதை அனைத்துலகக்குழு வலியுறுத்தி வந்தது. தொடர்பு சாதனங்களிலும்கம்பியூட்டர் அமைப்புகளிலும் ஏற்பட்ட தொழில் நுட்பப்புரட்சியானது இணையற்ற முறையில் பூகோள மயப்படுத்தப்பட்ட உலக உற்பத்தி முறையை சாத்தியமாக்கி உள்ளது. இது உலக முதலாளித்துவத்தின் அடிப்படை முரண்பாடுகளை அதாவது உலக பொருளாதார வளர்ச்சிக்கும், முதலாளித்துவம்வளர்ச்சியுற்றதேசியஅரசு அமைப்புக்கும் இடையிலான முரண்பாடுகளை வலுவடைய செய்துள்ளது. உலக பொருளாதாரத்தின்முற்போக்கான வளர்ச்சிக்கு தேசிய அரசுகளின் எல்லைகளை அழித்து ஒழிப்பது அவசியமானது. ஆனால் இது உலக சோசலிசப் புரட்சியின் அடிப்படையில் தான் சாத்தியமானது அதன் மூலம் தொழிலாள வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றி முதலாளித்துவ லாப உற்பத்தி அமைப்பை அழித்து ஒரு திட்டமிடப்பட்ட உலகப் பொருளாதாரத்தையும், ஒரு உலக சோசலிச கூட்டாட்சியையும் உருவாக்கும்.

மத்திய கிழக்கில் அமெரிக்க இராணுவத் தலையீட்டுக்கான உந்துதலை வழங்கும் ஒருசக்தி வாய்ந்த துணைக்காரணி பொருளாதாரபின்னடைவும் அதனால் ஏற்படும் சமூக விளைவுகள் பற்றிய பீதியும்ஆகும். சேமிப்பு மற்றும் கடன்வழங்கும் நிதி நிறுவனங்களின் (S&L) வீழ்ச்சி எடுத்துக் காட்டுவது அமெரிக்க நிதி அமைப்பானது மிகவும் ஊழல்நிறைந்ததாகவும் ஒட்டுண்ணித்தன்மை ... கவும அழுகிப் போய் உளளது. ஒரு முக்கிய பொருளாதார வீழ்ச்சி அதன் கவிழ்ப்பை கொண்டு வரும். குவைத்துக்குள் ஈராக் புகுவதற்கு முன்னரே பொருளாதாரப் பின்னடைவிற்கான அறிகுறிகள் பன்மடங்கு அதிகரித்திருந்தன. ஒரு கடுமையான உள்நாட்டு நெருக்கடியிலிருந்து தப்புவதற்கு இராணுவ சாகசங்களில் ஆளும் வர்க்கம் ஈடுபடுவது முதல் தடவை அல்ல.

பாரசீகக்குடாவில் அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு ஆதரவாக அமெரிக்க ஜனநாயகக் கட்சியின் ஆதரவாளர்களும் ஓரணி சேர்ந்துள்ளனர். ஈராக் மீதான பெரும் தாக்குதலுக்கான அமெரிக்காவின் தயாரிப்புக்கு அவர்கள் முழு ஆதரவளிக்கின்றனர். ஜனநாயக கட்சியைச் சேர்ந்த வாய்ச்சவாடல்அரசியல்வாதியான ஜெசி ஜக்சனின் நிலைப்பாடு கவனிக்கத்தக்கதுசதாம குசெயினை கண்டனம் செய்த ஜக்சன் "அவன்எல்லைகளுக்கு விரட்டி அடிக்கப்படவேண்டும்" என்றும் அமெரிக்கா தனியாகவோ அல்லது கூட்டாகவோ இராணுவ சக்தியை பயன்படுத்த 'தயாராக இருக்கவேண்டும் என்றும் கூறியுள்ளார்.

நான்காம அகிலத்தின் அனைத்துலக குழுவும் அதனுடன் அரசியல் ஐக்கியம் கொண்டு அமெரிக்காவில் செயற்படும் டிராட்ஸ்கிச இயக்கமான வொர்க்கர்ஸ் லீக்கும் அரபு மக்களுக்கு எதிரான அமெரிக்க, உலகஏகாதிபத்தயங்களின் தலையீட்டை தோற்கடிக்க போராடுகின்றன. உலக டிராட்ஸ்கிச இயக்கம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து போராடுகிறது.

- முதலாளித்துவத்திற்கு எதிரான பொதுப் போராட்டத்தில் சர்வதேச தொழிலாளவர்க்கத்தின் ஐக்கியம்.
- இரண்டு முதலாளித்துவ கட்சிகளிலும் (ஜனநாயகமற்றும் குடியரசு கட்சிகள்) இருந்து அமெரிக்கத் தொழிலாளர்களின். அரசியல் சுதந்திரத்தைக் காக்க ஒரு தொழிற்கட்சியை கட்டுதல், ஒரு தொழிலாளர் அரசாங்கம் அமைக்கப் போராடல்.
- வங்கிகளையும், அடிப்படைத் தொழிற்துறைகளையும் முதலாளிகளுக்கு நஷ்டஈடுவழங்காது தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்கும் சோசலிசக் கொள்கைகளுக்காக போராடல். மத்திய கிழக்கில் அமெரிக்க யுத்தத் தயாரிப்புகளுக்கு எதிராக நாம் கோருவது:
- அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கெதிராக தொழிலாளர் இயக்கத்தை அணி திரட்டு! அப்பிராந்தியத்தில் இருந்து அனைத்து அமெரிக்க படைகளையும் வாபஸ் வாங்கக்கோரும் தீர்மானங்களை ஒவ்வொரு தொழிற்சங்க கிளைகளிலும் நிறைவேற்றல்! சவூதிஅரேபியா, இஸ்ரேல், எகிப்து மற்றும் மத்திய கிழக்கில் உள்ள அனைத்து பிற்போக்கு

★12ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



## சென்னையில் பொதுக்கூட்டம்

# 'தமிழீழ மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இனவாத யுத்தமும் இந்திய தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர கடமையும்'

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர்கழகம்' தமிழீழ மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரசின் இனவாத யுத்தமும் இந்தியத் தொழிலாள வர்க்கத்தின் 'புரட்சிகர கடமையும்' எனும் தலைப்பின்கீழ் 18—7—90 அன்று சைதாப்பேட்டை தேரடித்திடலில் பொதுக்கூட்டம் ஒன்றை நடத்தியது.

கூட்டத்திற்கு சென்னை பி. அண்டுசி ஆலையின் டிராட்ஸ்கிச தொழிலாளர் அணியின் செயலாளர் தோழர் மோசஸ் ராஜ்குமார் தலைமை வகித்தார், சிறிலங்கா இனவாத முதலாளித்துவ அரசு தமிழீழ தேசிய இனத்திற்கு எதிராக தொடுத்துள்ள யுத்தத்தையும் அதற்கு இந்திய முதலாளித்துவ அரசாங்கம் வழங்கும் ஆதரவை முறியடிக்க முன்வரவேண்டியது இந்திய தொழிலாள வர்க்கத்தின் புரட்சிகர கடமையாகும் என்று தோழர் மோசஸ் ராஜ்குமார் அவரது தலைமை உரையில் வலியுறுத்தி பேசினார், இந்திய ஸ்டாலினிச கட்சிகளான சி.பி.எம், சி.பி.ஐ தலைமைகள் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமையை எதிர்ப்பதையும், இந்தியாவிலும் இலங்கையிலும் முதலாளித்துவ அமைப்பைக்காக்க துணை புரியும் அவர்களது துரோக அரசியலையும் மோசஸ் அம்பலப்படுத்தினர். "எமது கட்சி ஓர் உலகக்கட்சி. அந்தவகையில் சிறிலங்காவினுள் புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் சிங்கள மொழி பேசும் தொழிலாளர் வர்க்கத்தையும் தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்தையும் ஐக்கியப்படுத்தி போராடி வருகிறது. புரட்சிகம்யூனிஸ்ட் கழகம்மட்டுமே பாட்டாளி வர்க்கசர்வதேசிய நிலைப்பாட்டில்இருந்து தமிழீழ தேசிய இனத்தின்சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து, அதற்காக சிங்களமொழி பேசும்தொழிலாள வர்க்கத்தின் மத்தியில் இந்தவேலைத்திட்டத்தைமுன்னெடுத்துப் போராடி வருகிறது. தமிழ்பேசும் மக்களது சுய நிர்ணய உரிமைக்கான போராட்டம் தமிழ் பேசும் தொழிலாள வர்க்கத்தின் தலைமையில், வர்க்க சுதந்திரத்தின்அடிப்படையில் முன்னெடுப்பதன் மூலமே வென்றெடுக்க முடியும் என்று போராடி வருகிறது.

இந்திய ஆக்கிரமிப்புபடை நிபந்தனைஇன்றி உடனடியாக வெளியேற்றப்பட வேண்டுமென்று போராடியது புரட்சி கம்யூனிஸ்ட் கழகமும், இந்தியாவில் உள்ள சோசலிசத தொழிலாளர் கழகமும் ஆகும் இந்திய ஆக்கிரமிப்புப்படை சிறிலங்காவில் நிலைகொண்டிருந்தபொழுது கோர்பச்சேவ், பீரங்கிப்பட்குகளை இந்தியாவுக்கு அளிக்கக்கூடாது என்று கோர்பச்சேவ் அமெரிக்காவிற்கு வருகை தந்த நேரம் ஆர்ப்பாட்டம்செய்தது அமெரிக்க டிராட்ஸ்கிச இயக்கமான வொர்க்கர்ஸ் லீக் என்று தோழர் மோசஸ் கூறினார்.

அடுத்துப்பேசிய சோசலிசத் தொழிலாளர்கழகத்தின்உறுப்பினரும்ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சங்க கமிட்டி உறுப்பினருமான தோழர் கைலாசம். தேசிய இனங்கள் ஒடுக்கப்படுவதற்கு துணைபோகும் இந்திய இலங்கை ஸ்டாலினிஸ்டுகள் தொழிற்சங்கப் போராட்டங்களிலும் முதலாளிகளின் ஏஜண்டுகளாக தொழிலாள வர்க்கத்தினுள் செயல்படுகின்றனர் இது அவர்களின் வர்க்க சமரசக்கொள்கையின் அடிப்படையிலான துரோகம் என்றார். முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக தொழிலாளவர்க்கம் நடத்தும் போராட்டத்தில், தொழிலாள வர்க்கம் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்ற வேண்டுமாயின் ஏழை விவசாயிகளின் ஒடுக்கப்படும் மக்களின் நியாயமானபோராட்டங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்தி தோழர் கைலாசம் பேசினார்.




சென்னை, சைதை தேரடி திடலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் ராம் உரையாற்றுகிறர். மேடையில் அமர்ந்திருப்போர் தோழர் கைலாசம் தோழர் மோசஸ் ராஜ்குமார்

இறுதியாக 'தொழிலாளர் பாதை' ஆசிரியர் குழுவைச் சேர்ந்த தோழர் ராம் பேசினர் அவர் பேசுகையில் குறிப்பிட்டது பின்வருமாறு :

தமிழீழ மக்களுக்கெதிரான சிறிலங்கா அரசின் இனவாத யுத்தம்தொடர்பாக முதலாளித்துவக்கட்சிகளும், ஸ்டாலினிச கட்சிகளும் கூட்டங்களை கண்டன ஆர்ப்பாட்டங்களை, ஊர்வலங்களை நடத்திவருகின்றன. அதற்கும உலக கட்சியான நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழு இந்தக் கூட்டத்தை நடத்துவதற்கும் வித்தியாசம் இருக்கின்றது. முதலாளித்துவக் கட்சிகளில் ஒருசாரார் இந்தியமுதலாளித்துவ அரசாங்கத்திற்கு கோரிக்கை விடுத்தும், மறுசாரார் இந்திய அமைதி கொல்லும் படையை வாபஸ் வாங்கியதே தவறு என்றும் கூறுகின்றனர். ஸ்டாலினிஸ்டுகளோ இந்திய இலங்கை உடன்படிக்கையை சரிவர அமல்படுத்தவில்லை என்கின்றனர். ஆனல் நான்காம் அகிலத்தின்அனைத்துலகக்குழு ஒன்றுதான் இந்தியத் தொழிலாளவர்க்கத்தைப் பார்த்துக் கோரிக்கை விடுக்கின்றது.

முன்பு இருந்த எம்.ஜி.ஆர். ராஜீவ்காந்தி அரசாங்கமாக இருந்தாலும் சரி, தற்போது இருக்கும் கருணாநிதி-வி.பி.சிங் அரசாங்கமாக இருந்தாலும் சரி தமிழீழ தேசிய இனத்தின் முதுகில் குத்துவதிலே குறியாயிருந்தனர். முன்பிருந்தவர்கள் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தைத் திணித்தனர் தற்போது இருப்பவர்கள் பாக்ஜலசந்தியில கடற்படைக்கப்பலை நிறுத்தி வைத்து இனவாத யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ள ஐ.தே. கட்சி (UNP) அரசாங்கத்தினருக்கு ஒத்துழைப்புத்தருகின்றனர். அந்த வகையில் முதலாளித்துவ தி.மு.க 20ஆம் தேதி பந்திற்கு அழைப்பு விடுத்துள்ளது, முன்னர்கூட முதலாளித்துவ அ.தி.மு.க அரசாங்கமும் இதே மாதிரி பந்த் ஒன்றை நடத்தியது. புறநிலைரீதியாக இப்பிரச்சினையானது, தொழிலாள வர்க்கத்தின் கைகளில் சென்றுவிடக்கூடாது என்பதில் எச்சரிக்கை கொண்டே இவ்வித 'பந்த்தினை' ஆளும் வர்க்கம் ஏற்பாடு செய்கிறது.

தேசிய இனப்பிரச்சினை என்பது ஏதோ சிறிலங்காவிற்கு மாத்திரம்தான் என நினைக்க வேண்டாம். காஷ்மீர், நாகா, பஞ்சாப் பிரச்சினைகள் இந்தியாவிற்குள்ளும் பலூச்சி சிந்தியர்களினது பிரச்சினை பாகிஸ்தானுக்குள்ளும் சக்மா பழங்குடிமக்கள்போராட்டம்பங்களாதேஷிற்குள்ளும் வெடித்துக் கொளுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கின்றன.

வரலாற்றுரீதியாக இந்தப் பிரச்சினையை ஆய்வு செய்வோமேயானல் லங்காசமசமாஜக் கட்சி-டிராட்ஸ்கிசத்தை கைவிட்டு திருத்தல்வாதக் கட்சியாக மாறுவதற்கு முன்னர் வடக்கு, கிழக்கு பகுதியில் அதற்கு தமிழ் பேசும் மக்களிடையேகணிசமானசெல்வாக்கு இருந்தது. ஆனல் 1964ல் இதே லங்காசமசமாஜக்கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டரசாங்கத்தில் பங்கு கொண்டது. இதனுடைய விளைவு- ஏற்கனவே, UNP, SLFP முதலாளித்துவக் கட்சிகளின் பேரினவாதக் கூச்சலுக்குஎதிராக லசச கட்சியை நம்பி இருந்த தமிழ் பேசும்மக்கள், நம்பிக்கை இழந்து, தங்களுக்கென போராட தமிழ்முதலாளித்துவ வர்க்கத்தின் தலைமையில் அணி திரண்டனர், அதேபோல் தென் இலங்கையில் குட்டி முதலாளித்துவ ஜே. வி. பி. போன்ற இயக்கங்கள் வளர்வதற்கு களம் அமைந்தது. தோட்டப் பகுதிகளிலுள்ள தொழிலாள வர்க்கம் தொண்டமான்போன்றோரின் பின் அணிதிரள ஆரம்பித்தனர். 1964ல் லங்கா சமசமாஜக் கட்சியின் காட்டிக்கொடுப்பின் விளைபயன்களே இத்தகைய இயக்கங்கள் செல்வாக்கு பெற வழிசெய்தன.

அதன்பின் 1970ன் காலம் பகுதிகளிலே வடக்கு கிழக்கில் குட்டி முதலாளித்துவ இயக்கங்கள் தோன்ற ஆரம்பித்தன இதே காலகட்டத்தில்தான் சர்வதேசரீதியாக வர்க்கப் போராட்டங்கள் வெடித்துக் கொண்டிருந்தன ஸ்பெயின், கிரீஸ், போர்ச்சுக்கலில்கொடூரமான சர்வாதிகார அரசுகள் தூக்கிவீசப்பட்டன. பிரான்சு, பிரிட்டன் போன்ற நாடுகளில் தொழிலாள வர்க்கம் வேலை நிறுத்தத்தில் இறங்கியிருந்தது. 1975ல். வியட்நாம் போன்றவை காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றி அடைந்துகொண்டிருந்தன. சிறிலங்காவில் வடக்கு கிழக்குப்பகுதியில் அமிர்தலிங்கம் போன்ற தமிழ் தேசிய முதலாளித்துவதலைமையின் காட்டிக்கொடுப்பினல். குட்டி முதலாளித்துவ விடுதலை இயக்கங்கள் வளரத்தொடங்கின,

1970ல் சிறிலங்கா சுதந்திர கட்சி அரசாங்கத்தில் ல ச. ச கட்சியும், இலங்கை ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியும்பங்கெடுத்தன. இதே ல.ச.ச. ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சி ந.ச.ச. (NSSP) அனைத்தும் இலங்கைத்தீவிலே நடைபெற்றுக்கொண்டிருக்கும் யுத்தத்தை ஜனநாயகத்துக்கும் பாசிசத்துக்கும் எதிராக நடக்கும் போராட்டம் என்று திரித்துக் கூறுகின்றன. UNP அரசாங்கம் ஜனநாயக அரசாங்கமாம்! 1948லே இந்தோ-பாகிஸ்தானிய குடியுரிமை பறித்த, 1956ல் தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வந்த, 1972புத்தமத அரசாங்கம் என்று அறிவித்த, தோட்டத் தொழிலாளர்களை நாடற்றவர்களாக்கி நாடு கடத்திய 1977,79,80,81,83லே தமிழ் மக்களுக்கு எதிராக இனக்கலவரங்களை நடத்திய கொழும்பு நகர வீதியில் கேடிகளை திரட்டிக் கொண்டு தமிழ் மக்களை எரித்துக்கொன்ற கும்பலுக்கு தலைமை தாங்கிய பிரேமதேசாவும், இன்றும்1½லட்சம் தோட்டத் தொழிலாளர்களை நாடுகடத்தத் திட்டமிட்டுள்ள ரஞ்சன் விஜேரத்தினாவும் பிரதிநிதித்துவப் படுத்தும் அரசாங்கம் 'ஜனநாயக' அரசாங்கமாம்! ஒடுக்கப்படும் தேசிய இனத்தின்சுயநிர்ணய உரிமைக்காகப் போராடினல் அதுபாசிசமாம் ந ச.ச,ல ச.ச ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியினர் கூறுகின்றனர்கள். பாசிசம என்பது முதலாளித்துவத்தின் கோரவடிவம். தொழிலாள வர்க்க ஸ்தாபனங்கள் அழிக்கப்படும், தொழிலாளர்கள் மிக குரூரமாகஒடுக்கப்பட்டுசுரண்டப்படுவார்கள் குட்டிமுதலாளித்துவ விடுதலைஇயக்கங்கள் ஒன்றை ஒன்று அடித்துக்கொள்வதையும், அழித்துக்கொள்வதையும் வைத்து பாசிசம் என்பது தவறான வரையறையாகும் மார்க்சிசத்திற்கு விரோதமானதாகும்.

சிறிது காலத்திற்குமுன்னர் தென்னிலங்கையிலே 'குட்டி முதலாளித்துவ ஜே. வி.பி. பாசிச இயக்கமாக வளர்ந்து கொண்டிருக்கையில் ஒருபுறம் துப்பாக்கி முனையில் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யும் உரிமையைப் பறிக்கையில், பல தொழிலாளர்களையும், தொழிற்சங்கத் தலைவர்களையும் கொன்று குவிக்கையில் ஜே.வி.பிக்குஎதிராக தொழிலாளர்களைப் பாதுகாக்க ஒரு சுண்டு விரலைக் கூட உயர்த்தவில்லைஇவர்கள் அதேவேளை யு.என்.பி. அரசாங்கம் துப்பாக்கி முனையில் தொழிலாள வர்க்கத்தை. வேலைக்குச் செல்ல நிர்ப்பந்தித்தபொழுது தொழிலாளர்களைப்பாதுகாக்க-புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாள வர்க்கக்கட்சிகளின் ஐக்கியமுன்னணிஒன்று அமைக்க அழைப்பு விடுத்தது. ஆனல் ந.ச.ச, ல.ச.ச, ஸ்டாலினிச கம்யூகட்சிகள் தங்களதுகட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களும்தொழிற்சங்கத் தலைவர்களும்கூடஜே.வி.பியினல்சுட்டு கொல்லப் பட்ட போதும்— தொழிலாளர்களை ஜே வி.பியின் கருணைக்கு விட்டிருந்தனர்,

ஒடுக்கப்படும் தேசியஇனத்தின் போராட்டம் என்ற வகையில் அது நியாயமான போராட்டம். ஆனல் இந்தப் போராட்டத்தில் குட்டி முதலாளித்துவ வர்க்க விடுதலை இயக்கங்கள் என்னதான் தீவிரமாகப் போராடினலும் சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க முடியாது.

1987 காலப்பகுதியில் ஒருபுறம் வடக்கு கிழக்குப்பகுதியிலே வளர்ச்சியடைந்து வந்து கொண்டிருந்த வர்க்கப் போராட்டத்தாலும் UNP முதலாளித்துவ அரசாங்கம் ஆட்டம் கண்டு கொண்டிருந்தது. அப்போது தாதிகள் வேலை நிறுத்தம், தோட்டத் தொழிலாளர் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பியிருந்தன. வளர்ந்து கொண்டிருக்கும் இப்போராட்டத்தைத்தொழிலாள வர்க்கம்கையில்எடுத்து விடும் என்று கருதி அஞ்சித்தான் அப்போதைய ஜனதிபதி ஜெயவர்த்தனே ஏகாதிபத்தியத்திடம் உதவி கோரினர். ஆனல் தாங்கள் நேரடியாகத் தலையிட்ட ால்,இந்திய துணைக்கண்டத்திலே பெரும் வெடிப்பை ஏற்படுத்தி விடும் என்று எண்ணி, தெற்காசிய பிராந்தியத்தில் தனது நலன் காக்கும் போலீஸ்காரனக செயல்படும் இந்திய முதலாளித்துவத்தை தலையிட வைத்தது. அந்த வகையிலே அமெரிக்க ஏகாதிபத்தியம் போட்டுக்கொடுத்த இந்திய இலங்கைஒப்பந்தத்தின் அடிப்படையில் – இந்திய அமைதி கொல்லும்படை அனுப்பி வைக்கப்பட்டது.

12 .ம் பக்கம் பார்க்க

படிப்பகம்

www.padippakam.com



# தமிழீழ மக்களுக்கு எதிரான.....

11 ம் பக்கத் தொடர்ச்சி

இதனை இந்தியாவிலும் இலங்கையிலும்உள்ள ஸ்டாலினிஸ்டுகள்பெரிதும்வரவேற்றனர் அமெரிக்க செனட் சபையில் பசிபிக் ஆசியபிராந்தியத்தின் வெளிவிவகாரக் கமிட்டியின் துணைத்தலைவராக இருக்கும்ஸ்டீபன்சோலார்ஸ் இவ்ஒப்பந்தம் பற்றி தனது செனட் கமிட்டி அறிக்கையில் கூறுகிறார், இஸ்ரேலின் பெருஞ்சிம்பெகினும், எகிப்தின் அன்வர் சதாத்தும் போட்ட கேம்ப்டேவிட் ஒப்பந்தத்தைப்போன்றது என்றும், இதற்காகராஜீவ்-ஜெயவர்த்தனேவுக்கு இந்த ஆண்டின் நோபல் சமாதானப் பரிசு வழங்கப்படவேண்டும் என்றும் சிபாரிசு செய்கிறார்

ஆனால் இந்தியாவில் உள்ள சி.பி.எம், சி.பி.ஐ. ஸ்டாலினிஸ்டுகள் இவ் ஒப்பந்தம் திரிகோண மலைத்துறை முகத்தை அமெரிக்க ஏகாதிபத்தியம் தளம்அமைப்பதைத் தடுக்கவே போடப்பட்டதாகவும் அதன்படிதான் இந்திய அமைதிகொல்லும்படையை அனுப்பியிருப்பதாகவும் கூறினர்; இன்றும் கூறி வருகின்றனர்.

அத்தோடு மட்டுமல்லாமல் தாம் நடத்திய சி.ஐ.டி.யு. 5ஆவது மாநில மாநாட்டில் இந்திய அமைதி கொல்லும் படைக்கு நன்றி அறிவிக்கும் தீர்மானததையும் நிறைவேற்றினர். இந்த ஸ்டாலினிஸ்டுகள்காஷ்மீர்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நசுக்க இந்தியத் தொழிலாள வர்க்கத்தை வி.பி.சிங்குடன் சேர்ந்து யுத்தம் நடத்த அனுப்பி வைப்பார். பாகிஸ்தானில் உள்ள ஸ்டாலினிஸ்டுகள் பெனசிர் பின்னால் பாகிஸ்தான் தொழிலாள வர்க்கத்தை முடித்துப்போடுவர் இதுதான் இவர்களது (சர்வ) தேசியம்!

ஆனால் மார்க்ஸ் அயர்லாந்து தேசிய இனப்பிரச்சினை பற்றிக்குறிப்பிடுகையில் அயர்லாந்தின் சுதந்திரத்துக்காக ஆங்கில முதலாளித்துவத்தை எதிர்த்து ஆங்கிலத் தொழிலாள வர்க்கம் போராடாத வரையில் அதற்கும் விடுதலை கிடைக்காதுஎன்றார். ரஷ்யாவில் போல்சேவிக்குள் ரஷ்ய பேரினத்தால் ஒடுக்கப்படும் சிறிய தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமைக்காக ரஷ்ய பாட்டாளி வர்க்கம் போராட வேண்டியது அதன் புரட்சிகர கடமை என்பதை வலியுறுத்தி வந்தனர். இப்படியான பாட்டாளி வர்க்க சர்வதேசியக்கொள்கையின் அடிப்படையில்வெற்றிகரமான அக்டோபர் புரட்சிக்கு தயார் செய்தனர். இந்த பாட்டாளி வர்க்கசர்வதேசியத்தின் அடிப்படையில் தான் சோசலிசத் தொழிலாளர் கழகம் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் காஷ்மீரி மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகவும் போராடி வருகிறது.

இலங்கையின் வடக்கு கிழக்குப்பகுதிகளில் எல்.டி.டி.ஈ., புளொட், ஈரோஸ். டெலோ, ஈபிஆரஎல்எப் போன்று எத்தனையோ குட்டி முதலாளித்துவவிடுதலைஇயக்கங்கள் தோன்றின. குட்டி முதலாளித்துவ தலைமைகளின் வர்க்கத்தன்மை காரணமாகவும், அரசியல் திவால் தன்மையினாலும் தேசிய சுயநிர்ணய உரிமையை வென்றெடுக்க முடியாது உள்ளது. அந்த வகையில் பி.எல்.ஓ. நிகரகுவா சான்டினிஸ்டாகளும் முதலாளித்துவ குட்டி முதலாளித்துவ வர்க்க தலைமைகளின் வேலைத்திட்டங்களின் வரம்புகளையும், அவர்களின் பிற்போக்குஅரசியலையும் அம்பலப்படுத்தியுள்ளன. இனவெறி சியோனிச (இஸ்ரேல்) அரசைஅங்கீகரிக்கும் ஐக்கிய நாடுகள் சபையின் 242 தீர்மானத்தை பாலஸ்தீன விடுதலை இயக்கம அங்கீகரித்துள்ளது நிகரகுவாவின் சாண்டினிஸ்டாக்கள் போராட்டக்களத்தில் வென்றெடுத்த ஆட்சி அதிகாரத்தைடேனியல்ஓர்டேகா தலைமை இப்போது வாக்கு பெட்டியிலே ஏகாதிபத்தியத்தின பிரதிநிதி சமரோவிடம் பறி கொடுத்துள்ளார்,

ஏனைய அனைத்து குட்டி முதலாளித்துவ தமிழ் தேசிய இயக்கங்களைப் போலவே எல்.டி.டி.ஈ தலைமையும் பிற்போக்கு இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்குஆதரவு அளித்தது. ஆனால் இந்தியஅமைதி கொல்லும் படை தமிழீழ போராளிகளிடமிருந்து முழுமையாய் ஆயுதங்களைபிடுங்க நடவடிக்கை மேற்கொண்ட போதே அதற்கு எதிரான போராட்டத்தை நடத்தியது அந்த சமயம் எல்.டி.டி.ஈ. இலங்கை அரசின் பக்கம் சாய்ந்தது. ஏனைய குட்டி முதலாளித்துவ குழுக்கள் இந்திய முதலாளித்துவத்திடம் சரணடைந்தன.

முன்பு தமிழ் மக்களின் பாதுகாவலனை இந்திய அரசாங்கத்திற்கு மூலாம் பூசிய எல்.டி.டி.ஈ தலைமை இப்போது தமிழ் மக்களின் பிரச்சனையை தீர்ப்பதில் பிரேமதாசா உடனடியாக அக்கறை கொண்டுள்ளார் என பிரகடனம் செய்தது பல இனக் கலவரங்களில் குண்டர்களை திரட்டி தமிழ்மக்களைவெட்டி படுகொலை செய்த யு.என்.பி அரசாங்கத்தின் ஜனாதிபதி பிரேமதாசாதிடீரென்றுதமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் அக்கறை கொண்டவர் ஆகிவிட்டார்.

இந்திய ராணுவம், உலகின் 4வது பெரிய ராணுவம்தமிழ் ஈழத்திலிருந்து அவமானத்துடன் திரும்பும்படி தமிழீழ மக்களின் உறுதியான போராட்டத்தின் காரணமாக நிர்ப்பந்திக்கப் பட்டது. அதனைத் தொடர்ந்து அப் பகுதிகளில் சிறிலங்காபோலிசும் ராணுவமும் தமது படைபலங்களை மீண்டும் குவிக்கத் தொடங்கின.

இலங்கை அரசின் இப்படியான நடவடிக்கைகளுக்கு தமிழீழ மக்கள் பலத்தஎதிர்ப்பை தெரிவித்தனர். பருத்தித்துறையில் மீண்டும் போலீஸ் நிலையம் அமைக்கப்படுவதை எதிர்த்து அப்பகுதி மக்கள் போராட்டம் நடத்தினர். உடனே இலங்கைஅரசுஅதன் தூதுவராக அமைச்சர் ஹமீதை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியது. அவர் அங்கே எல்.டி.டி.ஈ தலைவர் பிரபாகரனுடன்நடத்தியபேச்சுவார்த்தைகளின் பின்னர், பருத்தித்துறை போலீஸ் நிலையம் 48 மணி நேரத்தில்மீண்டும்திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இந்நிலைமை பற்றி லண்டனில் விடுதலைப்புலிகளின்அரசியல் தலைவர்யோகி குறிப்பிடுகையில் ''தமிழீழ பிராந்தியத்திற்குள் இலங்கை ராணுவ முகாம்கள் இருக்கலாம். ஆனால் அவைசட்டம் ஒழுங்கை கவனிக்கும் வேலையில் ஈடுபடக்கூடாது. அது போலிசின் கடமை.ராணுவம் அவசரநிலையின்போதுமட்டும முகாமைவிட்டு வெளியே வரலாம் என்று அறிவித்தார் கிழக்குப்பகுதியில் இலங்கை போலீசாரின் ஆத்திரமூட்டல் நடவடிக்கையைத் தொடர்ந்துஇலங்கை அரசு முழுஅளவிலான இனவாத யுததத்தை தொடங்கியது.

எல் டி.டி.ஈ தலைமையின் இந்த ஊசலாட்ட அரசியல் நிலைப்பாடு அதன் வர்க்கத்தன்மையிலிருந்துஊற்றெடுக்கிறது. தமது 'சொந்த' தொழிலாள வர்க்கத்தை சுரண்டும் வேலைத்திட்டத்தை கொண்டுள்ள இந்த தலைமைகள்,தமிழீழதொழிலாளர்கள் தென்இலங்கையிலும் இந்திய உபகண்டத்திலும் சர்வதேச ரீதியாகவுமஉள்ளஅவர்களது வர்க்க சகோதரர்களுடன் புரட்சிகரமான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைவதை எதிர்க்கின்றனர். தொழிலாள வர்க்கத்தின் சுதந்திரமானஇயக்கவளர்ச்சி பற்றி பீதி அடைகின்றனர். இதனால் ஏதாவது ஒரு முதலாளித்துவ அரசின் பக்கம் சாய்கின்றனர். பிற்போக்கு முதலாளித்துவ ஆட்சியாளர்கள் பற்றி பிரமைகளை உண்டு பண்ணுகின்றனர்.

இந்தியாவில் ஈ.பி.ஆர்.எல்; எப். தலைமையின் முக்கிய உறுப்பினர்களை கொலை செய்தது யார் என்று கண்டுபிடிக்காவிட்டாலும் இது போன்ற சம்பவங்களை காரணம் காட்டி இன்று தமிழீழ மக்களுக்கு எதிராக நடத்தப்படும் இனவாத யுத்தத்திற்கு இந்திய முதலாளித்துவம் ஆதரவு அளிக்கிறது. பாக்ஜலசந்தியில் இந்தியகப்பற்படைகளை நிறுத்தி காயம்பட்ட போராளிகளையும், அகதிகளையும் நடுக்கடலிலே மூழ்கடிக்க இலங்கை கடற்படைக்கு துணையாக கண்காணிப்பு வேலை செய்கின்றது.

இனவாதப் படைகளுக்கு எதிராகவீரதீரமாய் எல்.டி.டி.ஈ அமைப்பு போராட்டம் நடத்தினாலும் அதனுடைய அரசியல் வேலைத்திட்டம் காரணமாக தமிழீழ மக்களின் ஜனநாயக உரிமையான சுயநிர்ணய உரிமையை முழுமையாக வென்றெடுப்பது முடியாதகாரியமாகிவிட்டது மேலும் எல்.டி.டி.ஈ.இன் அரசியல் தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தை பலவீனப் படுத்துவதாக உள்ளது.

இன்றையஉலகமுதலாளித்துவ பொருளாதார நெருக்கடியின் மத்தியில் அனைத்து தேசியவாத வேலைத்திட்டங்களும் திவாலடைந்துள்ளது. இன்று உற்பத்தி முறையானது முன்னெருபோதும் இல்லாத அளவு பூகோளமயப்படுத்தப்பட்டு இருக்கிறது. கம்பியூட்டர், செய்தி தொடர்பு சாதனங்களில் ஏற்பட்ட தொழில் நுட்பப்புரட்சியானது உலகப்பொருளாதாரத்தை மிக இறுக்கமாக ஒன்றிணைத்துள்ளது. ஒரு பொருளின் உற்பத்தியில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தொழிலாளர்களின்உழைப்பு அடங்கி இருக்கிறது. ஒரு பொருளின் பகுதிப்பொருட்கள் பல்வேறு நாடுகளில் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் அவைசந்தைக்குவரும் பொழுது சுங்கவரி, தீர்வை போன்ற தேசிய எல்லைகளுக்குள் தடைகளை எதிர் நோக்குகின்றன. பூகோள மயப்படுத்தப்பட்ட பொருள் உற்பத்தி முறைக்கும் தேசிய எல்லைகளைக்கொண்டஅமைப்புக்கும் இடையிலான முரண்பாட்டை எந்த ஒரு தேசியவாத வேலைத்திட்டத்தின் மூலமும் தீர்க்கமுடியாது.எனவே சர்வதேச ரீதியான மூலதனத்தின் ஆதிக்கத்தை உடைக்க சர்வதேச மூலஉபாயம் தேவைப்படுகிறது. அதற்கு சர்வதேசிய புரட்சிக் கட்சி தேவைப்படுகிறது. அந்த வகையில் 'உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்' என்று மார்க்ஸ், ஏங்கெல்ஸ் 1848ல் விடுத்த அறைகூவல் அன்றையகாலப் பகுதியைவிட இன்று மிக அத்தியாவசியமானதாகவும்' வெளிப்படையான இருக்கிறது. அந்த வகையில் இன்று ஒரு ஒருங்கிணைந்த சர்வதேச புரட்சிக்கட்சியாக நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழு மட்டுமே இயங்குகிறது.

இந்திய துணைக்கண்டத்தில் உள்ள தொழிலாள வர்க்கத்தைப் பிளவுபடுத்த-இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்ததில் பிறப்பித்த-வகுப்புவாத மதவாத அரசு அமைப்புகளுக்கு எதிராகஅன்றைக்குபோராடி கொண்டிருந்த டிராட்ஸ்கிச கட்சியான போல்ஷேவிக் லெனினிஸ்ட் கட்சியின்பாரம்பரியத்தில் இன்று டிராட்ஸ்கிச இயக்கம் தொடர்ந்து போராடி வருகிறது. அவை இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், இந்தியாவில்சோசலிசத் தொழிலாளர் கழகமும் ஆகும்.

இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தமிழீழ-சிறிலங்கா ஐக்கிய சோசலிச குடியரசுகளை அமைக்க போராடுகிறது. பாட்டாளி வர்க்க சர்வதேசியத்திற்காக போராடிய எமது தோழர்களான பீட்டவல,குணபால,கிரேசன் ஜே வி.பி பாசிஸ்டுகளின்தாக்குதலில் உயிர் இழந்த போதும் சிறிலங்கா அரச படையின் தாக்குதலுக்கும், அச்சுறுத்தலுக்கும ஆளான போதும முன்னணி தலைமை தோழர்களை கைது செய்ய தேடுதல் வேட்டை நடத்திய போதுமஉறுதியாகபோராடி வருவது புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகமே. தமிழீழ பிராந்தியத்தில் இருநது இந்திய ஆக்கிரமிப்புப் படைகளும், சிறிலங்கா இனவாத அரச படைகளும் நிபநதனை இன்றிவெளியேறவேண்டும என்றும் போராடி வந்தது. இன்று இனவாத யுத்தத்தை நடத்தும யு.என்.பி முதலாளித்துவ அரசுக்கு ஒரு ஆளேயா, ஒரு சத்தையோ வழங்க வேண்டாமென்று புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகம் இலங்கை தொழிலாள வர்க்கத்துக்கும் ஏழை விவசாயிகளுக்கும்இளைஞர்களுக்கும் கோரிக்கை விடுத்துள்ளது. குட்டி முதலாளித்துவ தலைமைகளிலிருந்து சுதந்திரமாக தமிழ் தொழிலாளர்களையும், இளைஞர்களையும் ஏழை விவசாயிகளையும அணிதிரட்டும் புரட்சிகரமானவேலைத்திட்டத்தை முன் வைத்துள்ளது ஜனநாயக ரீதியில் தேர்ந்தெடுக்கபட்ட தொழிலாளர்விவசாயிகள் சபைகள் (சோவியத்துகள்) அமைக்கவும், சுதந்திரமான பாதுகாப்பு படைகளை அமைக்கவும் அழைப்புவிட்டு உள்ளது. இலங்கை முதலாளித்துவ அரசை தூக்கிவீசி சோசலிசம, ஜனநாயக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கம் அமைக்கப் போராட முன் வரும்படி அழைப்பு விட்டு உள்ளது.

பாகஜலசந்தியல் நிறுத்தியிருக்கும்இந்தியகப்பற்படையை நிபந்தனை இன்றிஉடனே வாபஸ் வாங்கும்படி போராடுமாறும் சிறிலங்கா இனவாத அரசின் இனவாத யுத்தத்திற்கு எதிராக தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தின் வெற்றிக்கு அனைத்து வழிகளிலும் உதவி செய்யுமாறும் சோசலிசத் தொழிலாளர்கழகம் இந்திய தொழிலாளவர்க்கத்தை கோருகிறது. அத்துடன் காஷ்மீரி தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும். ஏனைய ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயக உரிமையை பேணவும், விவசாயிகளின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்கவும், தொழிலாளர்களை எதிர்கொள்ளும் நெருக்கடிகளை தீர்க்கவும் இந்திய உபகண்டத்தில் உலக சோசலிச குடியரசின் பகுதியாக ஐக்கிய உபகண்டசோசலிசக்குடியரசுகளை அமைககப் போராட்டத்தை முன்னெடுக்க வருமாறு வர்க்க நனவு உள்ள தொழிலாளர்களையும் இளைஞர்களையும் அழைக்கிறது. இதற்காக போராடும் நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவுடன் ஐக்கியம் கொண்ட சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் இணையுமாறு அழைக்கிறோம்.

---

10 ம் பக்கத் தொடர்ச்சி

ராஜ்யங்களுக்கும் ராணுவ உதவிகளை நிறுத்து !

ஃ அரசு தொழிலாளர்களுடனும், விவசாயிகளுடனும் ஐக்கியம்! தேசிய மொழி[illegible] இனவாதத்தையும் நிராகரி!

ஃ யுத்த இயந்திரத்தை ஊக்குவிக்கும் தியாகங்களை நிராகரி! எண்ணெய் விலையேற்றத்தை எதிர்கொள்ள உடனடி சம்பள உயர்வுக்கு போராடு! எண்ணெய் நிறுவனங்களையும், யுத்த தொழிற்சாலைகளையும் தேசியமயமாக்கு! யுத்த தொழிற்சாலைகளை பயனுள்ள உற்பத்தி துறைகளாக மாற்று! பென்டகனுக்கான பட்ஜெட்டை ஒழி! அதைப் பயன்படுத்தி வெட்டப்பட்ட சமூக வேலைத் திட்டங்களை புனருத்தாரணம் செய்!

இந்த வேலைத்திட்டத்திற்காக போராடும்படியும சோசலிசத் தொழிலாளர் கழகத்தில் சேர்ந்து அதனை நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் பகுதியாக கட்டி எழுப்புமாறும் அனைத்து வர்க்க நனவுள்ள தொழிலாளர்களையும் நாம் அழைக்கிறோம்.

---

**அனைத்து தொடர்புகளுக்கு**

**Tholilalar Pathai**
**POSTFACH 1609**
**7120 BIETIGHEIM-BISSINGEN**

படிப்பகம்

# தொழிலாளர் பாதை

DM 2,-

★ மாதமிரு இதழ் ★ இதழ் 392 ★ 1990 ஏப்ரல் 19 வியாழக்கிழமை


**உலக தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்!**

★ நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவைக் கட்டியெழுப்பு!

★ உலக ஏகாதிபத்தியத்தையும் ஸ்டாலினிசத்தையும் தூக்கியெறி!

★ உலக சோஷலிச புரட்சிக்கு முன்னேறு!

**மேதினக் கூட்டம்**

கொழும்பு - சித்தம்பலம் ஏ. காடினர் மாவத்த, சரணர் தலைமையக மண்டபம்

( மக்கள் வங்கி தலைமை அலுவலகத்தின் பின்னால் )

புரட்சி கம்யூனிஸ்ட் கழகம்

நான்காம் அகிலத்தின் அனைத்துலக குழுவின் இலங்கை கிளை.

இளம் சோஷலிஸ்ட்டுகள்.

## பதுளை கிளென் அல்பைன் தோட்ட படுகொலை:

# தொழிலாள வர்க்க சக்தியை சிதறடிக்கும் தாக்குதல்

**பதுளை கிளென் அல்பைன் தோட்ட தியனகலே டிவிசனில் ஆயுதப் படைகள் மேற்கொண்ட கொலைகார வேட்டையில் இரண்டு தோட்டத் தொழிலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஏப்ரல் 1 ம் திகதி இரவு 9.30 மணியளவில் 15 பேர் கொண்ட ஆயுதப் படைகள் கும்பலின் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் 9 பிள்ளைகளின் தந்தையான எஸ். மூக்கன் (48 வயது) எம். வேலாயுதன் (26 வயது) என்ற தொழிலாளிகள் உயிரிழந்துள்ளனர்.**

இச்சம்பவம் பற்றி சொல்லப்படுவதாவது:

ஏப்ரல் 10ம் திகதி இரவு9 30 மணிக்கு தோட்ட பக்டரியை காவலில் செய்யும் காவலாளியையும் தாண்டிச் சென்று வானத்தை நடுவழியில் நிறுத்தி விட்டு 15—17 இராணுவத்தினர் நவீன ஆயுதங்கள் சகிதம் குதித்தனர்.

மோகன் சுந்தரம், நடராஜ் என்னும் இருவரையும் கைது செய்வதே அவர்களின் நோக்கமாக இருந்ததாகக் கூறிக் கொள்ளப்பட்டது. முதலில் வேலூர் மோகனை கைது



எம். வேலாயுதன்

செய்து நிலத்தில் போட்டு உழக்கி வந்தனர். இச்சமயத்தில் தோட்டத்துக்கு அருகே உள்ள பாதையால் சென்று கொண்டிருந்த மற்றுமோர் தொழிலாளியை பிடித்து அவருக்கு இராணுவ உடையணிவித்து நடராசாவைப் பிடிக்கப் புறப்பட்டனர்.

இச்சம்பவத்தைப் பார்வையிட வந்த நடராஜை கைது செய்து கட்டி இழுத்துச் சென்றனர். இச்சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட தொழிலாளர்கள், கோவில் மணியையொலித்து கூடினர். இந்தத் தாக்குதலில் ஈடுபட்டுள்ளவர்கள் கள்ளரா அல்லது இராணுவத்தினரா என சரியாக இனங்காணப்படாத நிலையில் மோகனையும் நடராஜையும் வீதியில் இழுத்துச் செல்பவர்கள் கள்ளர் கூட்டத்தினர் என தொழிலாளர்கள் எண்ணினர். இவ்வேளையில் தொழிலாளர்கள் தமது சுய பாதுகாப்புக்காக கல்வீச்சில் ஈடுபட்டனர்.

முதலில் வானத்தில் சுட்ட இராணுவத்தினர் பின்னர் கொலைகார துப்பாக்கிப் பிரயோகத்தில் இறங்கினர். இதில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஐக்கிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தினைச் சேர்ந்த வரும் 9 குழந்தைகளின் தந்தையுமான எஸ். மூக்கனும் (48 வயது) எம் வேலாயுதனும் (26 வயது) கொல்லப்பட்டனர் அதோடு பீ. செலன்பரன் (40 வயது) சே. செல்லம்மா (45 வயது) எம் விஜயகுமார் (22 வயது) படுகாயமடைந்தனர். பதுளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள இம் மூவரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அங்கத்தினர்கள்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உட்பட சகல தொழிற்சங்கங்களின் துரோகத் தலைமைகளும் இந்த படுகொலைகளுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையிலும் ஈடு



எஸ். மூக்கன்

படாத போதிலும் தொழிலாளர்கள் தமது எதிர்ப்பைக் காட்டும் பொருட்டு ஏப்ரல் 11ம், 12ம், 13ம் திகதிகளில் தன்னியல்பாக முன்வந்து வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

தொழிற்சங்கத் தலைவர்கள், எதிர்வரும் மே 6ம் திகதி துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமான விசாரணைக்கு இராணுவ தலைமை அலுவலகத்துக்கு வரும்படி இராணுவத்தினரால் விடுக்கப்பட்ட அழைப்பை ஏற்று சகல நடவடிக்கைகளையும் கைவிட்டுள்ளனர்.

யூ. என். பி. அரசாங்கம் தொழிலாள வர்க்கத்துக்கும் சிறப்பாக தோட்டத் தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக மேற்கொண்டுள்ள இந்த கொலைகாரத் தாக்குதல் யூ. என். பி அரசாங்கத்தின் பலத்தினையன்றி முழு அளவிலான பலவீனத்தையும், நெருக்கடியையும் மீண்டும் ஒரு தடவை வெளிக் கொணர்ந்துள்ளது.

இ. தொ. கா. தொண்டமான் தலைமை இக்கொலைகார அரசாங்கத்தின் பங்காளியாக கலந்துறவாடுகிறது. இ. தொ கா. காங்கிரஸ்களை வ்வரசின் அமைச்சர்களுக்கு விழா எடுக்கும் மகாநாடுகளாக திருப்பி வரும் நிலையில் இக்கொலைகாரக் கும்பல்கள் தோட்டங்களுள் பாய்ந்து விழுந்துள்ளன.

இ. தொ. கா.வின் சமீபத்திய ஹற்றன் மகாநாட்டில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தினர்களால் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரம் இந்த ஆபத்தினை முன்கூட்டியே சுட்டிக்காட்டியது: "இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் இந்த மகாநாடு தோட்டத் தொழிலாளர்கள் மட்டுமன்றி முழுத் தொழிலாள வர்க்கமும் ஏகாதிபத்திய வங்கி, சர்வதேச நாணய அமைப்புக்களின் கொலைகாரத் தாக்குதல்களில் இருந்து தமது தொழில், சேவை, தொழிற்சங்க அடிப்படை உரிமைகளைக் காத்து உறுதியான போராட்ட தீர்மானங்கள் எடுக்க வேண்டிய மிகவும் திக்கமான காலகட்டத்தில் இடம் பெறுகின்றது.

"ஆதலால் இந்தக் காங்கிரசினை அதற்கான ஒரு போராட்ட தயாரிப்புக் காங்கிரசாக பரிணமிக்கச் செய்யும்படியும் தலைமைகள் முதலாளி வர்க்கத்துடனும், யூ. என். பி. அரசாங்கத்துடனும் கொண்டுள்ள எதிர்ப்புரட்சி உறவுகள் அத்தனையையும் ஒரு முடிவுக்குக் கொணரும்படியும் தொழிலாள வர்க்கத்தின் ஏனைய பிரிவினருடனான ஐக்கியத்தினை வலுப்படுத்தும் பொருட்டு தொழிலாள வர்க்க ஐக்கிய முன்னணிக்கு முன் நின்று போராடுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தோட்டத் தொழிலாளர்களை வேண்டுகின்றது."

இதற்கான வேலைத்திட்டமாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அந்த துண்டுப்பிரசுரத்தில் தோட்டத் தொழிலாளர்கள் உள்ளடங்கலாக முழுத் தொழிலாளர் இயக்கத்தினையும் காக்கும் நடைமுறை நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டு அனைத்து தொழிலாளர் அமைப்புக்களையும் கொண்ட ஐக்கிய முன்னணியைக் கட்டி எழுப்பவும் (ஆ) உலக வங்கி—யூ. என். பி தாக்குதல்களுக்கு எதிராக பொது வேலை நிறுத்தத்தினை ஒழுங்கு செய்யவும் தொழிற்படவேண்டும் என தோட்டத் தொழிலாளர்களும், தொழிலாள வர்க்கத்தின் ஏனைய பிரிவினரும் நெருக்க வேண்டும் எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டிக் கொள்கின்றது.' எனக் குறிப்பிட்டது.

இந்த தியனகலே டிவிசன் துப்பாக்கிப் பிரயோகம் நாம் மேலே சுட்டிக் காட்டிய உலக வங்கி—சர்வதேச நாணய நிதியத்தின் எதிர்ப்புரட்சி வேலைத் திட்டங்களின் ஒரு பாகமாகவே இடம் பெற்றுள்ளது.

★ நஷ்டத்தில் இயங்கும் தோட்டங்களை மூடுதல். தோட்டத் தொழிலாளர்களில் சரி அரைவாசியினரை வேலை நீக்கம் செய்தல் ★ சம்பளங்களை வெட்டுதல் ★ வேலையை துரிதப்படுத்தல் எனபன இக்கொடிய ஏகாதிபத்திய வங்கிகளின் திட்டங்களில் முக்கியமானவை

இத்திட்டத்தினை அமுல்செய்டம யூ. என். பி. அரசாங்கத்தில் வேலைத்திட்டத்தினை முன்

(8-ம் பக்கம் பார்க்க )

**வட — கிழக்கில் இருந்து ஆயுதப்படைகளை அகற்று!**

www.padippakam.com



## இந்திய படைகளை வாபஸ் வாங்கி

# புதிய இராணுவ பயங்கரத்துக்கு தயாரிப்பு

ஏப்ரல் 11ம் திகதி பருத்தித்துறை விநாயக முதலியார் வீதியில் யூ. என். பி. அரசின் பொலிசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதுதலும், பருத்தித்துறை, வல்வெட்டித்துறைப் பொலிசாரை அங்கிருந்து வெளியேற்றி அவர்களின் இடத்துக்கு 48 மணித்தியாலங்களுள் புதிய பொலிசாரைத் தருவிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமைக்கும், யூ. என். பி. அரசாங்கத்துக்கும் இடையே ஏற்பட்ட உடன்பாடும் தமிழீழ விடுதலைப் போராட்டம் முகம் கொடுத்துள்ள புதிய பேராபத்தினைச் சமிக்ஞை காட்டுகின்றது.

இந்நாட்களில் ராஜீவ் காந்தியினதும் மற்றும் துரோகிகளதும் கொடும்பாவிகளை இழுத்து, தீமூட்டுவதில் ஆர்வமும் அக்கறையும் காட்டிய ஒடுக்கப்படும் தமிழ் மக்களும், போராளிகளும் சிங்கள இனவாத அரசின் கொடும்பாவிகளை இழுத்து தீமூட்டுவதை ஒத்திப்போடுவது உயிராபத்தானது என்பதை இந்த பருத்தித்துறைச் சம்பவம் அடித்துக் கூறியுள்ளது.

6 00க்கும் அதிகமான பொதுமக்களையும் 600 போராளிகளையும் பலிகொண்டதோடு வீடுகளையும், சொத்துக்களையும் பேரழிவுக்குள்ளாக்கிய போதிலும் உலகின் நான்காவது பெரும் இராணுவம் தான் விரும்பிய தீர்வினை வட—கிழ் மாகாண ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் மீது சுமத்துவதில் வெற்றி கண்டுவிடவில்லை. இதனை தமிழீழ விடுதலைப் புலிகள் தலைவர் 'சன்டே டைம்ஸ்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் பின்வருமாறு குறிப்பிட்டார்; இலங்கையினதும் இந்தியாவினதும் மூலதிட்டம் உண்மையில் இடம் பெற்றதிலிருந்து வேறுபட்டது எல்லாமே பிழைத்துவிட்டன. அவர்களின் சகல திட்டங்களும் சரிந்து போய்விட்டன. இன்றைய நிலைமை அதன் வெளிப்பாடேயாகும்'' (ஏப்ரல் 8)

இந்த இந்திய, இலங்கை இராணுவம் பற்றிய அனுபவத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் மேலும் கூறியதாவது: ''எமது மக்களை இலங்கை இராணுவம் பாதுகாக்கும் என்று நாம் நம்பிக்கை கொள்ள முடியாது. இலங்கை இராணுவத்தையும் இந்திய சமாதானப் படையையும் நாம் நம்பியதால் 25000 மக்கள் கொல்லப்பட்டனர்.''

1987 ஜூலை ஒப்பந்தம் வரை விடுதலைப் புலிகள் கடைப்பிடித்த புரட்சிகர விடுதலை யுத்தம் கைவிடப்பட்டதோடு இந்தக் கொலையாளிகளின் குகைகளின் உள்ளும் வெளியிலும் சமாதான 'பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகின. 1947ல் இலங்கையில் முதலாளித்துவ அரசு தாபிக்கப்பட்டதில் இருந்து இலங்கையில் பூர்த்தி செய்யப்படாத ஜனநாயகப் புரட்சியின் எந்தவொரு பணியையும் இட்டு நிரப்ப யூ. என். பி—ஸ்ரீல. சு க. முதலாளித்துவக் கட்சிகள் தவறியதோடு அவ்வுரிமைப் போராட்டங்களுக்கு எதிராக இரத்தக் களரிகளை ஏற்படுத்தின. நான்கு தசாப்தங்களுக்கு மேலான இந்நாட்டின் பிற்போக்கு முதலாளித்துவ அரசியல் களத்தில் வளர்ந்து, போஷித்து, தலைமைக்கு வந்தவரே இன்றைய ஜனாதிபதி ஆர். பிரேமதாச.

அத்தோடு இலங்கையின் 'தேசிய' முதலாளி வர்க்கம் இந்நாட்டுத் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராகக் கொணர்ந்த இந்தோ—பாகிஸ்தானிய பிரஜாவுரிமைச் சட்டம் முதல் தனிச் சிங்கள சட்டம், குடியரசுச் சட்டம், இந்திய—இலங்கை ஒப்பந்தம் வரையிலான அனைத்தும் ஏகாதிபத்தியவாதிகளின் அனுமதியுடனும், அங்கீகாரத்துடனுமே இடம் பெற்றன. இந்திய—இலங்கை உடன்படிக்கை அமெரிக்க தென்ஆசிய வெளிநாட்டுக் கொள்கை கமிட்டித் தலைவரான ஸ்ரீபன் சொலார்சின் கண்காணிப்பின் கீழேயே இடம் பெற்றது என்பது இதற்கு நல்ல தோர் சான்று.

ஆதலால் இங்கு அனைத்துலக அரசியல் அரங்கின் முக்கிய வர்க்க சக்திகளையும் அவற்றின் ஆதிக்கத்தையும் கழைந்து தள்ளி, தென்னாசிய பிராந்தியத்தில் முக்கிய தேசிய விடுதலைப் போராட்டமாக இடம் பெற்றுவிட்ட தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தினை பிரேமதாசவின் முதலாளித்துவ அரசியல் வழ்க்கையில் இல்லாத 'உண்மை நேர்மை' யை கொண்டு நிர்ணயம் செய்யவும், அதில் நம்பிக்கை வைக்குமாறும் அழைப்பு விடுக்கவும் செய்யும் குட்டி முதலாளித்துவ தேசியவாத வங்குரோத்தினை என்னென்பது?

பிரேமதாச—விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை முன்நிபந்தனை இருந்தாலும் இல்லாவிட்டாலும் 1947ல் நிறுவப்பட்ட இந்த வம்பு இனவாத அரசினை கட்டிக் காப்பது என்ற ஒரே இலக்குடனேயே நடைபெறுகின்றது வடக்கு — கிழக்கில் தேசிய விடுதலை யுத்தத்தால் சிதறடிக்கப்பட்ட குற்றுயிராக உள்ள ஒடுக்கு முறை முதலாளித்துவ அரச இயந்திரத்தினை— ஆயுதப்படைகள், பொலிஸ் நீதிமன்றம், சிறை — மீண்டும் உயிரூட்டுதல், பாசிச ஜே. வி. பி. தலைவர்களை படுகொலை செய்ததோடு அரசினால் நிறுவப் பெற்றுள்ள புதிய ஒடுக்குமுறை அதிகாரங்களை முதலாளித்துவ நெருக்கடிக்கு எதிராக கிளர்ந்து வரும் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக பயன்படுத்துதல், தமிழ் சமம்-இலங்கை ஐக்கிய சோசலிசத் குடியரசு என்ற சுயாதீனமான வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடும் ஒரே தொழிலாள வர்க்க கட்சியான பு. க காவை சிதறடித்தல் என்பன இவற்றில் முக்கியமானவை.

அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையின் பின்னர் நாம் மேலே குறிப்பிட்டுள்ள அரசினைப் புனருத்தாரணம் செய்யும் வேலைகள் ஐந்து நட்சத்திர ஹில்டன் ஹோட்டலில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்ற சமயத்திலேயே ஆரம்பமாகிவிட்டன. பொலிஸ் நிலயங்களை திறத்தல், இராணுவ முகாம்களை புதுப்பித்தல், காரை நகர் கடற்படைமுகாம் விஸ்தரிப்பு என்பன ஏற்கனவே இடம்பெற்றுவிட்டன.

பருத்தித்துறை மோதுதலில் இறங்குவதற்கான சக்தியை வடமராட்சியில் தோல்வியை ஒப்பும் கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்ட படைகள் பெற்றது எப்படி என்ற கேள்வியை ஒவ்வொரு வர்க்கப் போராளியும் எழுப்பியாக வேண்டும். சமசமாஜ— கம்யூனிச — நவசம சமாஜ— இ. தொ கா. தலைவர்கள் இந்திய ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுடன் சேர்ந்து இந்திய — இலங்கை உடன்படிக்கையை ஆதரித்தமையும் மீண்டும் வடக்கு கிழக்கில் 'சட்டமும்—ஒழுங்கும்



வே. பிரபாகரன்

நடவடிக்கைகளுக்கு வழங்கிய மனப்பூர்வமான ஆதரவும் அத்தோடு விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தைக்குச் சென்ற சமரச அரசியலை சாதகமாக்கிக் கொண்டு விடுதலைப் புலிகளை உடனடியாக ஆயுதங்களை ஒப்படைக்கும்படி கோரும் படு பிற்போக்குப் பிரச்சாரத்தினை நடாத்துவதில் முன்நின்றமையும், தொழிலாள ஐக்கிய முன்னணிக்கு எதிரான இவர்களின் நிலைப்பாடும் இதற்கு கைகொடுத்தது.

இந்த தொழிலாள வர்க்க துரோகிகளின் மக்கள் முன்னணி அரசியலை மறுபுறம் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட குட்டி முதலாளித்துவ விடுதலைப் புலிகளின் தலைவர்களில் ஒருவரான அன்டன் பாலசிங்கம் முதலாளித்துவ அரசயடைகளை அமைக்கவும், பலப்படுத்தவும் முன்வந்தார்: ''மாகாண பொலிஸ் படைப் பிரிவுகளை அமைக்கவும் பொலிஸ் அமைப்பில் சேர்ந்து கொள்ள நாம் தயார். மற்றும் குழுக்களும் வரலாம் . . . புலிகள் இயக்கம் இன்று சமாதானத்துக்கும் அரசியல் தீர்வுக்கும் முன்நிற்கிறது . . . பொலிஸ்காரராக தோளோடு தோள் சேர்ந்து வீதியில் செல்ல நாம் தயார்.''

இந்த 'தோளோடுதோள் சேரும்' நடவடிக்கையினால் வடக்கு—கிழக்கில் விடுதலைப் போராட்டம் எதிர் நோக்கியுள்ள பேராபத்துக்கு வீ. எம். வீதி சம்பவங்கள் நல்லதோர் எடுத்துக் காட்டு.

எனினும் இந்த 'தோளோடு தோள்' கூட்டும் நடவடிக்கையை 7 ஆண்டுகளுக்கு மேலாக எதிரிப் படைகளுடன் முகம் கொடுத்துப் போராடிய போராளிகளும், பொதுமக்களும், அங்கீகரிக்கத் தயார் இல்லை. ஆதலால் இதனை ஒரே கல்லில் வென்றுவிட முடியாது. பல்லாண்டு காலமாக எண்ணற்ற தியாகங்களுக்கு மத்தியில் போராடி கெரில்லா தளங்களில் இருந்து பெரும் எதிர்பார்ப்புக்களுடன் வெளியரங்குக்கு வந்துள்ள விடுதலைப் புலிகளும் விடுதலைப் பறவைகளும் இந்த ஒடுக்குமுறை ஒற்றையாட்சி அரசுக்கு பலம் சேர்க்கும் நிலைக்கு எடுத்த எடுப்பில் கரம் உயர்த்தப் போவதில்லை. இந்நிலைக்கு பொது மக்களையும் விடுதலைப் புலிகள் அங்கத்தினர்களையும் கொணர்வதில் பிரபாகரன் தலைமை முகம் கொடுக்கும் பிரச்சினைகளையிட்டு அரசு நன்கு அறியும்.

இந்த பருத்தித்துறை மோதுதல் இடம்பெற்ற மறுநாள் (ஏப்ரல் 12) நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் பேசிய அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறியதாவது:

''வடக்கு—கிழக்கில் அடிமட்டத்தில் சில நச்சரிப்புக்கள் இருந்து வருகின்றன. அவை தீர்க்கப்பட வேண்டியுள்ளது. மூடி மறைப்பதற்கு ஒன்றுமில்லை தமிழீழ விடுதலைப் புலி சாரியாளர்களின் அடிமட்டத்தில் சில அளவுகடந்த ஆர்வம் இருந்து வருகின்றது. அவை எமது கவனத்திற்கு கொணரப்பட்டுள்ளன. அதனால் உடனடியான அக்கறை இருந்து வந்ததோடு சங்கடமான நிலைமையும் தவிர்க்கப்பட வேண்டியுள்ளது.''

அமைச்சர் விஜேரத்னவின் இந்த அறிக்கையும், அன்டன் பாலசிங்கத்தின் அறிக்கைவும் இவ்விருசாராருக்கும் இடையே ஒற்றையாட்சி முறையை ஏற்பது, சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை கைவிடுவது ஆயுதப்படைகளை வடக்கு— கிழக்கில் பலப்படுத்துவது உள்ளடங்கலாக எந்தவொரு விவகாரத்திலும் கருத்து வேறுபாடு கிடையாது என்பதை சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபித்துள்ளது. இவர்கள் கூட்டாகவும் தனித்தும் முகம் கொடுக்கும் பிரச்சினை மேலே குறிப்பிட்ட 'அடிமட்ட' காரியாளர்களையும், இந்திய— இலங்கை ஒப்பந்தம், இந்தியப் படைகளை வெளியேற்றுதல் சம்பந்தமான பிரச்சினைகளில் உறுதியானதும் சமரசமற்றதுமாக நிலைப்பாட்டினைக்கடைப்பிடித்த, இன்னும் கடைப்பிடித்து வரும் வெகுஜனங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொணர்வது எப்படி என்பதே.

ஒரு வருடத்துக்கு மேலாக இடம்பெற்று வரும் அரசு — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளில் 6வது அரசியலமைப்பினை நீக்குதல் சிங்களக் குடியேற்றம் போன்ற பிரச்சினைகளுக்கு தன்னும் தீர்வுகாண பிரேமதாச அரசாங்கம் வாக்குறுதி அளிக்காமை இந்தப் பேச்சுவார்த்தைகளின் பண்பினையும். பிரேமதாசவின் நேர்மையை'யும் அம்பலப் படுத்துகின்றது.

இந்நிலையில் அமைச்சர் விஜேரத்ன குறிப்பிட்ட 'அடிமட்ட' நச்சரிப்புக்களின்' தாக்கம் எந்தளவில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையை சன்டினிஸ்டா டானியல் ஒட்டேகா பாணியில் மக்கள் தீர்ப்புக்கு (தேர்தல்) அடிபணிவதாகக் கூறி வெளிவெளியாக அடிபணியமுடியாதுள்ளது தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை உக்கிரமடையச் செய்த, தீர்வு காணப்படாத ஜனநாயகப் புரட்சியின் பிரச்சினைகளின் உக்கிரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் அமைப்பாளர் ரூபன் 'ஐலன்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ''கடந்த 40 ஆண்டு காலத்தில் திருகோணமலை, மாவட்டத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களின் பொருளாதார அபிவிருத்திற்கு மகாவலி நீரை பயன்படுத்தவில்லை. மேலும் மகாவலி இந்த மாவட்டத்தின் மூதூர் பிராந்தியம் ஊடாக ஓடுகின்றது. ஓடிச் சென்று வீணாக கடலில் கலக்கின்றது. மகாவலி இதனூடாக பெருக்கெடுத்த போதும் தண்ணீர் பற்றாக்குறையால் பெரும் கஷ்டத்தை அனுபவிக்கும் பிரதேசங்களில் மூதூரும் ஒன்று மூதூரில் மக்கள் வன்னிகுடியிருப்பு, நல்லூர், இளக்கநதை பாட்டாளிபுரம் மற்றும் தூரக் கிராமங்களுக்குச் சென்று தங்கள் குடிநீரை கொணர வேண்டியுள்ளது.''

வடக்கு கிழக்கில் வாழும் இலட்சோப இலட்சம் தமிழ் ஏழை விவசாயிகளின் இந்த அடிப்படைப் பிரச்சனையைத் தீர்த்து வைக்க கடந்த 40 ஆண்டுகால 'சுதந்திரத்தின்' பின்னைய ஆட்சியாளர்கள் அடியோடு தவறிய நிலையிலேயே விவசாயிகள் விடுதலைப் போராட்டத்தின் முன்னணிக்குத் தள்ளப்பட்டது மட்டுமன்றி இன்று குட்டி முதலாளித்துவ விடுதலைப் புலிகள் தலைமையை போராட்டத்திலிருந்து விலகி எதிரியுடன் பேச்சுக்கு செல்லும் நெருக்கடிக்கு தள்ளும் நிலைக்கு அவர்களின் அணந்தரளல் அபிவிருத்தி கண்டும் உள்ளது.

பிரேமதாச — விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை இடம் பெற்ற வேளையில் எமது சகாதர ஏடாகிய 'கம்கறு மாவத்த'

படிப்பகம்

www.padippakam.com




உலக முதலாளித்துவ நெருக்கடியும் நான்காம் அகிலத்தின் பணிகளும்

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் முன்னோக்குகளின் தீர்மானம் ஆகஸ்டு 1988

1983 யூலை: தமிழர்கள் எப்படி காட்டிக் கொடுக்கப்பட்டார்கள்

கீர்த்தி பாலசூரிய

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக வெளியீடு

தோட்டத் தொழிலாளரைக் காப்பாற்று!

சோஷலிச வேலைத்திட்டத்திற்காக போராடு!

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அரசியல் குழுவின் அறிக்கை 1988 யூலை 22

தொழிலாளர் பாதை வெளியீடு

விலை ரூ. 2.00

**ஏகாதிபத்தியத்திற்கும், ஸ்டாலினிசத்திற்கும் எதிராக உலகத் தொழிலாளவர்க்கத்தின் சோசலிசப்புரட்சிக்காக அணிதிரட்டும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் வெளியீடுகள்.**

**நாள்தோறும் கூர்மையடையும் உலக ஏகாதிபத்தியத்தின் நெருக்கடிகளில் வெடித்துக் கிளம்பும் வர்க்கப் போராட்டங்களுக்கு ஆயுதபாணியாகுவதற்காக ஒவ்வொரு தமிழ்த் தொழிலாளியும் அவசியம் படிக்கவேண்டிய புத்தகங்கள்.**



# தொழிலாளர் பாதை

நான்காம் அகிலத்தின் அனைத்துலககுழுவின் இலங்கைப்பிரிவான புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் உத்தியோகபூர்வமான பத்திரிகை.

சிங்கள, தமிழ் தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டி உலக சோசலிசப் புரட்சியின் ஒரு அங்கமாக சிறீலங்கா, தமிழீழ ஐக்கிய சோசலிச குடியரசை நிர்மாணிப்பதற்காக எதுவித சமரசங்களுமில்லாமல் போராடும் புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தினால் வெளியிடப்படும் "தொழிலாளர் பாதை" மட்டுமே தமிழ் மொழியில் பிரசுரமாகும் ஒரே ஒரு மார்க்சிசப் பத்திரிகையாகும்.

தொடர்புகளுக்கு

**Tholilalar Pathai**

**POSTFACH 1609**
**7120 BIETIGHEIM-**
**BISSINGEN**


## இந்திய படைகள் வாபஸ் ..

( :-ம் பக்கத் தொடர்ச்சி )

பின்வருமாறு குறிப்பிட்டது ''பிறேமதாச அரசாங்கம் தமிழ் தேசிய இனத்தினரின் மேல் ஒடுக்குமுறையின் புதிய திட்டத்தினை திணிக்கவும், வடக்கு கிழக்கிலும் இலங்கையிலும் தொழிலாளி - ஒடுக்கப்படும் மக்கள் மீது காட்டுமிராண்டித்தனமான தாக்குதலைத் தொடுப்பதற்கான நிலைமையை தயார் செய்யவுமே தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டுள்ளது'' என்றது. அது பிறேமதாசவின் நடிப்பினைப் பற்றிக் குறிப்பிடுகையில் 'யூ. என். பி. தலைவர்களும் அவர்களது ஏஜன்டுகளும் இந்தப் 'பேச்சு வார்த்தை'யின் பின்னணியில் உள்ள தமது இரத்தம் சிந்தும் இலக்குகளை 'சமாதான சில்' ஆடையினால் மூடி மறைக்க முயல்கின்றனர். தமிழர் விரோத எல்லையை கிளறி விட்டு இரத்த ஆற்றின் ஊடாக தமது வர்க்க ஆட்சியை நடாத்தி வந்த சிங்கள முதலாளி வர்க்கத்தின் இன்றைய பிறேமதாச அரசாங்கம் இன்று அதைப்பற்றி ஏதும் அறியாதது போல் தமிழ் தேசிய இனத்தின் 'கஷ்ட நஷ்டங்களை' அறியத்தரும்படி தமிழீழ விடுதலைப் புலிகள் தலைமையைக் கேட்டுள்ளது. விடுதலைப் புலிகள் இன்றைய ஆட்சியாளர்களுக்கு முத்திரை வழங்கும் துரோகப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

''இரு சாராரையும் பேச்சு வார்த்தை மேசைக்கு தள்ளியுள்ளவை வேறு எவையும் அல்ல. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு புத்துணர் ஊட்டி வட-கிழ் மாகாண தமிழ் தொழிலாளர்களதும் தெங்கைக் தொழிலாளர்களதும் ஒன்றுபட்ட போராட்டம் வெடிப்பதும், ஒடுக்கப்படும் மக்களை அதைச் சூழ அணிதிரளும் புரட்சிகர முன்னோடியான நிலைமை வளர்ச்சி கண்டு வருவதும் இவ்விரு சாராருக்கும் அடரும் பீதியை உண்டு பண்ணியுள்ளது''

(தொழிலாளர் பாதை — 8-9-89)

படிப்பகம்

www.padippakam.com



## உலக வங்கி தாக்குதல்களுக்கெதிராக எலுதலுவ தோட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்

யூ. என். பீ. அரசாங்கம் தோட்டப்பகுதியில் நடைமுறைபடுத்தும் பிற்போக்கு உலக வங்கி தாக்குதல்களுக்கெதிராக பதுளை எலதலுவ தோட்ட தொழிலாளர் மார்ச் 5ம் திகதி ஒருநாள் வேலை நிறுத்தம் செய்து நிர்வாகத்திற்கு சவால் விடுத்தனர்.

இப்பிற்போக்கு வேலைத்திட்டத்தின்படி பல தோட்டங்களை ஒன்று சேர்த்து 'கொத்தணி தோட்டங்கள்' நிறுவப்பட்டுள்ளதோடு கொத்தணித் தோட்டங்களின் தொழிலாளர்களுக்கு அவர்கள் வசிக்கும் தோட்டங்களிலேயே வேலை கிடைக்காது அதற்கு பதிலாக பல மைல்களுக்கப்பாலுள்ள தோட்டங்களில் வேலை செய்ய நேரிடும் அவர்கள் பல மைல்கள் நடந்துபோக வேண்டியுள்ளது. மறுபுறத்தில் வேலைத் துரிதப்படுத்தல் நடைமுறை செய்யப்பட்டுள்ளது, ஒரு நாளில் செய்து முடிக்க முடியாத தொகை வேலையை சுமந்தி சம்பளம் அரையாய் குறைக்கப்படும்

சிறிலங்கா கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த ஐக்கிய தோட்ட தொழிலாளர் சங்கம், இ. தொ. கா, ஜ தொ. கா மற்றும் யூஎன்பி தொழிற்சங்கத்தினதும் சகல தொழிலாளர்களும் மார்ச் 5ம் திகதி வேலை நிறுத்தம் செய்தது இப்பிரதான இருதாக்குதல்களுக்கெதிராகவேயாகும்.

இவ்வேலை நிறுத்தத்தால் நெருக்கடியில் தள்ளப்பட்ட தோட்ட நிர்வாகிகளால் கூட்டப்பட்ட பேச்சுவார்த்தையில் பங்கெடுத்த தொழிற்சங்க தலைமைகள் பதுளை தொழிலாளர் காரியாலயத்தின் உத்தியோகத்தர்களுடனும் தோட்ட நிர்வாகிகளுடனும் சமரசமாகி அத்தினமே வேலை நிறுத்தத்தை நிறுத்திவிட்டனர்

தொழிலாளரை வெகுதூரமான தோட்டங்களுக்கு அனுப்புவதை நிறுத்துவதற்கும், வேலை நாளை அரையாக வெட்டுவதை நிறுத்துவதற்கும் நிர்வாகிகள் இணங்கியதாக சங்க தலைவர்கள் அறிவித்தார்கள். ஆனால் இச்சமரசத்தின் மூலம் உலக வங்கியின் திட்டங்கள் ஸ்தம்பிதமடையபோவதில்லை,

உலக வங்கியின் ஆணையின்படி தோட்டப்பகுதியில் வேலை வாய்ப்புகள் சரிபாதியை நாசப்படுத்த யூஎன்பீ அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஆயிரக்கணக்கான ஏக்கர்களை கொண்ட தோட்டங்களை தனியார் துறைக்கு வழங்க முதலாளித்துவ யூஎன்பீ அரசாங்கம் தற்பொழுது இயங்கி வருகிறது. கொடுப்பனவுகளையும், கிழமையின் வேலை நாட்களையும் வெட்ட அது ஆயுத்தமாகிறது.

யூஎன்பீ அரசாங்கத்தின் அமைச்சரான இ. தொ. கா தலைவர் தொண்டமானும், சமசமாஜ, கம்யூனிஸ்ட், ஜ தொ. கா. தலைவர்களும் தொழிலாளரை முதலாளித்துவ யூஎன்பீயின் இத்தாக்குதல்களுக்கு ஆளாக்க இடம் வகுக்கின்றனர். இதற்கு புறம்பாக முதலாளித்துவத்திற்கும் அதன் தாக்குதல்களுக்கும் எதிராக போராட ஓர் புரட்சிகர வேலைத்திட்டத்தை முன்வைப்பது புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமேயாகும்.

உலக வங்கியினதும் யூஎன்பீ அரசாங்கத்தினதும் தாக்குதல்களுக்கெதிராக ஒரு பொது வேலை நிறுத்தத்தை ஆயுத்தப்படுத்த புரட்சி கம்யூனிஸ்ட் கழகம் பிரச்சாரம் செய்கின்றது. பொது வேலை நிறுத்தத்திற்கான தீர்மானமெடுக்க தொழிற்சங்க பிரதிநிதிகளின் மகாநாட்டை கூட்டுவதற்கு பு. க. க. போராடுகின்றது. தோட்டத்தொழிலாளர்கள் தமது சங்கங்களினுள் இவ்வேலைத்திட்டத்திற்கு போராடியவாறு பு. க. க,வின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேண்டும்;

தொண்டமான்—செல்லச்சாமி யூஎன்பீ அரசாங்கத்திலிருந்து வெளியேறவேண்டுமெனவும், சமசமாஜ, கம்யூனிஸ்ட் நவ சமசமாஜ தலைவர்கள் சி. ல. சு. கட்சியுடனும் சி ல. மக்கள் கட்சியுடனும் முன்னெடுத்து செல்லும் மக்கள் முன்னணியை தகர்க்குமாறும், உலக வங்கி வேலைத்திட்டத்திற்கெதிராகவும் யூஎன்பீ அரசாங்கத்தை வெளியேற்றவும் பொது வேலை நிறுத்தத்தை ஆயுத்தப்படுத்த வற்புறுத்தும் படி தொழிலாளரை வேண்டுகின்றோம்.

உலக வங்கி வேலைத்திட்டத்திற்கும் யூஎன்பீ அரசாங்கத்திற்கும் எதிராக போராட தொழிலாளரை அணிதிரட்டாத தலைமைகளை வெளியேற்றி சோஷலிச வேலைத்திட்டத்திற்கும், தொழிலாளர்—விவசாய அரசாங்கத்திற்கும் போராடும் புரட்சிகர தலைமையை கட்டியெழுப்ப புரட்சி கம்யூனிஸ்ட் கழகத்தில் சேரும்படி வேண்டுகின்றோம்.

( 1ம் பக்கத் தொடர்ச்சி )

## பதுளை கிளென் அல்பைன் ....

நான் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சர் காமினி திசாநாயக்கா வெளிப்படுத்துகையில் 'தோட்டத்துறையில் மேலதிகமானவற்றையும் மேலதிக மனித வளத்தினையும் நாசமாக்கி விடுவதற்கான காலம் வந்து விட்டது' எனக் குறிப்பிட்டார்.

உலகச் சந்தையில் ஒரு கிலோ தேயிலைக்கு ரூபா 49 கிடைக்கையில் உற்பத்திச் செலவு 51/2 ஆக உள்ளது உற்பத்திச் செலவில் சுமார் 70 வீதம் சம்பளத்துக்காகச் செலவாகின்றது. எனக் கூறி உலக வங்கித் தாக்குதல்களுக்கு தொழிலாள வர்க்கத்தினை கீழ்ப்படுத்தும் கடைகெட்ட தாக்குதலில் பெருந்தோட்டத் கைத்தொழில் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

உலக வங்கித் திட்டத்தின் படி ஒரு தோட்டப் பக்டரியைச் சுற்றிப் பல தோட்டங்களை இணைக்கும் கொத்தணி தோட்ட முறையும் 'மென்பர'. 'உபரி' பக்டரிகளை மூடுவதும் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது.

இத்திட்டங்களை அமுல் செய்கையில் தொழிலாளர்களிடமிருந்து பலத்த எதிர்ப்பிற்கு முகம் கொடுக்க வேண்டி வரும் என்பதை அரசு நன்கு அறியும் எனவே தான் சமசமாஜ — கம்யூனிச — இ தொ. கா நவ சமசமாஜ மற்றும் தொழிற் சங்கத் தலைவர்களின் துரோக ஆதரவுகளோடு யூ. என். பி. அரசாங்கம் முக்கிய தேயிலை நகரங்களான ஹட்டன், தலவாக்கலை, பஸ்ஸகலியா, பதுளை முதலான இடங்களில் இராணுவ முகாம்களை திணிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

யூ. என். பி. அரசாங்கத்தின் அடக்கு முறைக்கும் பாசிசபக்கள் விடுதலை முன்னணியின் பயங்கரங்களுக்கும் மத்தியிலும் தோட்டங்களிலும், நகர்ப்புறங்களில் தொழிலாளர்கள் போராட்டங்கள் மீண்டும் மீண்டும் வளர்ச்சி கண்டன. 198 ல் ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி பிரேமதாச மக்கள் விடுதலை முன்னணித்தலைவர்களை அரசாங்கத்தில் சேர்த்துக் கொண்டு அவர்களின் கொலைகாரக் கும்பல்களை அரசாங்கப் படைகளுடன் ஒன்றிணைத்து தமது தலைமையின் கீழ் எடுக்க செய்யாத முயற்சியே இல்லை. துரோகத் தலைவர்களின் உதவியுடன் பின்னணிக்குத் தள்ளப்பட்ட தொழிலாள வர்க்கப்போராட்டம், இன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ள உலக வங்கித் தாக்குதல்களின் புதிய சுற்றுடன் பிரமாண்டமான அளவில் வெடித்துக் கிளம்பும் என ஆளும் வர்க்கம் அஞ்சுகின்றது;

தியனகல டிவிசன் தாக்குதல் இப்போராட்டம் வெடிப்பதற்கு முன்னரே தொழிலாள வர்க்கத்தினை சிதறடிக்கும் ஆளும் வர்க்கத்தின் திட்டத்தின் ஒரு பாகமாகவே இடம் பெற்றுள்ளது. இது துப்பாக்கிச் சூட்டின் பின்னர் தோட்டத்துக்கு வந்த இராணுவ அதிகாரி குறிப்பிட்ட 'இரண்டு சாராரிலும் தவறு உண்டு' என்பதை ஏற்றுக் கொள்ளும் பிரச்சினை அன்று.

தோட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள இராணுவப் படைப் பிரிவுகளும், பொலிசாரும் தொழிலாளர்களுக்கு எதிரான இடைவிடாத ஆத்திர மூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. இது இந்த மோதுதல்களுக்கான நிலைமைகளை சிருஷ்டிப்பதே. இதற்கு முன்னர் சம்பியன் தோட்டத் தொழிலாளர்கள் பொலிசாரின் ஆத்திர மூட்டல் நடவடிக்கைகளுக்கு எதிராக கடந்த ஜனவரியில் பலத்த பிரச்சாரத்தில் ஈடுபட்டது தெரிந்ததே.

யூ. என். பி. அரசாங்கத்தின் இறைமைய இராணுவ சர்வாதிகாரத்தின் எதிரில் தோட்டப் புற, நகர்ப்புற தொழிலாளர் இயக்கத்தினை நிராயுதபாணியாக்கும் தலைமைகளுக்கு எதிராக வர்க்க தோழமையின் அடிப்படையில் தொழிலாளர் இயக்கத்தினை பாதுகாக்கும் வேலைத்திட்டத்துக்கும், உலக வங்கி—யூ. என். பி. சதிக்கும் எதிராக பொது வேலைநிறுத்தத்துக்கு தயார் செய்யவும், யூ. என். பியை வெளியேற்றி தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தை கட்டி எழுப்பும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரளுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது;

★ தொண்டமான் — செல்லச்சாமி தலைமையை யூ. என். பி. அரசாங்கத்தில் இருந்து வெளியேறக் கோரு!

★ தொழிலாள வர்க்க ஐக்கிய முன்னணியையும் பாதுகாப்பு படை அணிகளையும் நடவடிக்கை குழுக்களையும் அமை!

★ உலக வங்கி – யூ. என். பி. தயாரிப்புக்கு எதிராக பொது வேலை நிறுத்தத்துக்கு தயார் செய்!

★ தொழிலாளர் – விவசாயிகள் அரசாங்கத்தை நிறுவு!

★ புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தைப் புரட்சிக் கட்சியாக பரிணமம் செய்!

## இந்திய படைகளை ..

(7ம் பக்க தொடர்ச்சி)

இந்திய 'ஜனநாயகம்' பற்றிய பிரபாகரனின் கண்டுபிடிப்பு(1987) அப்பாவித்தனத்திற்கு நல்லதோர் உதாரணம் எனக் குறிப்பிட்ட நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு தனது இந்திய – இலங்கை உடன்படிக்கையும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும் என்ற அறிக்கையில் விடுதலைப் புலிகளின் தவறையும். பாட்டாளி வர்க்கத்தின் பொறுப்பையும் சுட்டிக்காட்டுகையில்;

"11. தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தவறு தேசிய சுயநிர்ணயத்துக்கான கோரிக்கையினை மதிப்பிழக்கச்செய்யவோ அல்லது அத்தகைய ஒரு போராட்டத்தினை உதவாக்கரையான தாக்கி விடவோ இல்லை. மாறாக அது தேசிய ஜனநாயக இயக்கத்தின் தலைவிதி ஒடுக்கப்படும் நாட்டின் தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்துடன் பிணையுண்டு போயுள்ளதையும் மீண்டும் காட்டுகின்றது.

"ஜனநாயக இயக்கத்தின் தீர்வு காணப்படாத ஏனைய சகல பணிகளைப் போன்றே தேசிய சுயநிர்ணயமும் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் மூலம் மட்டுமே அடைய முடியும். உண்மையில் நான்காம் அகிலத்தின் இந்த வரலாற்று முன்நோக்கு, கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கை சிங்கள — தமிழ்வெகுஜனங்களின் அனுபவங்களின் மூலம் துலாம்பகரமான முறையில் நிருபிக்கப்பட்டுள்ளது. கடந்த கால் நூற்றாண்டாகப் பப்லோவாத திரிபுவாதிகளின் அங்கீகாரத்துடன் சமசமாஜ கட்சியினர் இழைத்த சொல்லில் அடங்காத காட்டிக் கொடுப்புக்கள் இல்லையேல் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கும் இலங்கைப் பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்டத்துக்கும் இடையே ஒருபோதும் முறிவு ஏற்பட்டிராது. உண்மையில் 1964ல் சமசமாஜக் கட்சி பண்டாரநாயக்காவின் கூட்டரசாங்கத்தினுள் நுழைந்தமை வர்க்கப் போராட்டம் தேசிய விடுதலைப்போராட்டம் இரண்டினதும் அபிவிருத்தியில் ஒரு வரலாற்று நீர் மேடாக விளங்கிற்று. இந்த வரலாற்று காட்டிக் கொடுப்புக்கு முன்னர் தமிழ் வெகுஜனங்கள் தொழிலாள வர்க்கத்திடமிருந்து தலைமையை எதிர்பார்த்ததோடு பாட்டாளி வர்க்கம் இலங்கை முதலாளி வர்க்கத்தை தூக்கி வீசியதும் தேசிய ஒடுக்குமுறை நீக்கப்பட்டு விடும் என நம்பியிருந்தது. இது 1953 ஹர்த்தால் மூலமும், 1963-64ம் ஆண்டின் 21 கோரிக்கைகள் இயக்கத்தின் மூலமும் சட்ட ரீதியில் பிரத்தியட்சம் ஆக்கியது.

'சமசமாஜக் கட்சி சிங்கள முதலாளி வர்க்க அரசினைப் பேணிய வகையும் ஒடுக்குமுறையை ஸ்தாபன ரீதியாக்கிய அரசியலமைப்புச் சட்டத்தின் அமுலில் நிசமாகப் பங்கு கொண்டதன் மூலம் 1964–72 இடைப்பட்ட காலத்தில் முழு நிலைமையும் மாற்றம் அடைந்தது சமசமாஜக் கட்சியினால் கைவிடப்பட்ட தமிழ் வெகுஜனங்கள் புதிய பாதையை தேடியதோடு முதலாளித்துவ தேசியவாத அரசியலினுள்ளும் ஈர்க்கப்பட்டனர்."

இந்த வரலாற்று பாதையை தமிழ் தேசியக் குழுக்களின் முழுக் காட்டிக்கொடுப்புகளும் துரோகங்களுக்கும் மத்தியில் திரும்பவும் புரட்சிகர தொழிலாளர் கட்சியின் தலைமையில் ஒடுக்கப்படும் மக்களை தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு அணிதிரட்டுவது உடனடிப் பணியாகியுள்ளது. பருத்தித்துறைச் சம்பவம் சுட்டிக் காட்டும் படிப்பினை இதுவே.

இப்பணியினை நிறைவேற்ற நிரந்தரப்புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் தீர்க்கப்படாத ஜனநாயகப் புரட்சியின் பணிகளைத் தீர்க்க தமிழ் ஈழம் — இலங்கை ஐக்கிய சோசலிச அரசுக்காகப் போராடும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினை புரட்சிக் கட்சியாக கட்டி எழுப்புங்கள்.

கொழும்பு — 10, 1 – ஆவது மாளிகாகந்தை ஒழுங்கை, இலக்கம் 90, இடத்தில் வசிக்கும் ஆனந்த வக்கும்புறவினால் மஹரகம நாவலத்தை வீதி, 51 ஆம் இலக்கத்திலுள்ள பியதாச அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்